# தமிழன்
THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 286 பிலவ வருடம், ஆடி மாதம் 10ஆம் திகதி திங்கட்கிழமை (26.07.2021) ஹிஜ்ரி - 1442, துல்ஹஜ் பிறை - 15, 0115886187 - பக்கங்கள் 16

விலை ரூ.30


## நக்கல் நமசிவாயம்

கலியாணம் பண்ணுற மாப்பிள்ளையும் பெண்ணும் வேற வேற கொரோனா தடுப்பூசியள போட்டிருக்கலாமோ... இல்ல தெரியாமத்தான் கேக்குறன்...



## ஆசிரியர் பிரச்சினை தீர்வுக்கு அமைச்சரவைப் பத்திரம் இன்று

•யோ.தர்மராஜ்

அதிபர் மற்றும் ஆசிரியர்களின் சம்பள முரண்பாடு தொடர்பாக இன்று அமைச்சரவைப் பத்திரம் ஒன்று சமர்ப்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிபர் மற்றும் ஆசிரியர்களின் சம்பள முரண்பாடுகளைத் தீர்க்குமாறு கோரி ஆசிரியர்களால் முன்னெடுக்கப்பட்ட இணையவழி மூலமான கற்றல் செயற்பாடுகள் கடந்த 12 ஆம் திகதி முதல் கைவிடப்பட்டிருந்தன.

இதனையடுத்து, கடந்த 19 ஆம் திகதி கல்வியமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தலைமையில் விசேட பேச்சுவார்த்தையொன்றும் முன்னெடுக்கப்பட்டது. எனினும், அது தோல்வியடைந்த நிலையில், 22 ஆம் திகதி 30 ஆசிரியர் சங்கங்களால் கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்ட ... 02



# மாகாண தேர்தலில் சு.க. தனித்துப்போட்டி: கோட்டா - மைத்ரி நாளை முக்கிய சந்திப்பு!



• நமது விசேட செய்தியாளர்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக் சவுக்கும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர், முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால தலைமையிலான குழு வினருக்குமிடையில் விசேட பேச்சு நாளை (27) கொழும்பில் இடம்பெறவுள்ளது.

ஏற்கனவே கடந்த 21 ஆம் திகதி இந்த சந்திப்பை நடத்தத் திட்டமிடப்பட்டது. பின்னர் தவிர்க்க முடியாத காரணங்களால் அது நாளை செவ்வாய்க்கிழமை வரை ஒத்திவைக்கப்பட்டது. அதேசமயம் கடந்தவாரம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும், மைத்ரிபால சிறிசேனவுக்குமிடையில் சந்திப்பொன்றும் நடந்தது. அதில் அவர்கள் இருவர் மட்டுமே கலந்துகொண்டனர்.

அரசுக்குள் பல்வேறு கருத்து முரண்பாடுகளைக் கொண்டுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிட ... 02

## சிறுவர்களை துன்புறுத்துவோருக்கு பாரபட்சமின்றிய தண்டனை அவசியம்

### இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி வலியுறுத்து

• யோ.தர்மராஜ்

சிறுவர்களுக்கு எதிரான இத்தகைய துஷ்பிரயோகத்தினை வெறுமனே எதிர்ப்பதற்கு அப்பால் சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு ஒழுங்கமைக்கப்பட்ட திட்டமொன்று அவசியம். பாதிக்கப்பட்டவர்கள் சிறுவர்கள் என்பதால் குற்றமிழைத்தவர்களின் அந்தஸ்து, பதவிகளைப் பாராமல் சட்டத்தைப் பொறுப்புணர்வுடனும், துரிதமாகவும் நடைமுறைப்படுத்த வேண்டுமென இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார். 02

# கொரோனா நோயாளர் சடுதியாக அதிகரிப்பு

### சமூகத்தில் அதிகமானோர் டெல்ட்டா தொற்றுடன் இருக்கலாமென அச்சம்

•யோ.தர்மராஜ்

நாட்டில் கடந்த சில நாட்களாக கொரோனா தொற்றுக்குள்ளாகும் நோயாளர்களின் எண்ணிக்கையில் சடுதியான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக சுகாதார சேவைகளின் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அடையாளம் காணப்பட்டுள்ள எண்ணிக்கையை விட அதிக எண்ணிக்கையிலான டெல்ட்டா நோயாளர்கள் சமூகத்திற்குள் இருக்கக் கூடும் ... 02

## ரிஷாட் வீட்டில் சிறுமி மரணம்; 35 பேரிடம் வாக்குமூலம்

• நா.தினுஷா

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் வீட்டில் பணிக்கமர்த்தப்பட்டிருந்த 16 வயது சிறுமி தீக்காயங்களுக்குள்ளாகி உயிரிழந்த சம்பவம் தொடர்பில் நேற்று (25) வரை 35 பேரிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் இதுவரையில் கைதுசெய்யப்பட்டுள்ள அனைத்து சந்தேகநபர்களும் இன்று (26) கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

இச்சம்பவத்தில் பிரதான தரகராக கருதப்படும் சங்கர் என்பவரின் வங்கிக் கணக்கு அறிக்கைகள் பெறப்பட்டுள்ளதுடன்... 02

## தொழிலாளர் ஊதியத்தை முறையாக வழங்குக!

### இல்லையேல் போராட்டம் வெடிக்குமென கம்பனிகளுக்கு திகா எம்.பி. எச்சரிக்கை



02

## 14 இலட்சம் எஸ்ட்ராசெனிகா ஜப்பான் அரசினால் நன்கொடை

### இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தகவல்

•யோ.தர்மராஜ்

இலங்கைக்கு எதிர்வரும் சில நாட்களில் ஜப்பான் அரசிடமிருந்து 14 இலட்சத்து 70 ஆயிரம் எஸ்ட்ராசெனிகா தடுப்பூசிகள் நன்கொடையாக கிடைக்கவுள்ளதாக இராஜாங்க அமைச்சர்... 02

## சிறுமி தற்கொலை செய்துகொண்டாரா?

### ஆதாரம் இல்லையென்கிறது அதிகாரசபை

டயகம சிறுமி தற்கொலை செய்துகொண்டார் என்பதற்கான ஆதாரங்கள் எவையுமில்லை என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது. 02

## 11வயது சிறுவனுக்கு டெல்ட்டா தொற்று

03

## சிறார்களை பாதுகாக்க வீதிக்கு இறங்குங்கள்

### கல்வி இராஜாங்க அமைச்சர் பியால் நிஷாந்த அழைப்பு

•எம். கிருஷ்ணா

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் வீட்டில் பணிபுரிந்த நிலையில் தீக்காயங்களுக்கு உள்ளாகி உயிரிழந்த டயகம பகுதியை சேர்ந்த ஹிஷாலினியின் மரணம் தொடர்பில் அரசாங்கத்தினால் எடுக்கக் கூடிய அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு... 02

## இந்தியாவிலிருந்து கடல் வழியாக யாழுக்குள் நுழைந்த இருவர் கைது

### படகோட்டிகளும் தனிமைப்படுத்தப்பட்டனர்



தமிழகத்திலிருந்து சட்டவிரோதமாக இலங்கைக்குள் நுழைந்த 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். தமிழகத்தில் தங்கியிருந்த யாழ்ப்பாணத்தை சேர்ந்த இருவரும், அவர்களை ஏற்றி வந்த அல்லைப்பிட்டியைச் சேர்ந்த இருவருமே இவ்வாறு கைதாகினர்.

யாழ். வைத்தியசாலை வீதியை சேர்ந்த ஒருவரும், அரியாலையை சேர்ந்த ஒருவருமே இந்தியாவிலிருந்து திரும்பினர். அவர்கள் இந்திய மீனவர்களின் படகில் வந்து, பின்னர் அல்லைப்பிட்டி மீனவர்களின்... 02

## மஹாராஜா குழும தலைவர் ராஜமகேந்திரன் காலமானார்



சிரச, சக்தி ஊடக வலையமைப்பின் தலைமை நிறுவனமான கெப்பிட்டல் மஹாராஜா குழுமத்தின் தலைவர் ஆர்.ராஜமகேந்திரன் நேற்று (25) காலமானார்.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையொன்றில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று அதிகாலை அவர் காலமானார்.

கிளி என்று அழைக்கப்பட்ட ராஜமகேந்திரன் 1943 மே 19 ஆம் திகதி பிறந்தவர். எழுபதுகளின் பிற்பகுதியில்.... 02




## சிறுவர்களை...

ஹிஷாலினின் உயிரிழப்பு குறித்து நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறுவர் வன்முறை, சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் சிறுவரை வேலைக்கு அமர்த்துதல் என எந்தப் பெயரில் அழைக்கப்பட்டாலும், அவை குழந்தைகளுக்கு எதிரான வன்முறைச் செயல்களாகும். எனவே, வன்முறையில் ஈடுபடுபவர்களை நிபந்தனையின்றி எதிர்ப்பது பொறுப்பான சமூகத்தின் கடமையாகும். அதையும் மீறி சட்டத்தை அமுல்படுத்த எங்களுக்கு ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட திட்டம் தேவை.

சிறுவர்களுக்கு எதிரான இத்தகைய துஷ்பிரயோகத்தினை வெறுமனே எதிர்ப்பதற்கு அப்பால் சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு ஒழுங்கமைக்கப்பட்ட திட்டமொன்று அவசியம். பாதிக்கப்பட்டவர்கள் சிறுவர்கள் என்பதால் குற்றமிழைத்தவர்களின் அந்தஸ்து, பதவிகளை பாராமல் சட்டத்தினை பொறுப்புணர்வுடனும் , துரிதமாகவும் நடைமுறைப்படுத்தவேண்டும்.

சிறுவர் துஷ்பிரயோகம் குறித்த செய்திகளை அடிக்கடி கடந்தகாலங்களில் வாசித்திருக்கின்றோம். செவிமடுத்திருக்கின்றோம், ஆனால், ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதை தவிர சிறுவர்கள் மீண்டும் அந்த துயரத்திற்குள் சிக்குவதை தடுப்பதற்கான சூழலை உருவாக்குவதற்கான திட்டமிட்ட கலந்துரையாடல்கள் எவையும் இடம்பெறவில்லை. சிறுவர் துஷ்பிரயோகம், சிறுவர் அடிமைத்தனம் போன்றவை சிறுவர்கள் நீண்டகால உளவியல் பாதிப்பு மற்றும் உடல்ரீதியான பாதிப்புகளை எதிர்கொள்ளும் நிலையை உருவாக்குகின்றன. சிறுவர் துஷ்பிரயோகம், பெண்களுக்கு எதிரான வன்முறை, ஒரு சமூகத்தின் சீரழிவாகும் என்பதால், இதுபோன்ற சூழ்நிலைகளில் பெண்கள் மட்டுமல்ல, எல்லோரும் ஒன்றாக இணைந்து செயற்படுவது முக்கியமாகும். இதேவேளை, ஹிஷாலினிக்கு விரைவில் நீதி கிடைக்கும் என்றார்.

## சிறுமி...

சிறுமி தனக்கு என்ன நடந்தது என்பது குறித்து எந்த வாக்குமூலத்தையும் வழங்கவில்லை என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் முடித்த விதானபத்திரண தெரிவித்துள்ளார்.

இன்னொரு நபரே என்ன நடந்தது என வாக்குமூலம் வழங்கினார் என்று மருத்துவர்கள் குறிப்பிட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக சிறுமி தற்கொலை செய்துகொண்டாரா அல்லது கொலை செய்யப்பட்டாரா என்பது நிபுணர்களின் ஆதாரங்களை அடிப்படையாக வைத்தே தீர்மானிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

## 14 இலட்சம்...

சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

எஸ்ட்ராசெனிகா தடுப்பூசி குறித்து மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அச்சம் குறித்து ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலக சுகாதார அமைப்பின் ஆய்வறிக்கைக்கு அமைய எஸ்ட்ராசெனிகா முதல் ஊசி ஏற்றிக்கொண்ட ஒருவருக்கு இரண்டாவது ஊசி பெற்றுக்கொள்வதற்கு 6 மாதங்கள் வரை உள்ளது என்பது மிகவும் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆகவே, இலங்கையில் பெப்ரவரி 15 ஆம் திகதிக்குப் பிறகு எஸ்ட்ராசெனிகா தடுப்பூசியின் முதல் ஊசியை பெற்றுக்கொண்டவர்களே இலங்கையில் உள்ளனர். அவர்களுக்கு இதுவரை 6 மாதம் நிறைவடையவில்லை. யாரும் தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டாம்.

இந்நிலையில், அடுத்த சில நாட்களில், ஜப்பான் அரசிடமிருந்து 14 இலட்சத்து 70 ஆயிரம் எஸ்ட்ராசெனிகா தடுப்பூசிகள் நன்கொடையாகக் கிடைக்கவுள்ளன. இந்த தடுப்பூசிகள் இன்று (நேற்று) அல்லது நாளை (இன்று) கிடைப்பதற்கே ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. எனினும், ஜப்பான் டோக்கியோ நகரில் இடம்பெறும் ஒலிம்பிக் போட்டிகளினால் விமானங்கள் பயணிப்பதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது.

எனினும், எதிர்வரும் சில நாட்களில் குறித்த தடுப்பூசிகள் கிடைக்கப்பெறும். இரண்டாம் தடுப்பூசி வழங்க வேண்டிய அனைவருக்கும் வழங்கப்படும் - என்றார்.

## இந்தியாவிலிருந்து...

படகில் கரையை அடைந்துள்ளனர். அவர்கள் 4 பேரும் தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

**இந்திய ஊடகங்கள் தரப்பில் வெளியான செய்தி விபரம்**

சமீபகாலமாக இலங்கையைச் சேர்ந்த மக்கள் சட்டவிரோதமாக தமிழகம் வந்து தமிழகத்திலிருந்து கனடா செல்வதற்காக முயற்சி செய்து வருகின்றனர். இந்நிலையில் இலங்கை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஹமில்டன் என்பவர் கடந்த ஆண்டு பெப்ரவரி 27ஆம் திகதி சட்டவிரோதமாக தமிழகம் வந்து பின் பெங்களூரில் இருந்து விமானம் மூலமாக கனடா செல்வதற்காக பெங்களூர் விமான நிலையம் சென்றபோது அவர் வைத்திருந்த கடவுச்சீட்டு போலியானது என கண்டுபிடிக்கப்பட்டு அவர் கைதுசெய்யப்பட்டு பெங்களூர் சிறையில் அடைக்கப்பட்டார்.

இவர் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் பிணையில் விடுவிக்கப்பட்டதையடுத்தது இலங்கை தப்பிச் செல்ல தமிழகத்தில் சட்டவிரோதமாகத் தங்கி வந்துள்ளார்.

மேலும், கடந்த 13ஆம் திகதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஸ்ரீராஜ் கனடா செல்வதற்காக சட்டவிரோதமாக படகில் வந்து நாகப்பட்டினத்தில் தங்கியிருந்துள்ளார். ஆனால் கடவுச்சீட்டு பெறுவதற்கு போதிய பணம் இல்லாததால் ஸ்ரீராஜும், பெங்களூரில் இருந்து விடுதலை செய்யப்பட்ட ஹமில்டன் ஆகிய இருவரும் கடந்த 20ஆம் திகதி இரவு நாகப்பட்டிணம் கோடியக்கரையில் இருந்து சட்டவிரோதமாக இலங்கை யாழ்ப்பாணத்திற்கு சென்றுள்ளனர்.

இவர்களை அல்லைப்பிட்டி தீவில் வைத்து இலங்கை கடற்படையினர் கைதுசெய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

தமிழகத்தில் யாருடைய உதவியுடன் தங்கியிருந்தார்கள் என்பது குறித்தும், இலங்கையில் இருந்து இவர்களை தமிழகத்திற்கு சட்டவிரோதமாக அழைத்துச் சென்றவர்கள் குறித்தும், இலங்கை உளவுத்துறை அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டு வருவதுடன், தமிழகத்தில் இவர்களுக்கு அடைக்கலம் கொடுத்த நபர்கள் குறித்து தமிழக உளவுத்துறை அதிகாரிகளால் நாகப்பட்டினம் கடற்கரைப் பகுதியில் தீவிர விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

## மாகாண...

தயாராகி வருகிறது. அதற்கு முன்னர் கட்சியானது அரசிலிருந்து வெளியேறி தனித்து இயங்கவேண்டுமென சுதந்திரக்கட்சியின் மூத்த உறுப்பினர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

இந்த பின்னணியில் நாளை ஜனாதிபதியுடன் நடைபெறவுள்ள சந்திப்பு மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது. தற்போதைய சூழ்நிலையில் அரசிலிருந்து வெளியேறாமல் இறுதிநேரம் தீர்மானத்தை எடுக்கலாமென்பது மைத்ரிபாலவின் யோசனையென அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

## மஹாராஜா...

யாழ்ப்பாணத்திலிருந்து தென்னிலங்கைக்கு வந்த வர்த்தகர் ராஜேந்திரனின் இரண்டாவது மகனே ராஜமகேந்திரன் ஆவார்.

யாழ்ப்பாணம் – மானிப்பாயை பூர்வீகமாகக்கொண்ட ராஜேந்திரன், எழுபதுகளின் பிற்பகுதியில் தென்னிலங்கைக்கு வந்து மகாதேவா என்பவருடன் இணைந்து, வெளிநாட்டு நிறுவனங்களுடன் கூட்டாக இலங்கையில் ஏற்றுமதி – இறக்குமதி வியாபாரத்தில் ஈடுட்டார். அதன் பின்னர் வர்த்தகப் பொறுப்பை ஏற்ற ராஜமகேந்திரன், இறக்கும்வரை வர்த்தகத்தில் கோலோச்சி வந்தார்.

இலங்கை அரசியல்வாதிகள் பலருடன் மிக நெருக்கமான நட்பைக் கொண்டிருந்த அவர், தமது ஊடக நிறுவனங்கள் தாக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் அதற்கெதிராக தைரியமாக குரல் கொடுத்தவராவார்.

அவரின் பூதவுடல் இறுதிக்கிரியைகளின் பின்னர் நேற்று தகனம் செய்யப்பட்டது.



தமிழர்கள் மீதான அரசின் இனப்படுகொலைக்கு நீதி வேண்டுமென வலியுறுத்தி யாழ். மத்திய பஸ் நிலையம் எதிரில் கவனயீர்ப்புப் போராட்டமொன்று நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்டது. கறுப்பு ஜுலை 23 நினைவு நாளை நினைவுகூர்ந்து தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில், இந்தப் போராட்டம் காலை 10 மணி முதல் மு.ப. 11 மணி வரை முன்னெடுக்கப்பட்டது.

## வெலிக்கடைப் படுகொலை நினைவேந்தல் யாழில்

1983ஆம் ஆண்டு ஜூலை கலவரத்தின்போது வெலிக்கடை சிறைச்சாலையில் படுகொலை செய்யப்பட்ட குட்டிமணி மற்றும் தங்கத்துரை ஆகியோரின் 38ஆவது நினைவேந்தல் நிகழ்வு, யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்றது.

யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ்த் தேசியக் கட்சியின் அலுவலகத்தில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது படுகொலை செய்யப்பட்டவர்களது திருவுருவப்படத்துக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு, விளக்கேற்றி அஞ்சலி செய்யப்பட்டது.

குறித்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ந.ஸ்ரீகாந்தா, தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் வல்வெட்டித்துறை நகர சபையின் தவிசாளர் கனகேந்திராசா ஆகியோர் கலந்துகொண்டனர்.

## ஆசிரியர்...

பேரணியொன்றும் முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியானது ஜனாதிபதி செயலகத்திற்கு எதிரில் முன்னெடுக்கப்பட்டதையடுத்து, ஜனாதிபதி செயலாளருடன் பேச்சுவார்த்தை ஒன்றும் நடத்தப்பட்டது. எனினும், அந்த பேச்சுவார்த்தையின் போது, திங்கட்கிழமை (இன்று) அமைச்சரவைப் பத்திரம் ஒன்று சமர்ப்பிக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது.

ஆனாலும், ஆசிரியர்கள் கைவிட்டிருந்த இணையவழி மூலமான கற்றல் செயற்பாடுகள் தொடர்ந்தும் கைவிடப்பட்டிருந்தன.

இந்நிலையிலேயே, ஜனாதிபதி தலைமையிலான அமைச்சரவைக் கூட்டத்தின் போது, அதிபர் மற்றும் ஆசிரியர்களின் சம்பள முரண்பாடுகள் தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இதனையடுத்து, நாளை கல்வி அமைச்சருடன் ஆசிரியர் சங்கங்கள் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளன.

## கொரோனா...

என சுகாதார சேவைகளின் பிரதி பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர், ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படும் கொரோனா நோயாளர்கள் எண்ணிக்கையில் திடீர் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

டெல்ட்டா தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை 68 ஆக உயர்வடைந்துள்ள நிலையிலேயே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படும் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையில் திடீர் அதிகரிப்பு ஏற்பட்டுள்ள அதேவேளை, நாட்டின் ஏனைய பகுதிகளில் கொரோனா வைரஸ் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்பதற்கான ஆரம்ப அறிகுறியாக இது காணப்படுவதாகவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த வாரம் நாளாந்தம் 200 நோயாளர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர் என தேசிய வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இது கொழும்பிலும், மேல்மாகாணத்திலும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கான அறிகுறியாக இருக்கலாம் என அவை தெரிவித்துள்ளன.

புள்ளிவிபரங்களை ஆராய்ந்த சுகாதார தரப்பினர், மே மாத இறுதியிலும் ஜூன் மாத ஆரம்பத்திலும் அல்பா காரணமாக நாளாந்தம் 180 நோயாளர்கள் அனுமதிக்கப்பட்டனர் என தெரிவித்துள்ளனர்.

எனினும் ஜூன் மாத இறுதியில் இந்த எண்ணிக்கை 90 ஆக குறைவடைந்தது என தெரிவித்துள்ள தேசிய வைத்தியசாலை வட்டாரங்கள், எனினும், மீண்டும் சடுதியாக பாரிய அதிகரிப்பு காணப்படுவதாக குறிப்பிட்டுள்ளன.

இந்நிலையில், நாளாந்தம் அதிகரிக்கும் நோயாளர்களின் எண்ணிக்கை குறித்து சுகாதார சேவைகளின் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன கருத்து தெரிவிக்கையில்,

நாட்டில் இதுவரை 68 பேருக்கு டெல்ட்டா திரிபு ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. சந்தேகத்திற்கிடமான அனைத்து மாதிரிகளையும் நாங்கள் ஸ்ரீ ஜயவர்தனபுர ஆய்வுகூடத்திற்கு அனுப்பி வைத்துள்ளோம். எனினும், அதன் முடிவுகள் கிடைப்பதற்கு ஒன்று அல்லது ஒன்றரை வாரங்கள் செல்லும்.

இதேவேளை, நான்காவது அலையின் ஆரம்பத்தில் இருப்பதாக பேசப்படுகின்றன. ஆனால், மூன்றாவது அலை முடிந்தவிட்டதாக நாங்கள் கூறவில்லை. கடந்த வாரங்களில் மூன்றாவது அலையின் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி காணப்பட்ட போதிலும், கடந்த சில நாட்களாக கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையில் சடுதியாக அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

அதேபோன்று, மரணங்களின் எண்ணிக்கையிலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. கடந்த மூன்று வாரங்களின் மரணங்களை நாங்கள் ஆய்வு செய்ததில் உயிரிழந்தவர்களின் அதிக எண்ணிக்கையிலானோர் தடுப்பூசிகளை பெற்றுக்கொளளாதவர்கள் என்பது கண்டறியப்பட்டுள்ளது. அதேபோன்று, தடுப்பூசிகள் பெற்றுக்கொள்ளாதவர்களே தொற்றுக்குள்ளாகி வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுவருகின்றனர் - என்றார்.

இந்நிலையில், நாளாந்தம் அதிகரிக்கும் நோயாளர்களின் எண்ணிக்கை குறித்து சுகாதார சேவைகளின் பிரதி பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமந்த ஹேரத் கருத்து தெரிவிக்கையில்,

68 டெல்ட்டா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமை உண்மையான தரவுகள் இல்லை. இந்த எண்ணிக்கையை விட அதிக எண்ணிக்கையிலான டெல்ட்டா நோயாளர்கள் சமூகத்திற்குள் இருக்கக் கூடும் என தொற்றுக் குறித்து ஆய்வு செய்யும் தரப்பினர் தகவல் தெரிவித்துள்ளனர்.

எனினும், உரிய சுகாதார விதிமுறைகளை முறையாகக் கடைபிடிக்கும்போதே, மற்றொரு கொரோனா அலை உருவாகுவதை தடுக்க முடியும் - என்றார்.

## ரிஷாட்...

அக்கரப்பத்தனை, வங்கி கிளையொன்றிலுள்ள அவரின் கணக்கில் பெருந்தொகைப் பணம் வைப்பிலிடப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார். இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனின் வீட்டில் பணிக்கமர்த்தப்பட்டிருந்த 16 வயது சிறுமி தீக்காயங்களுக்குள்ளாகி உயிரிழந்த சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் பல்வேறு கோணங்களில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த சம்பவத்தில் கைதான பெண் சந்தேகநபர் உள்ளிட்ட ஏனைய சந்தேகநபர்கள் இருவரும் நேற்று முன்தினம் கொழும்பு சட்ட வைத்திய அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தனர்.

அதற்கமைய, அவர்களை தொடர்ந்து தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்த சம்பவம் தொடர்பில் 35 பேரிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. வாக்குமூலங்களில் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்கள் தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பிரதான தரகராக பண்டாரம் என்றழைக்கப்படும் சங்கர் என்பவரின் வங்கிக் கணக்கு தொடர்பில் விசேட விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அந்த விசாரணை அறிக்கையும் கிடைத்துள்ளது. அதற்கமைய, குறித்த நபரினால் அக்கரப்பத்தனை பிரதேசத்திலுள்ள வங்கியொன்றில் கணக்கு ஒன்று முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், அந்த கணக்கில் பெருந்தொகைப் பணம் வைப்பிலப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின்போது ரிஷாட் எம்.பி.யின் வீட்டில் பணிபுரிந்த மற்றுமொரு பெண்ணிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அந்த வாக்குமூலத்துக்கமைய குறித்த பெண் கடந்த 2015 மற்றும் 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் ரிஷாட் எம்.பி.யின் மனைவியின் சகோதரன் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், குறித்த பெண்ணும் சட்ட வைத்திய அதிகாரியிடம் மருத்துவ பரிசோதனைகளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், கைதுசெய்யப்பட்டுள்ள சகல சந்தேகபர்களும் நாளைய தினம் (இன்றைய தினம்) கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். பொரளை பொலிஸார், கொழும்பு தெற்கு சிறுவர் மற்றும் மகளிர் விவகார பணியகம் மற்றும் கொழும்பு தெற்கு குற்றபுலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் தொடர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## தொழிலாளர்...

***க. கிஷாந்தன்***

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு யாரும் இல்லை என நினைக்க வேண்டாம். நாங்கள் இருக்கின்றோம். தொழிலாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். அவர்களுக்கான ஊதியம் உரிய வகையில் வழங்கப்பட வேண்டும். இல்லையேல் தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்குவோம் - என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் தொழில் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியும், பெருந்தோட்டக் கம்பனிகளின் நடவடிக்கைக்கு எதிராகவும் மஸ்கெலியாவில் நேற்று (25) போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாட்சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் சம்பள நிர்ணய சபையில் எடுக்கப்பட்டது. இதற்கமைய தோட்ட நிர்வாகங்கள் சம்பளம் வழங்க வேண்டும். ஆனால், ஒரு சில தோட்டங்களில் 20 கிலோ கிராம் கொழுந்து பறித்தால்தான் ஆயிரம் ரூபா வழங்கப்படும் எனக் கூறப்படுகின்றது. குறிப்பாக மஸ்கெலியா பிளான்டேஷன் இந்த விடயத்தில் உறுதியாக உள்ளது. தோட்டக் கம்பனியின் இந்த போக்கை அனுமதிக்க முடியாது. கொழுந்து உள்ள காலத்தில் 20 கிலோ எடுக்கலாம். இல்லாத காலத்தில் என்ன செய்வது?

ஆயிரம் ரூபாவை வழங்கமுடியாவிட்டால் தோட்டத்தை அரசாங்கத்திடம் ஒப்படைக்கவும். நாங்கள் அரசாங்கத்துடன் பேசி பிரச்சினைகளைத் தீர்க்கின்றோம்.

இரசாயன உர பயன்பாட்டுக்கு திடீரென விதிக்கப்பட்ட தடையால் பெருந்தோட்டத்துறையும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் எதிர்காலத்தில் 15 கிலோ பறிக்க முடியுமா என்றுகூட தெரியவில்லை. எனவே, உரத்தை இறக்குமதி செய்வதற்காவது அரசாங்கம் அனுமதி வழங்க வேண்டும் - என்றார்.

## சிறார்களை...

வருவதாக இராஜாங்க அமைச்சர் பியால் நிஷாந்த தெரிவித்துள்ளார்.

மேலும், சிறுவர்களுக்கும் பாதுகாப்பினை வழங்க நாம் அனைவரும் வீதிக்கு இறங்கிப் போராட வேண்டுமெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நுவரெலியா சினிசிட்டா மண்டபத்தில் நேற்று முன்தினம் (24) இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சர் இதனை தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தாவது,

ஹிஷாலினியின் சம்பவம் போல் பல சம்பவங்கள் வெளிவராமல் இருக்கின்றன. நாம் அனைவரும் ஒன்று கூடி இந்த நாட்டின் எதிர்கால சந்ததியினரை பாதுகாக்க வேண்டும். எமது அமைச்சிற்கு பொறுப்பு உள்ளதா என்பது குறித்து மக்கள் இன்று கவனம் செலுத்துகிறார்கள் .

எனவே, இந்த சிறுமிக்கு நீதியினை நிலை நாட்ட வேண்டுமானால் அல்லது இந்த சிறுமியின் மீது அக்கறை இருந்தால், நாம் அனைவரும் ஒற்றுமையாக கைகோர்த்து நீதியினை பெற்றுக்கொடுக்க ஒன்றிணைய வேண்டும்.

நாம் தினந்தோறும் கால்வாய்கள், வீதிகள் அதிவேக நெடுஞ்சாலை, துறைமுகங்கள், விளையாட்டு மைதானங்கள், விமானநிலையங்கள் அமைத்தல் போன்றவற்றையே பேசிக்கொண்டு இருக்கின்றோம். ஆனால், இந்த நாட்டில் உள்ள சிறுவர்கள் குறித்து ஒருபோதும் பேசுவதில்லை. தொடர்பாடல்கள் தொடர்ந்து காணப்படுமாயின் இவ்வாறு சிறுவர்களை நாம் இன்று இழந்திருக்கமாட்டோம்.

நாம் தொடர்ந்தும் சிறுவர்களின் துன்புறுத்தல், துஷ்பிரயோகங்கள், கல்வி, போஷணை போன்றவற்றை நாம் சற்று தேடிப் பார்க்கவேண்டும். இந்த நாட்டிலுள்ள பெண்களுக்கு சிறந்த தொழில் வாய்ப்பினை பெற்றுக் கொடுக்க வேண்டும். பிரதேசத்திற்கு பொறுப்பான கிராம உத்தியோகத்தர்களுக்கு ஒரு பொறுப்புள்ளது.

ஒவ்வொரு பிரதேசத்தில் உள்ள சிறுவர்கள் மற்றும் பெண்கள் தொடர்பில் பிரதேச செயலகத்துக்கு அறிக்கை ஒன்றை சமர்பித்து அதனை பதிவு செய்து கொள்ள வேண்டும்.

நாட்டில் உள்ள சிறுவர்கள் குறித்து தற்போழுது 9 மாகாணங்களில் புதிய வேலைத்திட்டங்களை ஆரம்பித்துள்ளோம். சிறுவர்கள் தொடர்பாக இலங்கையில் இரண்டு நீதிமன்றங்கள் மாத்திரமே உள்ளன. எதிர்வரும் காலங்களில் அனைத்து மாகாணங்களுக்கும் சிறுவர்கள் தொடர்பான நீதிமன்றங்களை நீதி அமைச்சிடமிருந்து அனுமதி கிடைத்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸினால் எவ்வித அபிவிருத்திகளையும் மேற்கொள்ள முடியாது. நாம் கால்வாய்களுக்கும் வீதிகளுக்கும் பாதுகாப்பு வழங்குவது போல், இந்த நாட்டின் சிறுவர்களுக்கும் பாதுகாப்பினை வழங்க நாம் அனைவரும் வீதிக்கு இறங்கி செயற்பட வேண்டுமென குறிப்பிட்டார்.

# இன்றைய ராசி பலன்

**நாள்: 26.07.2021 திங்கட்கிழமை**

**ஜோதிடர் நற்பவி**

**தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141**

**மேடம்** பிறரின் விடயங்களில் தலையீடு வேண்டாம். வணிகத்தில் புதிய வாய்ப்புகள் கிடைக்கும். பணிகளில் சிறப்பும், இல்லத்தில் மகிழ்வான சூழ்நிலையும் உண்டாகலாம்.

**ரிஷபம்** வியாபாரம் விரிவடையும். நிறைவடையவேண்டிய வேலைகள் ஆரம்பமாகும். உடல்நலம், பண விடயங்களில் கவனம் செலுத்தப்படலாம்.

**மிதுனம்** பணியிடங்களில் சிறிய பிரச்சினைகளும் வேலைத்தள மாற்றங்களும் நடைபெறலாம். கல்வியில் கவனம் தேவைப்படும்.

**கடகம்** நிதி வரவுகளின் நடைமுறையில் கவனம் தேவைப்படும். இல்லத்திலும், பணியிடங்களிலும் அமைதியை கடைப்பிடித்தல் நல்லது.

**சிம்மம்** பணிகளில் முயற்சியும், வேகத் திறனும் பதவியில் மேல்நிலையில் இருப்பவர்களின் பாராட்டுதலுக்கு உள்ளாகும். தம்பதியரிடையே உறவுகளில் நல்ல நிலை இருக்கும்.

**கன்னி** கூட்டுத்தொழில் சிறப்புறும். பணியிடங்களில் வேலைகள் முழுமை பெறும். இல்லத்தினரின் உறவுநிலை நன்மை தரும்.

**துலாம்** உங்கள் எண்ணங்களுக்கு முதலிடம் தருவது நன்மை. வியாபார பொறுப்புகளில் சீராக்கம் தேவைப்படலாம்.

**விருச்சிகம்** தொழில்நுட்பக் கல்வியில் கவனம் தேவைப்படும். தம்பதியர் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்தல் நன்மை. வேலைத்தளங்களில் சக பணியாளர்களிடம் கவனம் தேவைப்படலாம்.

**தனுசு** அரசாங்க பணியாளர்களுக்கு பதவியில் மேல்நிலை ஏற்படலாம். காணி/வீடு வாங்கும் சூழல் உருவாகும். வேலை தேடுவோருக்கு நன்மையான செய்தி கிடைக்கப் பெறலாம்.

**மகரம்** பிள்ளைகளின் உடல்நலத்தில் கவனம் தேவைப்படலாம். அரசாங்க பணிகளில் உள்ளோர் கவனத்துடன் செயலாற்றுவது நன்மை.

**கும்பம்** வியாபார பிரச்சினைகள் நீங்கும். பணிகளில் வேலைத் திறனுக்கு மதிப்பு கிடைக்கும். இல்லத்தில் அனைவரின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**மீனம்** சிறிய விடயங்களிலும் கவனம் தேவைப்படும். வழக்குகளின் பிரச்சினை குறைய இறைவணக்கம் நன்மை தரும்.

## தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 149 பேர் கைது

நாட்டில் பொலிஸாரினால் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புகளின்போது தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் 149 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்படுகையில்,

அதற்கமைய, தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் இதுவரையில் 52 ஆயிரம் பேர் வரையில் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும். தனிமைப் படுத்தல் சட்டம் நடைமுறைப்படுத் தப்பட்ட நாளிலிருந்து 46 ஆயிரம் பேர் வரையிலானோருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது.

மேலும் 6 ஆயிரம் பேருக்கு எதிராக வழக்கு தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதேபோன்று மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்துத் தடை மீள் அறிவித்தல்வரை தொடர்ந்து நடைமுறையில் இருக்கும். நேற்று முன்தினம் மேல் மாகாணத்துக்கான 13 நுழைவாயில்களில் முன்னெடுக்கப்பட்டுவரும் வீதித்தடைகளில் 7 ஆயிரத்து 644 பேர் பரிசோதனைக்கு உட்படுத் தப்பட்டுள்ளனர். அவர்கள் வருகை தந்த 4 ஆயிரத்து 120 வாகனங்கள் பரிசோதிக்கப்பட்டுள்ளதுடன், 150 பேர் எச்சரிக்கப்பட்டு திருப்பி அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் மாகாண போக்குவரத்து தடையை மீறியமையின் காரண மாக அவர்கள் திருப்பியனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இன்றி லிருந்து முகக்கவசம் அணியாதவர்கள் மற்றும் முகக்கவசங்களை முறையாக அணியாதவர்கள் குறித்து தொடர்ந்து சுற்றிவளைப்புகளை முன்னெடுக்கப்படவுள்ளன. குறிப்பாக, கொழும்பு நகரம் உள்ளிட்ட மேல் மாகாணத்திலேயே இந்த சோதனை நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளன.

## கம்பஹாவில் 24 மணித்தியாலங்களில் 492 பேருக்கு கொரோனா தொற்று

கம்பஹா மாவட்டத்தில் நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் 492 பேர் கொரோனா தொற்றுக்குள்ளானதாக அடையாளங்காணப்பட்டுள்ளனர். கம்பஹா சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்துக்குட்பட்ட பகுதியில் மாத்திரம் 69 பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

மேலும், மீரிகமவில் 64 பேரும் ஜாஎலவில் 53 பேரும் மஹர, பியகம, சீதுவ, களனி ஆகிய பகுதிகளில் முறையே 51, 50, 41, 36 பேரும் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

அத்துடன், அத்தனகல்லவில் 34 பேரும் வத்தளையில் 27 பேரும் மினுங்கொடையில் 24 பேரும் கொரோனா பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். கொவிட் - 19 மூன்றாவது அலையில் கம்பஹா மாவட்டத்தில் 60 ஆயிரத்து 967 பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளதாக மாவட்ட சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்றுக்காலை ஆறுமணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் 288 பேர் தனிமைப் படுத்தல் மத்திய நிலையங்களுக்கு அனுப்பிவைக்கபட்டதுடன் 165 பேர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, 12 ஆயிரத்து 890 பேர் வீடுகளில் தனிமைப்படுத்தப் பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## பிக்குகள் நால்வருக்கு கொரோனா தொற்று

காலி, வத்துகெதர விகாரையில் பிக்குகள் நால்வர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர். இதன் காரணமாக மேலும் ஐந்து பிக்குமாரை அதே விகாரையில் தனிமைப்படுத்துவதற்கு பலபிட்டிய பொதுச் சுகாதார அதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை, தொற்றுக்குள்ளான பிக்குகள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு மீண்டும் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் பொதுச் சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

## மடுல்சீமயில் 18 பொலிஸ் அதிகாரிகளுக்கு கொரோனா

மடுல்சீம பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் 18 அதிகாரிகளுக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதாக பொதுச் சுகாதார அதிகாரிகள் நேற்று தெரிவித்தனர்.

இதன் காரணமாக மடுல்சீம பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட 35 பேரை தனிமைப்படுத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

பொலிஸாருக்கு கொவிட் - 19 தொற்று நோய் அறிகுறிகள் தென்பட்டதையடுத்து பொதுச் சுகாதார அதிகாரிகளால் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து 18 பேருக்கு தொற்று ஏற்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியை அவரது உத்தியோகபூர்வ இல்லத்திலும் ஏனைய அதிகாரிகளை அவரவர்களது இல்லங்களிலும் தனிமைப்படுத்த சுகாதாரப் பிரிவினர் உடனடியாக நடவடிக்கை எடுத்தனர்.




## சீனர்கள் 5,300 பேருக்கு சினோபார்ம் தடுப்பூசிகள்



இலங்கையில் பல்வேறு பணிகளில் ஈடுபட்டுள்ள சீனப் பிரஜைகள் 2 ஆயிரத்து 865 பேருக்கு முதலாம் கட்ட சினோபார்ம் தடுப்பூசிகள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் 2 ஆயிரத்து 435 சீனர்கள் இரண்டு தடுப்பூசிகளையும் ஏற்றிக்கொண்டுள்ளதாக மருந்து உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, 3 இலட்சத்து 6 ஆயிரத்து 622 பேருக்கு நேற்றுமுன்தினம் சினோபார்ம் தடுப்பூசிகளின் முதலாவது டோஸ் ஏற்றப்பட்டுள்ளன.

மேலும், சினோபார்ம் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் நேற்று 35 ஆயிரத்து 720 பேருக்கு ஏற்றப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் வரை 3 இலட்சத்து 85 ஆயிரத்து 885 பேருக்கு கொவிசீல்ட் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் ஏற்றப் பட்டுள்ளது.

அத்துடன், இதுவரை ஒரு இலட்சத்து 59 ஆயிரத்து 81 பேருக்கு ஸ்புட்னிக்வீ தடுப்பூசியின் முதலாவது டோஸ் பெற்றுக்கொடுக்கப் பட்டுள்ளதாகவும் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும், 14 ஆயிரத்து 503 பேருக்கு ஸ்புட்னிக்வீ தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் ஏற்றப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டில் நேற்றுமுன்தினம் வரை 6 இலட்சத்து 33 ஆயிரத்து 198 பேருக்கு மொடர்னா தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது.

## கொரோனா தொற்றுக்குள்ளான 51 சிறுவர்கள் ரிஜ்வே வைத்தியசாலையில் கடந்த வாரம் அனுமதி




கொழும்பு ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் கடந்த வாரத்தில் மாத்திரம் கொரோனா தொற்றுக் குள்ளான 51 சிறுவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சிறுவர் நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித் துள்ளார்.

இதேவேளை, நேற்று முன்தினம் மாத்திரம் கொரோனா தொற்றுக்குள்ளான 12 சிறுவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய, சிறுவர்களுக்கு கொரோனா தொற்று அதிகரித்து வருவதாகவும், தடுப்பூசிகள் பெற்றுக்கொள்ளாதவர்கள் தமது குழந்தைகளை மிகவும் பாதுகாப்பாக கவனித்துக்கொள்ளுமாறும் அவர் கோரியுள்ளார்.

## நாட்டில் 60 வயதுக்கு மேற்பட்ட 55 வீதமானோருக்கு தடுப்பூசிகள்

நாட்டில் 60 வயதுக்கு மேற்பட்ட 55 வீதமானோருக்கு கொவிட் - 19 தடுப்பூசிகள் பெற்றுக்கொடுக்கப் பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதனடிப்படையில் எதிர்வரும் ஓகஸ்ட் மாத இறுதிக்குள் 60 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசிகள் பெற்றுக் கொடுக்கப்படுமென இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அடுத்த மாதம் 80 இலட்சம் தடுப்பூசிகள் நாட்டுக்குக் கிடைக்கப் பெறவுள்ளதாகவும் அவற்றை 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட் டுள்ளார்.

தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்ளாத தன் காரணமாகவே மரணங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## பேருவளையில் 11 வயது சிறுவனுக்கு டெல்ட்டா

பேருவளை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்துக்குட்பட்ட பகுதியில் 11 வயது சிறுவன் டெல்ட்டா தொற்றுடன் அடையாளங் காணப்பட்டுள்ளதாக பொதுச் சுகாதார அதிகாரி ஆர்.ஜே.சிங்கபாகு தெரிவித்துள்ளார்.

ஹிரிகல்கொடெல்லவில் வசிக்கும் பாடசாலைச் சிறுவன் ஒருவனுக்கே தொற்று ஏற்பட்டுள்ளது. இந்தச் சிறுவனை காலி கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதித்துள் ளதாக சுகாதார அதிகாரிகள் தெரி வித்தனர்.

## டெல்ட்டா தொற்று ஒருமாதத்தில் தீவிரமடையும் அபாய நிலை

### விசேட வைத்திய நிபுணர்கள் சங்கம் எச்சரிக்கை

எதிர்வரும் ஒரு மாத காலத்திற்குள் நாட்டில் பிரதான வைரஸ் பரவலாக டெல்ட்டா வைரஸ் பிறழ்வு மாறும் அபாயமுள்ளதாக விசேட வைத்திய நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் டொக்டர் லக்குமார் பெர்னாண்டோ கூறியுள்ளார்.

உலகின் ஏனைய நாடுகளில் தற்போது டெல்டா வைரஸ் பரவி வருவதை அடிப்படையாகக்கொண்டு இதனை கூற முடியுமென விசேட வைத்திய நிபுணர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போது நாட்டில் முன்னெடுக்கப் படும் தடுப்பூசி திட்டத்தில் திருப்தி அடைந்தாலும், தடுப்பூசியை முன்னுரிமை அடிப்படையில் வழங்குவதில் தொடர்ந்தும் சிக்கல் காணப்படுவதாக சங்கம் குறிப்பிட்டுள்ளது.

ஒவ்வொரு தடுப்பூசி வகையையும் மாகாண மட்டத்தில் வழங்குவதற்கு பதிலாக, அதன் செயற்றிறனுக்கமைவாகவும் அதிகபட்ச வயதை கருத்திற் கொண்டும் உலக நடைமுறைகளுக் கமைவாக வழங்குவதே உசிதமானதெனவும் விசேட வைத்திய நிபுணர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, நாளாந்த தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதன் காரணமாக மீண்டும் கட்டுப்பாடுகளை இறுக்கமாக்க நேரிடும் என சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

நாட்டில் டெல்ட்டா பிறழ்வு பரவிவரும் நிலையில் மிகவும் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும் என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் அறிவுறுத்தியுள்ளார்.

இதனிடையே, நாளாந்தம் அடையாளம் காணப்படுகின்ற கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக நோய் கட்டுப்பாடு, ஆரம்ப சுகாதார சேவை இராஜாங்க அமைச்சர் விசேட வைத்திய நிபுணர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே சுட்டிக்காட்டியுள்ளார்.



தமிழன் THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/thamilaneditor@gmail.com
2021, ஜூலை 26ஆம் திகதி, திங்கட்கிழமை

# சிறுவர்களை பாதுகாக்க ஒன்றிணையவேண்டிய நேரம்!

நாட்டில் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளை நிறுத்தவேண்டுமென பரவலான குரல் எழுப்பட்டுவருகிறது.

ரிஷாட் எம்.பியின் இல்லத்தில் சிறுமியொருவர் தீக்காயங்களுக்குள்ளாகி மரணமடைந்ததையடுத்து, சிறுவர்கள் மீதான சமூகத்தின் பாதுகாப்பு பெரிதும் உணரப்பட்டுள்ளது.

நாட்டில் 16 வயதுவரை பிள்ளைகளுக்கான கல்வி கட்டாயமாக ஆக்கப்பட்டுள்ளது. அது தொடர்பாக பிரதேச அலுவலகத்தில் காணப்படும் அதிகாரிகள் அதாவது சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் என்று பலர், குடும்பங்களில் பின்தொடர்தலை மேற்கொண்டு பாடசாலை கல்வியிலிருந்து விலகிச்செல்லும் மாணவர்களை பாடசாலையில் இணைப்பதற்கு பாடசாலை சமூகத்துடன் பணியாற்ற வேண்டியவர்களாக காணப்படுகின்றனர்.

இலங்கையில் 1956ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க பெண்களையும் இளம் ஆட்களையும் பிள்ளைகளையும் தொழிலுக்கு அமர்த்துதல் சட்டத்திற்கு அமைவாக பொது நன்மைக்காக 16 வயதுக்கு மேற்பட்டதும் 18 வயதுக்கு இடைப்பட்டதுமான ஆட்களை தொழிலுக்கு அமர்த்தலாம். ஆனால், அது தொடர்பாக தொழில் ஆணையாளருக்கு அறிவித்து அவசரநிலை தொடர்பாக அறிவித்த பின்னரே அதனை செய்யமுடியும்.

இதே சட்டத்தில் பாடசாலைக்கு செல்வதை தடுப்பதாக அல்லது உடலுக்குப் பங்கம் விளைவிக்கும் தொழிலில் சிறுவர்களை வேலைக்கு அமர்த்த முடியாதென சட்டம் தெளிவாகக் கூறுகின்றது.

மறுபக்கம், தற்போதைய கொரோனா சூழலில் மக்கள் பொருளாதார ரீதியாக மிகவும் பின்தள்ளப்பட்டு வாழ்வாதாரத்தை இழந்து காணப்படும் சூழலில் குடும்ப மற்றும் பெண்கள் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துள்ள நிலையைக் காணமுடிகின்றது. இந்த மாதத்தில் ஹிஷாலினியின் வழக்கு உள்ளடங்கலாக மொத்தம் 6 சிறுவர்களுக்கெதிரான வன்முறைகள் தொடர்பான வழக்குகள் பதிவாகியுள்ளன.

15 வயது சிறுமி இணையவழியில் விற்பனைசெய்யப்பட்ட கொடுமை, 16 வயது சிறுமி சட்டவாக்கத்துறை பிரதிநிதியின் வீட்டில் வேலைக்கு அமர்த்தப்பட்ட நிலையில் தீக்காயங்களுடன் மரணம், 14, 12 வயது சொந்த மகள்களை வன்புணர்வுக்கு உட்படுத்திய 36 வயது தந்தை, 13 வயது நாவலப்பிட்டியைச் சேர்ந்த சிறுமி அவளது 7 வயதிலிருந்து சொந்தத் தகப்பன் உட்பட பலரினால் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளமை, கம்பஹா 13 வயது சிறுமியை துஷ்பிரயோகம் செய்த குற்றத்திற்காக ஒரு விகாரையின் தலைமைத் துறவி உட்பட நான்கு நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளமை போன்றவற்றை விசேடமாக குறிப்பிடலாம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரம் கடந்த 6 மாதங்களில் 14 சிறுவர்கள் மீது பாலியல் துஷ்பிரயோகம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. மேலும், 63 சிறுவர்களுக்கு எதிராக வன்முறைச் சம்பவங்கள் மாவட்டத்திலுள்ள 12 பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இவை அனைத்தும் நம் நாட்டில் இம்மாதத்தில் இடம்பெற்ற கொடுமைகள்.

சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை மற்றும் பெண்கள் சிறுவர்கள் நலன் பொலிஸ் பிரிவின் கட்டமைப்பும் சிறுவர் மீதான வன்முறை முறைப்பாடுகள் தொடர்பான பாரபட்சம் காட்டாமல் நியாயம் கிடைப்பதற்கு கட்டாயம் நீதியுடன் செயற்படவேண்டும். பயணக் கட்டுப்பாடு அமுலில் இருந்த காலப்பகுதியில் சிறுவர் தொடர்பான அதிகூடிய வன்முறை இடம்பெற்ற போதும் மேற்குறிப்பிட்ட கட்டமைப்புகள் எதுவும் சீராகவும் வினைத்திறனுள்ள முறையிலும் தங்களது கடமைகளை நிறைவேற்றவில்லை என்ற விமர்சனங்கள் எழாமல் இல்லை.

சிறுவர்கள் தொடர்பான பாரிய வன்முறைகள் தொடர்ச்சியாக இடம்பெற இந்த கட்டமைப்புகளது வினைத்திறனற்ற செயற்பாடுகள் ஒருவகையில் வழிவகுத்துள்ளன.

இந்த நிகழ்வின் பின்னரேனும் இந்தக் கட்டமைப்புகள் அவர்களது கடமைகளை சரியாக வினைத்திறனுள்ள வழியில் பாதிக்கப்பட்டவருக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்கக்கூடிய வகையில் செய்யவேண்டும்.

அதற்கான செயற்றிறன்மிக்க பொறிமுறைகளை உருவாக்கி, நீதித்துறை சார்ந்த கட்டமைப்பில் சிறுவர்கள் சார்ந்து கையாளப்படும் வழக்குகளை காலதாமதமில்லாமல் விரைவாக விசாரணைகளை மேற்கொண்டு தண்டனைகளை வழங்கக்கூடிய செயல்முறைகளைக் கொண்டுவர வேண்டும். துரிதப்படுத்தப்பட்ட செயன்முறையை நடைமுறைப்படுத்தி விரைவாக நீதியைப் பெற்றுக்கொள்வதற்கு உதவ வேண்டும். இவ்வாறு செய்தால் மாத்திரமே சிறுவர் துஷ்பிரயோகத்தையும் அவர்களுக்கெதிரான வன்முறைகளையும் இலங்கையில் குறைக்க முடியும்.

கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியில் சிறுவர்களுக்கு எதிரான பாதிப்புகள் ஆபத்தான கட்டத்தில் உள்ளதாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் புதிய அறிக்கைகளினூடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சிறுவர்களை கடத்திச் செல்லுதல், சிறுவர்களுக்கு எதிரான பாலியல் துஷ்பிரயோகம், சிறுவர் தொழிலாளர்கள் உள்ளிட்ட செயற்பாடுகள் கொவிட்-19 வைரஸ் பரவலுக்கு மத்தியிலும் கணிசமான அளவு அதிகரித்துள்ளமை தெரியவந்துள்ளது.

2020ஆம் ஆண்டு யுத்த மற்றும் வன்முறைச் சம்பவங்களினாலும் 19 ஆயிரத்து 379 சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் வருடாந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. சுமார் 8 ஆயிரத்து 400 சிறுவர்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. 2020ஆம் ஆண்டில் மாத்திரம் குறித்த எண்ணிக்கை பதிவாகியுள்ளது. ஆப்கானிஸ்தான், கொங்கோ இராச்சியம், சோமாலியா, சிரியா, யேமன் ஆகிய நாடுகளில் கூடுதலான சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

7 ஆயிரம் பேர் சிறுவர் போராளிகளாக நடைபெற்றுக்கொண்டிருக்கும் யுத்த நடவடிக்கைகளில் இணைக்கப்பட்டிருப்பதாகவும் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த வருடாந்த அறிக்கையில் தெரியவந்துள்ளது. சிறுவர்களை கடத்திச்செல்லும் சம்பவங்கள் 90 வீதத்தாலும் சிறுவர்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல்கள் 70 சதவீதத்தாலும் அதிகரித்துள்ளதாக அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இலங்கையில் மட்டுமல்ல, உலகளாவிய ரீதியிலும் சிறுவர்களை பாதுகாக்க உலக நாடுகளின் தலைவர்கள், சர்வதேச அமைப்புகள் ஒன்றுபட்டு செயற்படவேண்டிய நேரம் வந்துவிட்டது. உலகின் எதிர்காலம் சிறுவர்களே. கண்ணுக்குத் தெரியாமல் நடக்கும் இன்னுமின்னும் எத்தனையோ அக்கிரமங்களை தடுக்க முயல்வோம்.

# புறக்கோட்டை ரயில் நிலையத்துக்குள் கொடூரம்

# 9 தமிழர்கள் எரித்துக் கொலை

## தோட்டா பெட்டியுடன் வந்தவர் யார்..?



எம்.ஐ.முபாறக்
(ஊடகவியலாளர்)

[தொடர் 04]

பதற்றம், அச்சம், தப்பியோட்டம், தஞ்சம், கொலை, கொள்ளை, வல்லுறவு.

இதுதான் கொழும்பின் நிலை. முழு நாட்டினதும் நிலை.

எங்கும் புகை மண்டலம். எரியும் வீடுகள், கடைகள். மரண ஓலம்.

திரும்பும் பக்கமெல்லாம் சம்பவம்தான்.

நிறைய சம்பவங்கள். நிறைய கொலைகள். களத்தில் காடையர்கள் மட்டுமே.

அவற்றுள் ஒன்றுதான் இந்தக் கொலை. புறக்கோட்டை ரயில் நிலையக் கொலை.

9 தமிழர்கள் அடித்து எரித்துக் கொல்லப்பட்ட சம்பவம். வர்ணிக்க முடியா கொடூரம் அது.

எப்படி நடந்தது....? பார்ப்போம் விரிவாக..

புறக்கோட்டை ரயில் நிலையப் படுகொலை. அந்த 7 நாட்களுக்குள் நடந்த சம்பவங்களுள் - படுகொலைகளுள் இதுவும் ஒன்று. முக்கியமான ஒன்று.

உள்ளத்தை உருக்கும் கொடூரம்.

அது ஒரு பகல் நேரம். சரியாக ஒரு மணி. கடும் பரபரப்பு. அந்த ரயில் நிலையத்தில்.

கொழும்பில் தாக்குதல் உக்கிரம். அங்கு இருக்க முடியாது. தப்பி ஓடுகிறார்கள் தமிழர்கள்.

சொந்த ஊர்களுக்கு... வேறு ஊர்களுக்கு...

அப்படியான ஒன்றுதான் இங்கும். குவிகிறார்கள் இந்த ரயில் நிலையத்தில் தப்பி ஓடுவதற்காக.

நிரம்பி வழிகிறது அந்த இடம். எல்லா இன மக்களும்தான் அங்கு.

சற்றுநேரத்தில் பயணம். கண்டியை நோக்கி... மூன்றாவது மேடையிலிருந்து...

வேறெங்கும் நிற்காது. கண்டியைத் தவிர...

அறிவிக்கப்படுகிறது அவ்வப்போது...

முட்டி மோதுகிறார்கள் மக்கள். பொறுமை இல்லை. ரயில் கிளம்பும்வரை...

என்னாகுமோ...? நிம்மதி இல்லை.மரண பயம்.எல்லோர் முகங்களிலும்.

இறைவனை வேண்டியவர்களாக எல்லோரும்...

இன்னும் ஓரிரு நிமிடங்கள்தான்... ரயில் புறப்படுவதற்கு...

இறுதி அறிவிப்பு. மெதுவாக வந்து நிற்கிறது ரயில். பெரும் நிம்மதி அவர்களுக்கு. ஏறுகிறார்கள் ஓடிப் போய்...

நுழைகிறார்கள் உள்ளே. முட்டி மோதி...

ஆசனங்களை ஒதுக்குவதில் தீவிரம்.

அப்போதுதான் இந்தச் சம்பவம். ஒன்பது அப்பாவிகள் கொல்லப்பட்ட சம்பவம். ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்த சம்பவம்.

முன்கூட்டியே நுழைந்துவிட்டார்கள் காடையர்கள். பயணிகளோடு பயணிகளாக...அந்தத் திட்டத்தோடு...

ஆட்டம் ஆரம்பம் இப்போது...

ஏறுகிறார் ஒருவர். அந்தப் பயணிகளுடன் சேர்ந்து...

அவரது கையில் ஒரு பெட்டி. ஹார்போட் பெட்டி. வீழ்கிறது அது. மேடையில்...

இல்லை...வீழ்வதுபோல் காட்டுகிறார். அவரேதான் போடுகிறார்...

வீழ்ந்து உடைகிறது. அதற்குள் சில பொருட்கள். சிதறி ஓடுகின்றன மேடை எங்கும். பயணிகளின் கால்களுக்குள்...

பயணிகளின் கவனமெல்லாம் அதன்மீதுதான். பார்க்கிறார்கள் உற்று.

என்ன அது...?

திகைத்துப் போகிறார்கள். அவற்றைக் கண்டதும்...

அவை என்ன தெரியுமா...?

தோட்டாக்கள்.....!!!

பாவிக்கப்படாத தோட்டாக்கள். புத்தம் புதிய தோட்டாக்கள்.

உருண்டோடுகின்றன கால்களுக்குள். மின்னுகின்றன தங்கம்போல். அத்தனையும் புதியவை.

எட்ட நிற்கிறார்கள் பயணிகள். மிதித்தால் வெடித்துவிடும் என்ற அச்சம்.

அவ்வளவுதான்....

சத்தம் வைக்கிறான் ஒருவன். அந்தக் காடையர் கூட்டத்தில் ஒருவன். திட்டப்படியே...

இந்தா LTTE வந்துட்டானுகள்... கோச்சிக்கு குண்டு வைக்கப்போறானுகள்.

அவ்வளவுதான்...

இந்தச் சத்தம் பயணிகளின் காதுகளில் விழ...ஒரே பதற்றம் அங்கு.

ஓடுகிறார்கள் ரயிலை விட்டு... பாய்கிறார்கள் ஜன்னல் வழியாக...

ஒருவரை ஒருவர் தள்ளிக்கொண்டு...

கோச்சிக்குள் குண்டு....குண்டு என்ற சத்தம்தான் எங்கும்...

கொத்திக்கொள்கிறது ரயில் நிலையம். பெரும் போராட்டம் அங்கு. உயிர்களை காப்பாற்றுவதற்காக...

அப்போது மேடையில் தயாராக ஒரு குழுவினர். காடையர்கள்.

எங்கடா புலி. ஒருத்தனையும் தப்ப விடக்கூடாது.

கத்திக்கொண்டு நுழைகிறார்கள் ரயிலுக்குள். நுழைந்த வேகத்தில் தாக்குதல். அப்பாவித் தமிழர்கள்மீது. மரண அடி.

ஒப்பாரி வைக்கிறார்கள். காலில் வீழ்கிறார்கள். வீழ்ந்து கெஞ்சுகிறார்கள்.

எங்களை கொல்லாதீர்கள். நாங்கள் அப்பாவிகள்.

எதையும் கவனத்திலெடுக்கவில்லை அந்தக் காடையர்கள். அவர்களின் கவனமெல்லாம் தமிழர்களை கொல்ல வேண்டும் என்பதில்தான்...

இழுத்துச் செல்கிறார்கள் தர தரவென. ரயில் பெட்டிகள் நெடுவே. தூக்கி வீசுகிறார்கள் வெளியே. அரிசி மூட்டைகளைப்போல்...

பறந்து வந்து வீழ்கிறார்கள். அந்த மேடை மீது...சீமெந்து கட்டு மீது...

தடார் ...தடார் என்ற சத்தம்.வந்து விழும் சத்தம். கூடவே ஒப்பாரியும். தங்க முடியா வலியால்...

அத்தோடு முடிந்துவிட்டதா...? இல்லை.

இனித்தான் விளையாட்டே...

சுற்றிவளைக்கிறார்கள் அவர்களை. இரும்புக் கம்பிகள், கனமான கம்புகள் சகிதம்...

தப்பியோட வழியில்லை....

இனி என்ன...நடக்கிறது வேட்டை. சுற்றி நின்று. துடிக்க துடிக்க ...கதறக் கதற...

தலைகளை பதம் பார்க்கின்றன இரும்புக் கம்பிகள். சிவந்து போகிறது அந்த மேடையே...

ஆம்...வழிந்தோடுகிறது இரத்தம். அந்த அப்பாவிகளின் இரத்தம். அவர்களின் தலைகளிலிருந்து..

துடிக்கிறார்கள்...கதறுகிறார்கள்... கெஞ்சுகிறார்கள்...ஒப்பாரி வைக்கிறார்கள்... உருளு கிறார்கள்...பிரளுகிறார்கள்...

எதுவுமே எடுபடவில்லை. ஒன்றுமே வேலைக்கு ஆகவில்லை.

அசைவதாக இல்லை அந்தக் காடையர்கள். கொன்றொழிப்பதிலேயே குறி...

சுற்றி பெரும் மக்கள் கூட்டம். பயணிகள் கூட்டம். நூற்றுக்கணக்கில். எல்லோரும் பார்வையாளர்களாக...

நிற்கிறார்கள் கைகட்டி... உதவிக்கு அழைத்தும் வேலையில்லை. ஒன்றும் ஆகவில்லை... அருகில்கூட வரவில்லை. எட்ட நின்று வேடிக்கை மட்டுமே...

தொடர்ந்து தாக்குதல். உயிர் பிரியும்வரை...

ஆம்...இப்போது இறுதிக் கட்டம். மெல்ல மெல்ல பிரிகின்றன உயிர்கள்.

சற்றுநேரத்தில்...மொத்தமாக...

ஆம்...முடிந்துவிட்டது கதை. பிரிந்துவிட்டன உயிர்கள். ஒன்பது உயிர்கள். அப்பாவிகளின் உயிர்கள்.

ஒன்பது உடல்கள் அங்கு இப்போது இரத்த வெள்ளத்தில்...

இழுத்துச் செல்கிறார்கள் அந்த உடல்களை. இன்னொரு மேடைக்கு...

தூக்கிப் போடுகிறார்கள் ரயில் தண்டவாளத்தில்...

தீ வைக்கிறார்கள் அவற்றுக்கு. நிறைய கடதாசிகளை அள்ளிப்போட்டு... நூற்றுக்கணக்கானோர் முன்னிலையில்...

பற்றி எரிகின்றன உடல்கள். புகை மண்டலமாக கோட்டை ரயில் நிலையம்...

எவராலும் காப்பாற்ற முடியவில்லை. திட்டப்படியே நடக்கிறது எல்லாம்...

இப்போதுதான் வருகிறார்கள் இராணுவமும் பொலிஸாரும். எங்கோ மறைந்திருந்துவிட்டு...

சம்பவத்துக்கு ஓரிரு நிமிடங்களுக்கு முன் அங்குதான் நின்றார்கள். அந்த ரயில் நிலையத்தில்...

சம்பவம் தொடங்கும்போது மிஸ்ஸிங். இப்போது கமிங். எல்லாம் முடிந்ததும்...

அவர்களைக் கண்டதும் அந்தக் காடையர்கள்.....!!

சேர்...!!!! புலி ஒன்பது பேர்ட கதைய முடிச்சிட்டம் சேர். அவனுகள் கோச்சில குண்டு வைக்க பிளேன் பண்ணி இருந்தானுகள். தோட்டா பெட்டி ஒன்றும் வெச்சிருந்தானுகள். அதோ.. கீழே கொட்டிக் கிடக்கு...

பெருமையுடன் கூறுகிறார்கள் அவர்களிடம்.

மீண்டும் அறிவிப்பு ஒலிபெருக்கி மூலம்.

மூன்றாவது மேடையில் தரித்து நிற்கும் ரயில் இன்னும் சொற்ப வேளையில் கண்டி நோக்கிச் செல்லும்.

அறிவிப்பைக் கேட்டு மீண்டும் ஓடிப் போய் ஏறுகிறார்கள் தமிழர்கள்.

புறப்படுகிறது ரயில் கண்டி நோக்கி...இராணுவத்தின் பாதுகாப்போடு...ரயிலின் ஒவ்வொரு கதவடியிலும் இராணுவம்.

சிறிதுநேரத்தில் அங்கே தீ அணைப்புப் படை. அணைக்கிறார்கள் தீயை. நீரைப் பீச்சியடித்து...

மூன்றாவது மேடையில் இரத்தம். கழுவுகிறார்கள் அதையும்...

அடுத்து அங்கே அம்பியூலன்ஸ். விறு விறுவென ஏற்றுகிறார்கள் சடலங்களை...

சடாரெனப் பறந்துவிட்டது அந்த வாகனம்.

சம்பவம் ஒன்று நடந்ததற்கான அடையாளமே அங்கு இல்லை.

பொலிஸும் வரவில்லை. விசாரணையும் நடத்தவில்லை.

சம்பவம் நடந்தது பகல் ஒரு மணிக்கு. மாலை 6 மணிக்கு செய்தி. இலங்கை வானொலியில்... அது தொடர்பான செய்திதான்.

எல்லாம் தலைகீழ்....

இன்று பகல் கண்டி நோக்கி புறப்படுவதற்குத் தயாராக இருந்த ரயில் மீது புலிகள் நடத்துவதற்குத் திட்டமிட்டிருந்த குண்டுத் தாக்குதல் இராணுவத்தால் வெற்றிகரமாக முறியடிப்பு.

அதில் படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் நடந்த துப்பாக்கிச்சூட்டில் ஒன்பது புலிகள் கொல்லப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இப்படித்தான் அந்தச் செய்தி...


நூற்றுக்கணக்கானோர் முன்னிலையில் நடந்த சம்பவம் அது.

ஆனால், அரசு எதைச் சொல்கிறதோ அதுதான் உண்மை.

அதுதான் ஜே.ஆரின் அரசு.

மற்றுமொரு சம்பவத்தைப் பார்ப்போம் நாளைய தொடரில்...

(தொடரும்...)



# பொன்விழா காண்கிறது

# மட்டுப்படுத்தப்பட்ட சாய்ந்தமருது பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்

Sainthamaruthu



சங்கத்தின் தலைவர்
எம்.எம். உதுமாலெப்பை



தற்போதைய பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் MPCS



சங்கத்தின் பொது முகாமையாளர்
ஏ.எம்.இன்ஸான்


இலங்கை முஸ்லிம்களை அதிகமாக கொண்ட கிழக்கு மாகாணத்தில் நெல் வயல்களையும் கடல் வளத்தையும்கொண்டு மலை முகடுகளும் நிறைந்த அம்பாறையில் அமைந்துள்ள பூர்வீக நகரமே சாய்ந்தமருது நகரம். இந்த நகரை நவம்பர் புரட்சி எனும் நகரசபை கோஷத்துடன் கூடிய போராட்டத்தினால் உலகமே உற்றுப்பார்த்த நாட்கள் சமீபத்தைய மாதங்களில் வந்ததென்றால் அதை மறுக்க யாரும் தயாராக இல்லை எனலாம். அப்படியான சாய்ந்தமருதின் முக்கிய பொதுமக்கள் அமைப்பான மட்டுப்படுத்தப்பட்ட சாய்ந்தமருது பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் தன்னுடைய பொன்விழாவை இந்த ஆண்டில் பல தடைகளையும் சோதனைகளையும் சாதனைகளையும் கடந்து அடைந்து கொண்டது. அதனை ஒட்டியதாக ஒரு பார்வையை இன்றைய 'தமிழன்' பத்திரிகை உங்களுக்குத் தருகிறது.

கூட்டுறவுச் சங்க வரலாறானது இங்கிலாந்தில் ரோச்டேல் பயனீர் என்பவரால் சிந்திக்கப்பட்டு, 1844ஆம் ஆண்டில் அவரது நண்பர்கள் மற்றும் நெருங்கியவர்கள்கொண்ட கூட்டம் கூட்டப்பட்டு, அந்தக் கூட்டத்தில் தாமே தங்களுக்குள், தங்கள் தேவைக்காக தங்கள் மூலம் என்ற கொள்கைகளுடன் ரோச்டேல் சமத்துவ முன்னோடிகள் கூட்டுறவு பண்டகசாலைகளை ஆரம்பித்தனர். ஆரம்பித்து அக்கூட்டுறவுச் சங்கத்திற்கான நடைமுறை விதிகளை ஏற்படுத்திக்கொண்டனர். இக்கூட்டுறவுச் சங்கமே பிற நாடுகளில் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்க முன்னோடியாக விளங்கியது என்று விரிகிறது.

ஜேர்மனியில் 1852ஆம் ஆண்டில் பிரான்ச் ஹெர்மன் சூல்ஸ் (Franz Hermann Schulze) என்பவரது முயற்சியால், நகரப் புறங்களில் சிக்கன நாணயக் கூட்டுறவு கடன் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. 1864ஆம் ஆண்டில் ரெய்பிசன் (Raiffeisen) என்பவரது முயற்சியால் கிராமப்புறங்களில் கூட்டுறவு கடன் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. ரெய்பிசனின் வெற்றியைத் தொடர்ந்து, இங்கிலாந்தில் கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் மற்றும் பரஸ்பர சேமிப்பு கூட்டுறவு வங்கிகள் ஆரம்பிக்கப்பட்டன. பிரான்ஸில் அச்சுத் தொழில் கூட்டுறவுச் சங்கங்களும், இஸ்ரேலில் கூட்டுறவு இயக்கமும் கில்ப்லர்ட்ஸ், மோஸ்ஹவ், மோசர்ஷிட்டாப் போன்றவர்களால் முன்னடத்தப்பட்டது. இராபர்ட் ஓவன் மற்றும் வில்லியம் கிங் ஆகியவர்களின் முயற்சியால் ஐக்கிய அமெரிக்காவில் கூட்டுறவு இயக்கம் பரவத் தொடங்கியது. இப்படியான வரலாறு நீண்டு இலங்கையிலும் அது வேர்விட்டது.

1912ஆம் ஆண்டு மாத்தறை மாவட்டத்திலுள்ள வெல்லபடபத்து என்னும் கிராமத்தில் முதலாவது கூட்டுறவுச் சங்கம் எனும் விதை வீழ்ந்தது. அது வளர்ந்து 1957ஆம் ஆண்டளவில் இலங்கையில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டன. இந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் உருவாக்கத்திற்குக் காரணமாய் இருந்த அப்போதைய கூட்டுறவு அமைச்சர் பிலிப் குணவர்தன இங்கு நினைவுபடுத்தப்பட வேண்டியவர். இந்த நேர்கோட்டிலேதான் மட்டுப்படுத்தப்பட்ட சாய்ந்தமருது பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் 1971 மார்ச் மாதம் 24ஆம் திகதி சாய்ந்தமருது கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

மட்டுப்படுத்தப்பட்ட சாய்ந்தமருது பலநோக்கு கூட்டுறவுச் சங்க முதலாவது நிர்வாக சபையானது எம்.ஐ.மீரா லெப்பை என்பவரது தலைமையில் ஸ்தாபிக்கப்பட்டு 50 ஆண்டுகளை கடந்து இன்றுவரை சிறப்பாக இயங்கிவருகின்றது. இந்த மட்டுப்படுத்தப்பட்ட சாய்ந்தமருது பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் பல சோதனைகளை கடந்தே இந்த இடத்தில் பலமாக கால்



FOUNDATION LAID BY
M. C. AHAMED ESQR.,
M. P., KALMUNAI
BOARD OF DIRECTORS
MR. M. I. M. MEERA LEBBE—PRESIDENT.
MR. M. A. RAHEEM—VICE-PRESIDENT.
MR. M. M. ADAMBAWA
MR. A. L. M. ZAIN
MR. A. L. M. YOOSUF
MR. S. L. ALIYAR
MR. Y. MEERASAHIB
MR. A. M. ISMAIL
MR. A. MISKINBAWA
MR. U. KALANDARSA
MR. I. L. M. BAWA
MR. M. C. M. HAMEED
MR. S. M. ABOOBUCKER
MR. M. ZAINUDEEN—GENERAL MANAGER
SAINTHAMARUTHU M.P.C.S. LTD.
28TH OCTOBER, 1973.

ஊன்றியுள்ளதென்றால் அது மிகையாகாது. இந்தச் சங்கத்தின் வளர்ச்சியில் பலரின் வியர்வையும் தியாகமும் கலந்திருக்கின்றன என்கின்றனர் சாய்ந்தமருது மக்கள். 1971 மார்ச் மாதம் 24ஆம் திகதிமுதல் 2013 ஜனவரிவரை சிறப்பாக இயங்கிய இந்த மட்டுப்படுத்தப்பட்ட சாய்ந்தமருது பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் 2013 ஜனவரி முதல் 2016 பெப்ரவரி வரை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரமுகர்களின் ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவரப்பட்டு மிகப்பெரும் சிக்கலை சந்தித்தது. அதனை நிவர்த்தி செய்யவேண்டிய தேவை உணரப்பட்டதன் காரணமாக அதிகாரிகளின் தலையீட்டினால் 2016 மார்ச் முதல் 2016 ஓகஸ்ட் வரை தற்காலிக நிர்வாகிகளாக பரீட், நிஜாமுதீன், ஜப்பார் போன்றவர்கள் இருந்து ஜனநாயகமான தீர்வை முன்வைத்து 2016 ஓகஸ்டில் தன்னுடைய தலைமையின் கீழ் புதிய நிர்வாகம் மலர்ந்தது என்கிறார் மட்டுப்படுத்தப்பட்ட சாய்ந்தமருது பலநோக்கு கூட்டுறவுச் சங்க தற்போதைய தலைவரும், மிக நீண்டகாலமாக பிரதேச செயலக நிர்வாக அதிகாரியாக கடமையாற்றிய அனுபவம் கொண்டவருமான எம்.எம்.உதுமாலெப்பை.

2016 ஓகஸ்டில் புதிய நிர்வாகம் இந்த மட்டுப்படுத்தப்பட்ட சாய்ந்தமருது பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தைப் பொறுப்பேற்றபோது சீருடை சென்மதியாக 1,22,948 ரூபாவும் இடைக்கால படியாக 1,64,800 ரூபாவும் சம்பள பாக்கியாக 11,93,863.85 ரூபாவுமாக கிட்டத்தட்ட 1.5 மில்லியன் ரூபா கடனில் இயங்கிக்கொண்டிருந்ததுடன், மிகவும் வறுமையான சங்கத்தைபோன்று குடிநீர், மின்சாரம், தொலைபேசி வசதிகள், போதிய வசதிகளில்லாத கட்டிடம் போன்ற எவ்வித அடிப்படை வசதிகளுமில்லாமல் இருந்தது. இதனை கவனத்திலெடுத்து உடனடியாக எங்களின் முற்பணங்களைக்கொண்டு அந்த வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தோம் என்கின்றனர் இப்போதைய பணிப்பாளர் சபையினர்.

நிர்வாக முன்னெடுப்புகளை சிறப்பாகச் செய்ய முன்னாள் வர்த்தக அமைச்சரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய தலைவருமான ரிஷாத் பதியுதீனினால் போட்டோ கொப்பி இயந்திரம், கணினி என பல்வேறுபட்ட உதவிகள் முதற்கட்டமாக வழங்கப்பட்டன. அதுமட்டுமன்றி, பாழடைந்த நிலையில் அட்டப்பள்ளம் பிரதேசத்தில் இருந்த மட்டுப்படுத்தப்பட்ட சாய்ந்தமருது பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான அரிசி ஆலையை மீள இயங்கச்செய்ய பின்னாளில் 1.5 மில்லியன் ரூபாவை ஒதுக்கித்தந்து இன்று அந்த அரிசி ஆலை வெற்றிகரமாக இயங்க காரணகர்த்தாவாக இருந்தார். அது மாத்திரமன்றி அப்போது அரச வர்த்தக கூட்டுத்தாபனத் தலைவராக இருந்த கிழக்கு மாகாண சபை குழுக்களின் முன்னாள் தலைவர் கலாநிதி ஏ.எம்.ஜெமீலின் சிபாரிசின்படி இயங்க முடியாமல் இருந்த மட்டுப்படுத்தப்பட்ட சாய்ந்தமருது பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான EPLG 1432 இலக்க கனரக லொறியையும் பயன்பாட்டுக்கு ஏற்றாற்போல் திருத்தம் செய்து மாதாந்தம் 90 ஆயிரம் ரூபாவுக்கு வாடகைக்குப் பெற்று அரச வர்த்தகக் கூட்டுத்தாபன பாவனைக்கு பயன்படுத்தியதன் மூலம் மட்டுப்படுத்தப்பட்ட கூட்டுறவுச் சங்கத்திற்கு நிறைய வருமானங்கள் கிடைத்தன. அதற்குக் காரணமாக இருந்த முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் எம்.பியையும், கலாநிதி ஏ.எம்.ஜெமீலையும் இங்கு நன்றியுடன் நினைவுகூரவேண்டியுள்ளது. அது மாத்திரமன்றி கடந்த நல்லாட்சி காலப்பகுதியில் ஐ.தே.கட்சியின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த மாரசிங்கவும் தன்னுடைய பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து 2.5 இலட்சம் ரூபாவை இந்தச் சங்கத்தின் மேம்பாட்டுக்காக வழங்கியுள்ளார்.

08 கிளை சங்கங்களைக்கொண்டுள்ள இந்தச் சங்கம், அந்தக் கிளைகளிலிருந்து பெறப்பட்ட மொத்தம் 99 பொதுச் சபை உறுப்பினர்களைக்கொண்டுள்ளது. அந்த மட்டுப்படுத்தப்பட்ட சாய்ந்தமருது பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தற்போதைய தலைவராக ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர் எம்.எம்.உதுமாலெப்பை பதவி வகிக்கிறார். இந்தச் சங்கத்தின் பொது முகாமையாளராகவும் பதவி வழி செயலாளராகவும் ஏ.எம்.இன்ஸான் கடமையாற்றி வருகிறார். பிரதித் தலைவராக ஓய்வுபெற்ற இ.போ.சபையின் உத்தியோகத்தர் ஏ.அஹமட் லெப்பையும் பணிப்பாளர்களாக பிரதேச செயலக உத்தியோகத்தர் ஏ.எம்.ஜஹான், இஸ்தி கார்மண்ட் பணிப்பாளர் எம்.ஐ.எம். இஸ்திகார், மாவட்ட விளையாட்டு பயிற்றுவிப்பாளர் எம்.பி.எம்.ரஜாய், கட்டுமான நிறுவனப் பணிப்பாளர் ஏ.எல்.எம்.நாஸர், பிரதேச செயலக உத்தியோகத்தர் ஏ.எம்.அசீம், மகளிர் கிராம அபிவிருத்திச் சங்க தலைவிகளான எம்.ஏ.ஆபிதா, எம்.யூ.எஸ்.முபீதா ஆகியோர் உள்ளனர்.

கூட்டுறவுச் சங்க விதிமுறைகளின்படி மூன்று வருடங்களுக்கு மட்டுமே ஒரு நிர்வாகத்தின் ஆயுட்காலம். அதன் பின்னர் புதிய நிர்வாக சபையினர் ஜனநாயக ரீதியாக தெரிவுசெய்யப்பட வேண்டும் என்பது நியதி. இப்போது இருக்கும் நிர்வாகத்தினரின் முதலாவது பதவிக்காலம் 2016 ஓகஸ்டில் ஆரம்பித்தது 2019 ஓகஸ்டில் முடிந்தது. ஆனால், இவர்களின் சிறந்த வேலைத்திட்டங்கள், முன்னேற்றகரமான செயலாற்றுகை, துடிப்பான போக்குகள், உயிரோட்டமான சிந்தனை என்பவற்றை கருத்திற்கொண்டு மீண்டும் இதே சபையினரை 2019இல் இரண்டாவது தடவையாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். பல்வேறு தளங்களில் இயங்கும் இந்த நிர்வாகத்தினர் இன்றும் பல திட்டங்களுடன் இந்த மட்டுப்படுத்தப்பட்ட சாய்ந்தமருது பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தை வளர்ச்சிப் பாதையில் கொண்டுசெல்கின்றனர்.

மட்டுப்படுத்தப்பட்ட சாய்ந்தமருது பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் சொத்துகளாக நிந்தவூர் - அட்டப்பள்ளம் பிரதேசத்தில் அரிசி ஆலையும், சாய்ந்தமருது பிரதேசத்தில் 05 கடை கட்டிடங்களும், கனரக லொறி ஒன்றும் காணப்படுகின்றன. இந்த மட்டுப்படுத்தப்பட்ட சாய்ந்தமருது பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கடைகளில் கடந்த காலங்களில் தனியார் கல்வி நிலையங்கள், நாட்டின் புகழ்பெற்ற தனியார் நிறுவனங்கள் மற்றுமன்றி பிராந்தியத்தின் புகழ்பெற்ற வர்த்தக நிலையங்களும் இயங்கி வருகிறது. பிரதான வீதியில் நவீன முறையில் அமைக்கப்பட்டுள்ள இந்த கடை கட்டிடங்கள் சந்தைப் பெருமானம் கூடியதாக உள்ளது. இதன்மூலம் நிறைய மாதாந்த வருமானத்தை இந்தச் சங்கம் மாதாந்தம் பெற்றுவருகின்றது.

நாட்டில் ஓர் அசாதாரண நிலை ஏற்படும்போது முன்னின்று மக்கள் பணி செய்வதிலும் மட்டுப்படுத்தப்பட்ட சாய்ந்தமருது பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் எப்போதும் பின்நின்றதில்லை. இந்த நிர்வாகத்தினரால் கூட அண்மையில் நாட்டில் ஏற்பட்ட கொரோனா அலையின் தாக்கத்தினால் பயணத்தடை அமுலானபோது பாதிக்கப்பட்ட வசதி குறைந்த மக்களுக்கு நிவாரண உதவிகள் செய்தமையையும், சாய்ந்தமருதிலிருந்து பல்வேறு சாதனைகள் படைக்கும் சாதனையாளர்களை கௌரவிப்பதிலும் முன்னின்று செயற்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் காலங்களில் இந்தச் சங்கத்தின் வருமானத்தை கூட்ட கோப் டீ நிலையத்தை சாய்ந்தமருது பிரதான வீதியில் அமைக்க திட்டமிட்டுள்ள பணிப்பாளர் சபையினர் அந்த வேலைத்திட்டத்தின் இறுதித் தறுவாயில் இப்போது இருப்பதாகவும் அடுத்த மாதமளவில் கோலாகலமாக திறக்க ஆயத்தமாக உள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். அது மாத்திரமன்றி தனியார் கட்டிடத்தில் இயங்கிவரும் மக்கள் வங்கிக்கான நிரந்தர கட்டிடத்தை இந்தச் சங்கத்துக்குச் சொந்தமான காணியில் அமைத்துக் கொடுக்கவும், அதன்மூலம் பாரியளவிலான வருமானத்தை ஈட்ட முயற்சிகளையும் செய்துவருகிறார்கள்.

முன்னாள் பிரதேச செயலாளராக இருந்த இப்போதைய இலங்கை பொதுச் சேவை ஆணைக்குழு உறுப்பினர் ஏ.எல்.எம்.சலீமினால் சாய்ந்தமருது கடற்கரை வீதியில் மட்டுப்படுத்தப்பட்ட சாய்ந்தமருது பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் எதிர்கால





முன்னேற்றத்திற்காக ஒதுக்கப்பட்ட 25 பேர்ச் காணியில் மீனவர்களின் நன்மை கருதி எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றையும், ஐஸ் தொழிற்சாலையையும் நிறுவ திட்டங்களை தயார்படுத்தி வருவதாகவும் இந்தப் பணியை வெற்றிகரமாக முன்னெடுக்க சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக் தலைமையிலான சாய்ந்தமருது பிரதேச செயலக அதிகாரிகளும் குறிப்பாக, காணி விடயங்களுக்குப் பொறுப்பான அதிகாரியும் ஒத்துழைப்புகளை தொடர்ந்தும் வழங்கி வருவதாக சங்கத்தின் தலைவர் எம்.எம். உதுமாலெப்பை தெரிவித்தார்.

இப்படியான நீண்டகால வரலாற்றைக் கொண்டு சிறப்பாக இயங்கிவரும் இந்தச் சங்கத்தின் பொன்விழாவை கொண்டாட உலக வல்லரசுகள் முதல் வல்லரசாக நினைக்கும் எதிர்கால வல்லரசுகள் வரை உலுக்கி இலங்கையையும் விட்டுவைக்காமல் ஆட்டிப் படைத்திக்கொண்டிருக்கும் கொரோனா தடையாக அமைந்துள்ளது. நாடு வழமைக்குத் திரும்பினால் பிரம்மாண்டமாக கொண்டாட பணிப்பாளர் சபையினர் பொதுச் சபை, கிளைச் சபை என எல்லோரும் தயாராக உள்ளார்கள். ஆனால், கொரோனாவின் அடுத்த அலை இடம்கொடுக்குமா என்பதை காலம்தான் பதில் கூறவேண்டும்.



MPCS Land



MPCS Rice Mill



தொகுப்பு :
நூருல் ஹுதா உமர்
'தமிழன்' செய்தியாளர்

# ஹிஷாலினிக்கு நீதி கோரி .....
# தொடரும் ஆர்ப்பாட்டங்கள்!

## சிறுவர் – சிறுமியருக்கு பாதுகாப்பு வேண்டும்

(எம்.கிருஸ்ணா)

ஹிஷாலினியின் மரணத்திற்கு நீதி கோரி கொட்டகலை நகரில் ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது.

கொட்டகலை பிரதேச தோட்டத் தொழிலாளர்கள் கலந்துகொண்ட இந்த ஆர்ப்பாட்டமானது நேற்றுக் காலை கொட்டகலை பிரதேச சபைக்கருகில் இடம்பெற்றது.

ஆர்ப்பாட்டத்தின்போது நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் வீட்டில் பணிபுரிந்த டயகம தோட்டத்தைச் சேர்ந்த 16 வயதுடைய ஹிஷாலினி என்ற சிறுமி தீ காயங்களுக்குள்ளாகி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் ரிஷாட் பதியுதீனின் மனைவி உள்ளிட்ட நால்வர் கைதுசெய்யப் பட்டுள்ளனர். இவர்களை உரிய விசாரணை செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தி குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுக்கொடுக்க வேண்டும்.

அத்தோடு, தோட்டப்பகுதிகளி லிலுள்ள சிறுவர், சிறுமிகள் மற்றும் பெண்களுக்கு பாலியல் துன்புறுத்தல் இல்லாத பாதுகாப்பை அரசு உறுதிப்படுத்த வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பதாகைகள் ஏந்தி இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.





## மலையக சிறார்கள் எவரையும் வேலைக்கு அமர்த்தக்கூடாது






(தலவாக்கலை நிருபர்)

முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீனின் வீட்டில் பணிபுரிந்த டயகமவைச் சேர்ந்த 16 வயது சிறுமியின் இறப்புக்கு நீதி வேண்டும். குற்றவாளிகள் அனைவரும் விரைவில் கண்டுபிடிக்கப்பட்டு அவர்களுக்கு தக்க தண்டனை வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தி தலவாக்கலை சென்கூம்ஸ் தோட்ட மக்களால் ஹட்டன் நுவரெலியா பிரதான வீதியில் மட்டுக்கலை சந்தியில் நேற்று போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

டயகம சிறுமியின் மரணம் தொடர்பில் உண்மை கண்டறிப்படவேண்டும். இவ்விடயத்தில் சட்டம் உரிய வகையில் செயற்பட வேண்டும், நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடர்புடைய குற்றவாளிகள் அனைவருக்கும் தண்டனை வழங்கப்படவேண்டும் -என போராட்டக்காரர்கள் கோஷம் எழுப்பியதோடு பதாகைகளையும் ஏந்தியிருந்தனர்.

அத்துடன், மலையகத்திலிருந்து சிறார்கள் எவரையும் வேலைக்கு அமர்த்தக்கூடாது, அவர்களுக்கான கல்வி உரிமை பாதுக்காக்கப்பட வேண்டும் எனவும் போராட்டக்காரர்கள் குரல் எழுப்பினர்.

## எதிர்கால தூண்களை பாதுகாப்போம்!




(க.கிஷாந்தன்)

சிறுவர் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகி உயிரிழந்த ஹிஷாலினிக்கு நீதி கோரி நேற்றுமுன்தினம் ஹட்டனில் போராட்டம் நடத்தப் பட்டது. ஈரோஸ் அமைப்பின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டம் ஹட்டன் புட்சிட்டிக்கு முன்பாக காலை 11 மணியளவில் ஆரம்பித்து நடை பாதையாக ஹட்டன் நகரத்துக்கு வந்தடைந்து ஹட்டன் மணிக்கூட்டு கோபுரத்துக்கு முன்பாக நீதி வேண்டி கோஷமிட்டபடி முடிவு செய்தார்கள்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈரோஸ் அமைப்பின் உறுப்பினர்கள், சமூக அக்கறைகொண்ட இளைஞர்கள் யுவதிகள் மத பேதமின்றி கட்சி பேதமின்றி சமூக ஆர்வலர்கள் கலந்துகொண்டார்கள்.

இதன் போது, எதிர்கால தூண்களை பாதுகாப்போம், சிறுவர் அகழ்வு நாட்டின் கேடு, சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளை வன்மையாக கண்டிக்கின்றோம் என கோஷம் எழுப்பினர்.



**மலையகத்தின் டயகம தோட்ட சிறுமி ஹிஷாலினியின் மரணத்தைக் கண்டித்து இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளரும், பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வடிவேல் சுரேஷ் தலைமையில், ஊவா மாகாணசபைக்கு முன்பாக கண்டனப் பேரணி நேற்று இடம்பெற்றபோது பதுளை மாவாட்ட பெருந்தோட்டங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் ஒன்றினைந்து போராட்டங்களில் ஈடுபட்டிருப்பதையும், வீதிமறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதையும், கண்டன பதாகைகளை தாங்கியவண்ணம் மக்கள் இருப்பதையும், நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம் . (படங்கள் எம்.செல்வராஜா)**



**முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீனின் வீட்டில் பணிபுரிந்த டயகமவைச் சேர்ந்த 16 வயது சிறுமியின் இறப்புக்கு நீதிகோரி தலவாக்கலை நற்பணி மன்றத்தினால் தலவாக்கலை நகர பஸ்தரிப்பிடத்திற்கு முன்பாக நேற்று (25ஆம் திகதி) போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. இப்போராட்டத்தில் தலவாக்கலை- லிந்துலை நகரசபையின் தலைவர் அசோக சேபால மற்றும் தலவாக்கலை பிரதேச இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர். (படங்கள் - தலவாக்கலை நிருபர்)**

## தொழிலாளர்களுக்கு எதிரான அடக்குமுறை செயற்பாடுகளை கம்பனிகள் கைவிட வேண்டும்

### மஸ்கெலியாவில் போராட்டம்

(க.கிஷாந்தன்)

பெருந்தோட்டத் தொழிலாளர்கள் இன்று கம்பனிகளின் அடக்குமுறைகளுக்கும் அடாவடி தனங்களுக்கும் பாரியளவில் முகங்கொடுத்த வருகின்ற சூழ்நிலை உருவாகியுள்ளது.

ஆயிரம் ரூபா சம்பள உயர்வு வேண்டும் என போராடி பெறப்பட்ட சம்பள உயர்வில் முறையான கையாள்கை தவறியபட்சத்தில் இத்தகைய நடவடிக்கைகளை தொழிலாளர்களுக்கு எதிராக கம்பனிகள் முன்னெடுக்கும் செயற்பாடுகள் உருவாக்கம் பெற்றுள்ளன.

இதனை எதிர்த்து தொழிற்சங்கம் மற்றும் அரசியல் கட்சியாக தொழிலாளர் தேசிய சங்கம் மற்றும் தமிழ் முற்போக்கு கூட்டணி நேற்று களமிறங்கியுள்ளன.

அந்தவகையில், மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் தொழில் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியும், பெருந்தோட்ட கம்பனிகளின் நடவடிக்கைக்கு எதிராகவும் மஸ்கெலியாவில் நேற்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.








தமிழ் முற்போக்கு கூட்டணியின் ஏற்பாட்டில் மஸ்கெலியா எரிபொருள் நிலையத்துக்கு முன்பாக நடைபெற்ற இப்போராட்டத்துக்கு தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் பழனி திகாம்பரம் தலைமை தாங்கினார். இவருடன் நாடாளுமன்ற உறுப்பினர் எம். உதயகுமார் உடனிருந்தார்.

"ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு இடம் பெற்றுள்ளது எனக் கூறப்பட்டாலும் தொழிலாளர் களின் தொழில் சுமை அதிகரிக்கப்பட்டுள்ளது. நாளொன்றுக்கான பெயருக்கு 20 கிலோ கொழுந்து பறிக்கவேண்டியுள்ளது. அதேபோல் பல தோட்டங்களில் வேலை நாட்கள் குறைக்கப் பட்டுள்ளன. நலன்புரி சலுகைகள் நிறுத்தப் பட்டுள்ளன.

இவ்வாறான அடக்குமுறை செயற்பாடு களை கம்பனிகள் கைவிட வேண்டும்" - என போராட்டக்காரர்கள் இதன்போது வலியுறுத்தினர்.

## 15வயது சிறுமி மீது பாலியல் துஷ்பிரயோகம்; சந்தேகநபர் பொலிஸாரால் கைது

(த.அசோக் குமார்)

ஹாலிஎல பொலிஸ் பிரிவிலுள்ள கலஉட பகுதியில் 15 வயது பாடசாலை மாணவியை துஷ்பிரயோகம் செய்து கர்ப்பமாக்கிய ஒருவரை கண்டுபிடிக்க ஹாலிஎல பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

பாடசாலைக்கு சென்றுகொண்டிருக்கும் சிறுமி ஒருவர் தனது வயிற்றில் வலி ஏற்பட்டுள்ளதை குடும்ப உறுப்பினர்களுக்கு தெரிவித்த பின்னர் சிகிச்சைக்காக பதுளை பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மருத்துவ பரிசோதனையின்படி, சிறுமி 5 மாத கர்ப்பிணி என்று கண்டறியப்பட்டது. கடந்த பெப்ரவரி மாதம் சிறுமி துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டதும், சந்தேகநபர் ஹாலிஎல பகுதியில் வசிப்பவர் என்பதும் சந்தேகத்திற்குரியது.

சந்தேகநபரை கைதுசெய்வது குறித்து மேலதிக விசாரணைகளை ஹாலிஎல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ருவான் குணதிலக்க தலைமையிலான பொலிஸ் குழு மேற்கொண்டு வந்த நிலையில் 21 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

## சிறுவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக சகலரும் இணைந்து குரல்கொடுக்க வேண்டும்

### மத்திய மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சோ.ஸ்ரீதரன்

வெளியிடங்களில் பணிபுரியச் செல்கின்ற மலையக சிறார்களுக்கு ஏற்படும் அநீதிகள் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன. இதைத் தட்டிக் கேட்கவேண்டிய பொறுப்பு சமூகத்தில் சகல மட்டங்களிலும் உள்ள அனைருக்கும் இருக்கின்றது. எனவே, அவரவர் விருப்பத்துக்கு ஒருவரையொருவர் குறை கூறாமலும் விமர்சிக்காமலும் இணைந்து குரல்கொடுக்க வேண்டியது அவசியமாகும் - என தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதி நிதிச் செயலாளரும், மத்திய மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான சோ. ஸ்ரீதரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

கொழும்பில் வீட்டு வேலைக்கு அமர்த்தப்பட்டு தீக்கிரையாகியுள்ள டயகம தோட்டத்தைச் சேர்ந்த சிறுமி ஹிஷாலினியின் மீது நாட்டு மக்களதும் ஊடகங்களினதும் கவனம் வெகுவாகத் திரும்பியுள்ளது. இந்த நிலைமைக்கு குடும்பத்தின் வறுமைதான் பிரதான காரணமாக இருந்தாலும் சிறுமிக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள அநீதிக்கு சரியான தண்டனை பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும். அத்தோடு, மக்கள் பிரதிநிதியான நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் வீட்டில் பதினாறு வயது சிறுமி வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தமை கண்டிக்கத்தக்கதாகும்.

மலையகத்தில் சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவது சர்வசாதரணமான விடயமாக ஒரு காலத்தில் இருந்துவந்துள்ளது. பத்திரிகை விளம்பரங்களில் கூட வீட்டு வேலைக்கு மலையகத்தவர் விரும்பத்தக்கது என்று போடப்பட்டிருக்கும். இதற்கு எதிராக 'பிரிடோ' முதலான அமைப்புகள் விழிப்புணர்வுத் திட்டங்களை மக்கள் மத்தியில் கொண்டுவந்ததன் ஊடாக இந்த நிலைமை ஓரளவு குறைந்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டிருந்தது. எனினும், மீண்டும் பழைய நிலைமை தோன்ற ஆரம்பித்துள்ளது.

கொழும்பில் பணிபுரிந்த இளைஞர், யுவதிகள் மர்மமான முறையில் மரணமடைந்த செய்திகள் கடந்த காலங்களில் வெளிவந்திருந்தாலும் அவை தொடர்பான முறையான விசாரணைகள் எவையும் முன்னெடுக்கப்படவில்லை. ஆனால், டயகம தோட்டத்தைச் சேர்ந்த சிறுமியின் மரணம் தொடர்பான அறிக்கை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வருவது ஓரளவு நம்பிக்கையை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது.

மலையகத்திலுள்ள சிறுவர்களை வேலைக்கு கொழும்புக்கு அழைத்துச்சென்று கமிஷன் பெறுகின்ற தரகர்கள் எல்லா இடங்களிலும் இருக்கின்றார்கள். எந்தவிதமான அனுமதிப் பத்திரமும் இல்லாமல் ஏஜண்டுகளாக செயற்பட்டு வருகின்ற தரகர்களுக்கு எதிராக முதலில் சட்ட நடவடிக்கை எடுத்து தடைசெய்ய வேண்டும். அதேபோல், சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டிய பொறுப்பு ஆசிரியர்களுக்கு மாத்திரம் அல்லாது அனைவருக்கும் இருக்கின்றது என்பதையும் நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

ஒரு பிரச்சினை தலைதூக்கும்போது அதை பற்றி பேசி விவாதிப்பதும் அறிக்கை விடுவதும் பின்னர் மறந்துபோய் விடுவதும் வழக்கமாக இருந்துவருகின்றது. அந்த நிலைமை டயகம சிறுமி ஹிஷாலினி விடயத்திலும் இருந்துவிடக் கூடாது. சமூக வலைத்தளங்கள் உட்பட சமூகத்திலுள்ள சகலரும் ஒன்றிணைந்து அழுத்தம் கொடுத்து நீதி கிடைக்க பாடுபட வேண்டும். இந்தச் சிறுமியின் மரணம் சமூகத்துக்கு ஒரு படிப்பினையாகவும், எதிர்காலத்துக்கு எச்சரிக்கை விடுவதாகவும் அமைய வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

## இரத்தினபுரியில் 50 வீதத்துக்கு மேலான மாணவர்கள் போதைக்கு அடிமை!

### ஆய்வில் அதிர்ச்சித் தகவல்

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

இரத்தினபுரி மாவட்ட கல்வி நிலையங்களில் கல்வி கற்கும் மாணவர்களில் 50 சதவீத்திற்கும் அதிகமானவர்கள் போதைக்கு அடிமையாகியுள் ளதாக மாணவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தின் புத்திஜீவிகள் அமைப்பின் செயலாளர் கே.தியாகேஸ்வரன் நேற்றுமுன்தினம் இத்தகவலைத் தெரிவித்தார்.

இவ்விடயமாக அவர் ஊடகங்களுக்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

ஏற்கனவே போதைக்கு அடிமையான நண்பர்களினால் பெரும்பாலான மாணவர்களும் இளைஞர்களும் இப்பழக்கத்துக்கு இரையாகின் றனர். இந்நிலைமை மிகவும் வேதனைக்குரியது.

வீட்டிலிருந்து வெளியில் செல்லும் தமது பிள்ளைகள் செல்லும் இடம், பழகும் நண்பர்கள், அவர்களின் செயற்பாடுகள் தொடர்பில் பெற்றோர் அவதானம் செலுத்த தவறிவிடுகின்றனர். இவ்விளைவுகளின் பாரதூரமான நிலைமைகள் குறித்து பிள்ளைகள் தமது வாழ்க்கையை இழந்த பின்னரே பெற்றோர்கள் விட்ட தவறுகளை உணர்கின்றனர்.

இக்காலகட்டத்தில் பெற்றோர் இதனைவிடச் சிந்தித்து செயலாற்ற வேண்டும். எமது பிள்ளைகளுக்கு கல்விக்கான உதவிகளைக் கொடுப்பது போன்று சமயக் கல்விக்கும் முக்கியத்துவத்தை வழங்கவேண்டும். மேலதிக வகுப்புகளுக்காக செல்லும் பிள்ளைகள் போதைக்கு அடிமையாகும் சூழ்நிலை அதிகமாக உள்ளது.

இவ்விடயத்தில் பொறுப்புவாய்ந்தவர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும். ஞாயிற்றுக்கிழமைகளில் அறநெறி வகுப்புகளுக்கு மாணவர்களை தவறாது அனுப்பிவைத்தல் வேண்டும். இத்தினங்களில் மாணவர்களை வேறு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தக்கூடாது எனவும் அவர் தெரிவித்தார்

போதை எனப்படும்போது 50 வீதமான மாணவர்கள் எந்த தீய பழக்கவழக்கங்களுமற்ற நிலையில் காணப்படும்.

அதேவேளை, பீடி, சிகரெட் பாக்கு வகைகள் உட்பட தீய போதை ஏற்படுத்தக்கூடிய போதைப் பொருட்களை பாவிக்கின்றனர். அனைவரும் இந்த 50 வீதத்தில் அடங்குவர்.

தமிழன்

# வணிக உலகம்
Business world

www.thamilan.lk

GROWTH

# உலக ஜூனியர் தடகள சாம்பியன்ஷிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ள தருஷி கருணாரத்னவுக்கு வாழ்த்துகளைத் தெரிவிக்கும் கிரிஸ்புரோ






இலங்கையின் முன்னணி கோழி இறைச்சி உற்பத்தியாளரான கிரிஸ்ப்ரோ அறிமுகப்படுத்திய Crysbro Next Champ புலமைப்பரிசிலைப் பெற்ற தருஷி கருணாரத்ன இந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் கென்யாவின் நைரோபியில் நடைபெறவுள்ள உலக ஜூனியர் தடகள சாம்பியன்ஷிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளார். அவர் பெற்ற இந்த வெற்றிக்கு கிரிஸ்புரோ தமது வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளது. 800 மீற்றர் ஓட்டப்போட்டியில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தும் 16 வயது பாடசாலை மாணவியான தருஷி கருணாரத்ன தேசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் 2.07 நிமிடங்களுடன் இரண்டாவது இடத்தைப் பிடித்தார். அவர் ஓடி முடிக்க எடுத்த நிமிடங்களுக்கு அமைய இப்போட்டித் தொடரில் உலகளவில் 6ஆவது இடத்தையும், 18 வயதுக்குட்பட்டவர்களில் ஆசியாவில் முதலிடத்தையும் பெற்றுள்ளார்.

கண்டி மெனிக்ஹின்ன வலயம்-ஏ ரத்நாயக்க வித்தியாலயத்தின் மாணவியான தருஷி, சிறு வயதிலிருந்தே விளையாட்டுக்காக விசேட திறமைகள் பலவற்றை வெளிக்காட்டியதுடன், 400 மீற்றர் மற்றும் 800 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் அகில இலங்கை பாடசாலைகளுக்கான போட்டிகள் மற்றும் ஸ்ரீமத் ஜோன் டாபட் தடகளப் போட்டிகளில் 800 மீற்றர் ஓட்டப்போட்டியில் சாதனையாக 2.14 நிமிடங்களிலும், 400 மீற்றர் ஓட்டப்போட்டியில் 56.54 நிமிடங்களிலும் ஓடி வெற்றிபெற்ற வீராங்கனையாவார்.

இதுதொடர்பாக கருத்துத் தெரிவித்த கிரிஸ்புரோ குழுமத்தின் சிரேஷ்ட விற்பனை முகாமையாளர் அமோரெஸ் செல்லர், உலக ஜூனியர் தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் மாணவி தருஷி கருணாரத்ன இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்த தகுதி பெற்றிருப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இந்நிகழ்வில் அவர் ஒரு சர்வதேச பதக்கத்தை வெல்வார் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம். அவர் க்ரிஸ்ப்ரோ Crysbro Next புலமைப்பரிசில் திட்டத்திற்குத் தகுதி பெற்றுள்ளார். மேலும், இந்த தேசிய திட்டத்தின் செயல்திறனைப் பிரதிபலிப்பதில் அவர் பெற்ற வெற்றி இலங்கையின் விளையாட்டுத்துறையில் எதிர்கால ஒலிம்பிக் பதக்கம் வெல்லும் சம்பியனாக மாறுவதற்கான அவரது உறுதிப்பாட்டிற்கு ஒரு சான்றாகும். இளம் இலங்கையர்களின் எதிர்கால விளையாட்டுத் திறனைப் பாதுகாக்க இந்த உதவித்தொகை திட்டத்தில் கிரிஸ்புரோ ஒரு பெரிய முதலீடு செய்துள்ளது.'NOCSL-CRYSBRO Next Champ' புலமைப்பரிசில் திட்டத்தினால் இலங்கையில் நன்மை அடைந்துள்ள அனைத்து குழந்தைகளுக்கும் தருஷி ஒரு சிறந்த முன்மாதிரி என்று தெரிவித்தார்.

Crysbro Next Champ புலமைப்பரிசில் திட்டத்தின் இரண்டாம் கட்டமாக தேசிய அளவில் திறமையான 130 பாடசாலை மாணவர்களுக்கு சர்வதேச மட்டத்திற்கு கொண்டு செல்ல பயிற்சி, ஊட்டச்சத்து, மருத்துவம், போக்குவரத்து மற்றும் தங்குமிடம் என்பன வழங்கப்படுகின்றன. Crysbro Next Champ புலமைப்பரிசில் திட்டத்தின் முதல் கட்டத்தில், நாடு முழுவதிலுமிருந்து விளையாட்டு வீரர்களை மதிப்பீடு செய்து அறிமுகப்படுத்துவதோடு, அவர்களுக்கு புதிய பயிற்சி உத்திகள் மற்றும் ஊட்டச்சத்து ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன. அனைத்து கிரிஸ்புரோ சமூகப் பொறுப்புணர்வு திட்டங்களும் கிராமப்புற குழந்தைகளின் சமூக-பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்கு உதவுகின்றன. மேலும், Next Champ திட்டம் கிராமப்புறக் குழந்தைகளின் திறன்களை வளர்த்துக் கொள்ளவும், அவற்றை தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திற்கு கொண்டு செல்லவும் செயற்பட்டு வருகிறது.

இலங்கையின் விளையாட்டு நடவடிக்கைகளுக்கான முதன்மையான சங்கமான இலங்கையின் தேசிய ஒலிம்பிக் கமிட்டி சர்வதேச போட்டிகளை ஒருங்கிணைப்பதற்காக இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்குமுறை அமைப்பாகும். இலங்கையின் தேசிய ஒலிம்பிக் குழுவும் இலங்கை விளையாட்டு வீரர்களை சர்வதேச மட்டத்திற்கு உயர்த்துவதற்கு தேவையான செயல்திறன் நிலைக்கு ஊக்குவிக்கிறது.

1972ஆம் ஆண்டு வெறும் 100 கோழிக் குஞ்சுகளோடு தரமான மற்றும் சிறந்த படைப்புக்களை சந்தைப்படுத்தி மேலோங்கி நிற்கவேண்டுமென்ற விருப்பத்துடன் நிறுவப்பட்ட கிரிஸ்புரோ நிறுவனம், இலங்கையின் முதல் மற்றும் அதிநவீன முறையில் கோழி இறைச்சியை உற்பத்தி செய்து செங்குத்தாக உயர்ந்திருக்கும் ஒரு நிறுவனமாகும். இலங்கையில் முதலாவதாக அதிநவீன இயந்திரங்களை பயன்படுத்தி முழுமையாக கணினி மயப்படுத்தி (vertically intergrated) தமது உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. தமது கடின உழைப்பின் விளைவாக தற்போது பாரிய பண்ணைகள் மற்றும் தீவன ஆலைகளையும் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. நிறுவனத்தின் தாரக மந்திரமான 'பண்ணையிலிருந்து மேசைக் கரண்டி வரை'| என்ற திட்டமே வெற்றிக்குக் காரணியாகும். மேலும், இந்த வெற்றிக்கு நேரடி மற்றும் மறைமுக ஊழியர்கள், வெளிநாட்டவர்கள், உள்நாட்டு விவசாயிகள் மற்றும் இலங்கையிலுள்ள நுகர்வோர் ஆகியோரும் காரணமானவர்கள் ஆவர்.

## தன நிதானய
உத்தியோகபூர்வ முடிவுகள்

NLB

ஆங்கில எழுத்து: W
வெற்றி இலக்கங்கள்: 48 55 64 77
திகதி: 24.07.2021
சீட்டிழுப்பு இலக்கம்: 0545

| | கட்டமைப்பு | பரிசுகள் | வெற்றியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 1,000,000.00 | 0 |
| 2 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 100,000.00 | 3 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 3,000.00 | 50 |
| 4 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 1,000.00 | 154 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 100.00 | 3826 |
| 6 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூபா 60.00 | 2601 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூபா 20.00 | 65231 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூபா 20.00 | 12135 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூபா. 2,689,980.00
பரிசுகளை வென்ற வெற்றியாளர்களின் எண்ணிக்கை. 84,000

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத் தொகை
ரூ. 100,248,636.40

- ரூபா. 5 இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசின் வரி சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது.
- பரிசுத்தொகையை பெற்றுக்கொள்ளும் போது தேசிய அடையாள அட்டை கட்டாயமானது.
- சீட்டிழுப்பு தினத்திலிருந்து 6 மாதகாலத்திற்கு மாத்திரமே வெற்றி லொத்தர் செல்லுபடியாகும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD
இல 32 தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01,
தொலைபேசி: 0112-324324, 0114 607000
Web: www.nlb.lk

## கொவிசெத
உத்தியோகபூர்வ முடிவுகள்

NLB

சீட்டிழுப்பு இலக்கம்: 2810 சீட்டிழுப்பு திகதி: 24.07.2021
ஆங்கில எழுத்து: M
வெற்றி இலக்கங்கள்: 25 28 56 80

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 0 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 3 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 2,000.00 | 142 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 1,000.00 | 308 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 7716 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 5141 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 127960 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 23334 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றியாளர்களின் எண்ணிக்கை 164,604

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத் தொகை
ரூ. 4,895,120.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 80,920,302.40

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சமோ அதற்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD
இல 32 தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01,
தொலைபேசி: 0112-324324, 0114 607000
Fax: 0114 663416 Web: www.nlb.lk

சூடான செய்திகளுக்கு thamilan.lk உடன் இணைந்திருங்கள்

## Mega POWER
மெகா பவர்

NLB

சீட்டிழுப்பு இலக்கம்: 0863
உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி: 24.07.2021

ஆங்கில எழுத்து: W
சுப்பர் இலக்கம்: 26
வெற்றி இலக்கங்கள்: 14 43 62 71

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 1 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 1 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000.00 | 90 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500.00 | 166 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 4200 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 2770 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 67922 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 12503 |

இலங்கையின் அதிகூடிய சுப்பர் பரிசு
அடுத்த மெகா சுப்பர் பரிசு
ரூ. 138,330,424.40

அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை
ரூ. 3,412,300.00

N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01, தொலைபேசி: 0112-470662, 0114 607000 இணையம்: www.nlb.lk

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD

## மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4515
உத்தியோகபூர்வ முடிவுகள்

NLB

திகதி: 24.07.2021
வெற்றி எழுத்து: Q
வெற்றி இலக்கங்கள்: 9 5 3 6 7 2

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | | | | | | | வெற்றியீட்டியோர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1ஆம் பரிசு | ■ | 9 | 5 | 3 | 6 | 7 | 2 | ரூபா 2,000,000/- | 1 |
| 2ஆம் பரிசு | ■ | ■ | 5 | 3 | 6 | 7 | 2 | ரூபா 100,000/- | 9 |
| 3ஆம் பரிசு | ■ | ■ | ■ | 3 | 6 | 7 | 2 | ரூபா 10,000/- | 94 |
| 4ஆம் பரிசு | ■ | ■ | ■ | ■ | 6 | 7 | 2 | ரூபா 1,000/- | 913 |
| 5ஆம் பரிசு | ■ | ■ | ■ | ■ | ■ | 7 | 2 | ரூபா 100/- | 9079 |
| 6ஆம் பரிசு | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | 2 | ரூபா 20/- | 90105 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | | | | | | | வெற்றியீட்டியோர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7ஆம் பரிசு | ■ | 9 | 5 | 3 | 6 | 7 | ■ | ரூபா 10,000/- | 10 |
| 8ஆம் பரிசு | ■ | 9 | 5 | 3 | 6 | ■ | ■ | ரூபா 1,000/- | 93 |
| 9ஆம் பரிசு | ■ | 9 | 5 | 3 | ■ | ■ | ■ | ரூபா 100/- | 895 |
| 10ஆம் பரிசு | ■ | 9 | 5 | ■ | ■ | ■ | ■ | ரூபா 50/- | 9005 |
| 11ஆம் பரிசு | Q | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | ரூபா 20/- | 36110 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை – ரூ. 8,917,950.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 12,939,416.00

NLB வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்

தேசிய லொத்தர் சபை
32, தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு - 01.
தொலைபேசி: 011-4607000, 011-2324324. Fax: 011-4669416.
www.nlb.lk

## ஜாதிக සම්පත
JATHIKA SAMPATHA

NLB

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம்: 1124
திகதி: 24.07.2021
லக்னம்
வெற்றி இலக்கங்கள்: 5 9 9 7 9 4

வலமிருந்து இடமாக பரிசுக்கட்டமைப்பு

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 பரிசு | | 5 | 9 | 9 | 7 | 9 | 4 | ரூ. 1,000,000.00 | பரிசு | 1 |
| 02 பரிசு | | | 9 | 9 | 7 | 9 | 4 | ரூ. 100,000.00 | பரிசுகள் | 1 |
| 03 பரிசு | | | | 9 | 7 | 9 | 4 | ரூ. 10,000.00 | பரிசுகள் | 13 |
| 04 பரிசு | | | | | 7 | 9 | 4 | ரூ. 1,000.00 | பரிசுகள் | 148 |
| 05 பரிசு | | | | | | 9 | 4 | ரூ. 100.00 | பரிசுகள் | 1352 |
| 06 பரிசு | | | | | | | 4 | ரூ. 20.00 | பரிசுகள் | 13668 |

இடமிருந்து வலமாக பரிசுக்கட்டமைப்பு

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 07 பரிசு | | 5 | 9 | 9 | 7 | 9 | | ரூ. 10,000.00 | பரிசுகள் | 2 |
| 08 பரிசு | | 5 | 9 | 9 | 7 | | | ரூ. 1,000.00 | பரிசுகள் | 16 |
| 09 பரிசு | | 5 | 9 | 9 | | | | ரூ. 200.00 | பரிசுகள் | 139 |
| 10 பரிசு | | 5 | 9 | | | | | ரூ. 100.00 | பரிசுகள் | 1388 |
| 11 பரிசு | | | | | | | | ரூ. 20.00 | பரிசுகள் | 11397 |
| 12 பரிசு | வெற்றி இலக்கங்கள் ஆறும் எந்த ஒழுங்கில் பொருந்தினாலும் | | | | | | | ரூ. 200.00 | பரிசுகள் | 18 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ. 2,220,500.00

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத் தொகை அரசாங்க வரிச் சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசினைப் பெறுவதற்கு அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.


அடுத்த சனிக்கிழமைக்கான சுப்பர் பரிசு ரூ. 16,185,379.30

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD
32, தேசமான்ய என்.டபிள்யூ.ஜே முதலிகே மாவத்தை, கொழும்பு 01.
தொலைபேசி: 011 4607000, 011 2324324
பக்ஸ்: 011 4669416

# கடுக்காமுனை குளத்து நீரைப் பயன்படுத்தி 300 ஏக்கரில் இடைப்போக பயிர்ச்செய்கை மேற்கொள்ளத் தீர்மானம்

மட்டக்களப்பு - பட்டிப்பளை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கடுக்காமுனை வில்லு குளத்து நீரைப் பயன்படுத்தி இடைப்போக பயிர்ச்செய்கையை மேற்கொள்வது தொடர்பான ஆரம்பக் கூட்டம் கடுக்காமுனை பகுதியில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பட்டிப்பளை பிரதேச செயலகப் பிரிவில் கடுக்காமுனை குளத்து நீரைப் பயன்படுத்தி இடைப்போக பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்குத் தேவையான 300 ஏக்கர் விவசாய நிலப்பரப்பில், நீர்ப்பாசன திணைக்களத்தினால் தெரிவுசெய்யப்பட்ட 4 கண்டங்களுக்கு (கடுக்காமுனை, பண்டாரியாவெளி, படையாண்டவெளி மற்றும் படையாண்டகுளம்) எத்தனை ஏக்கர் நிலப்பரப்பு தேவை என்பதனை விவசாயிகளிடமிருந்து முன்மொழிவுகளைப் பெற்று நிலப்பரப்புக்களை 4 கண்டங்களுக்கும் வழங்குவதற்குத் தீர்மானம் எடுக்கப்பட்டது.





இதனடிப்படையில் கடுக்காமுனை, பண்டாரியாவெளி மற்றும் படையாண்டவெளி ஆகிய கண்டங்களுக்கு தலா 90 ஏக்கர் நிலப்பரப்பும், படையாண்டகுளம் கண்டத்திற்கு 30 ஏக்கர் நிலப்பரப்பும் ஒதுக்கப்பட்டுள்ளது. அத்தோடு விதைக்கப்படும் நெல்லினம் விதைப்பு ஆரம்ப மற்றும் முடிவு திகதி, நீர் விடும் திகதி, உழவுக்கூலி, ஏக்கருக்கான அறுவடைக்கூலி என்பற்றுக்கான தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட்டு ஏகமனதாக அனைத்து கண்ட விவசாயிகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனின் பணிப்புரைக்கு அமைய மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர் கணேசலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர் ராஜகோபாலசிங்கம், பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் சுபாகரன், பட்டிருப்பு பிரிவு உதவியாளர் மதியழகன், கமநலதிணைக்கள மாவட்ட உதவி பணிப்பாளர் ஜெகநாத், பட்டிப்பளை பிரதேச செயலாளர் தட்சணகௌரி தினேஷ், பட்டிப்பளை பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் பிரபாகன், பட்டிப்பளை பிரதேச சபை தவிசாளர் புஷ்பலிங்கம், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் பட்டிப்பளை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதி விவசாயிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# ஏறாவூரில் 8180 பேருக்கு கொவிட் தடுப்பூசி

(ஏறாவூர் நிருபர் - நாஸர்)

விமானப்படையினரின் ஒத்துழைப்புடன் ஏறாவூர்ப் பிரதேசத்தில் இதுவரை 8180 பேருக்கு சினோபார்ம் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளதுடன், 30 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் பணிகள் நேற்று (25) ஆரம்பிக்கப்பட்டன.





இங்கு அல்-ஜுப்ரிய்யா வித்தியாலயம், அல் - அஸ்ஹர் பெண்கள் உயர்தர பாடசாலை, மாக்கான் மாக்கார் தேசிய பாடசாலை மற்றும் டொக்டர் - அஹமட் பரீட் வித்தியாலயத்தின் பழைய கட்டடம் ஆகிய பொதுக் கட்டடங்கள் தடுப்பூசி ஏற்றும் பணிக்காக பயன்படுத்தப்படுகின்றன.

ஆண்கள், பெண்கள் என பொதுமக்கள் பெரும் ஆர்வத்துடன் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்வதாக பிரதேச சுகாதார வைத்தியதிகாரி சாபிறா வசீம் தெரிவித்தார்.

ஏறாவூர்ப் பிரதேசத்தில் 60, 50 மற்றும் 40 வயதிற்கு மேற்பட்டோருக்கு தடுப்பூசி வழங்கும் பணிகள் ஏற்கனவே நிறைவுற்றுள்ளபோதிலும் குறித்த காலப்பகுதியில் தடுப்பூசியினைப் பெற்றுக்கொள்ளாதவர்களுக்கும் தடுப்பூசி வழங்கும் நிலையங்களில் ஊசிமருந்து வழங்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# ஓட்டமாவடியில் நீராடச்சென்ற 12 வயது சிறுவன் மரணம்

(எச்.எம்.எம்.பர்ஸான்)

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி – பொத்தனை நீரோடையில் விழுந்து 12 வயது சிறுவன் ஒருவன் மரணமடைந்த சம்பவமொன்று நேற்று முன்தினம் (24) இடம்பெற்றுள்ளது.

தனது குடும்பத்துடன் சுற்றுலா சென்ற சிறுவன் நீரோடையில் குளிக்கும்போது நீரில் அடித்துச்செல்லப்பட்டு உயிரிழந்துள்ளான் .

இவ்வாறு உயிரிழந்த சிறுவனின் சடலம் நீண்டநேர தேடுதலுக்கு பின்னர் மீட்கப்பட்டுள்ளது. உயிரிழந்த சிறுவன் வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலைநகர் ரஹ்மானியா வீதியைச் சேர்ந்த நிபாஸ் முகம்மட் ஆசிக் என்று அடையாளம் காணப்பட்டுள்ளான்.

குறித்த சிறுவனின் உடல் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# விஞ்ஞான ஆசிரியர்களுக்கான வாண்மை விருத்தி செயலமர்வு

(பாண்டிருப்பு நிருபர்)

பட்டிருப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம்-06 தொடக்கம் தரம் 09 வரையான மாணவர்களுக்குக் கற்பிக்கும் விஞ்ஞான ஆசிரியர்களுக்கான வாண்மை விருத்திச் செயலமர்வு ஆசிரிய ஆலோசகர் சி.உதயசேகர் ஒழுங்கமைப்பில் நேற்று (25) பட்டிருப்பு வலயக்கல்வி அலுவலகத்தின் விஞ்ஞான பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் த.நடேசமூர்த்தி தலைமையில் கோட்டைக்கல்லாறு மகா வித்தியால ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் வளவாளர்களாக ஆசிரிய ஆலோசகர் சி.உதயசேகர், நந்தினி நடேசமூர்த்தி, இந்துஜா ஹேமதர்சன், பி.சபாரெத்தினம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இங்கு 21 ஆம் நூற்றாண்டில் ஆசிரியர்கள் பெறவேண்டிய திறன்கள், இந்த கொரோனா தொற்று இடர்காலத்தில் மாணவர்களின் அடைவு மட்டத்தை மேம்படுத்தும் புதிய திட்டங்களை வகுத்தல் ஆகியவை தொடர்பாக ஆசிரியர்களுக்கு ஆலோசனைகளும், வழிகாட்டல்களும் வழங்கப்பட்டன.

# வெருகலில் மணல் அகழ்வைப் பார்வையிட கூட்டமைப்பின் எம்.பி.க்கள் நேரடி விஜயம்

(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை- வெருகல் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள நாதன்ஓடையில் தொடர்ச்சியாக மணல் அகழ்வு முன்னெடுக்கப்பட்டு வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பான கள நிலைமைகளை ஆராய்வதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் இராசமாணிக்கம் சாணக்கியன் ஆகியோர் நேற்று (25) காலை அப்பகுதிக்குச் விஜயம் ஒன்றினை மேற்கொண்டனர்.



அத்துடன், அப்பகுதி மக்களிடம் பிரச்சினைகளையும் கேட்டறிந்தார்கள். இதன்போது வெருகல் பகுதியிலுள்ள விவசாய சங்கங்கள், சமூக அமைப்புக்கள், வெருகல் பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டிருந்தார்கள். இதேவேளை, மணல் அகழ்வினால் வெருகல் பகுதியில் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தெளிவுபடுத்தப்பட்டது.

# மக்களுக்குக் கிடைத்திருக்கும் அரிய வாய்ப்பை கட்டாயம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்

## அக்கரைப்பற்று முதல்வர் அதாஉல்லா அகமட் ஸகி

(நூருல் ஹுதா உமர்)

அக்கறைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய எல்லைக்குள் வசிக்கும் மக்களுக்கு கொரோனா தடுப்பூசி வழங்கும் செயற்றிட்டம் சனிக்கிழமை முதல் ஆரம்பமாகிறது எனும் நற்செய்தி மக்களை வந்தடைந்திருக்கிறது. கொவிட்-19 தீவிரத்தை இயலுமானவரை இந்நாட்டை விட்டு ஒழிப்பதற்கு அறிவார்ந்த மக்களின் முன்னால் இருக்கும் ஆக்கபூர்வமான சுகாதார பாதுகாவல் கேடயம் தடுப்பூசிகள் செலுத்துவதேயாகும். அரசினால் கிடைத்திருக்கும் இந்த அரிய வாய்ப்பினை தேவையுடையவர்கள் கட்டாயம் பயன்படுத்தி கொள்ள வேண்டும் என அக்கரைப்பற்று மாநகர சபை முதல்வர் அதாஉல்லா அகமட் ஸகி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும்,



கொரோனா பெரும் தொற்று பரவல் நமது நாட்டிலும் பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியிருக்கும் நிலையில், ஆபத்தான இத்தொற்றிலிருந்து எமது மக்களைப் பாதுகாத்திட சிறந்த தீர்வு தடுப்பூசிகளே ஆகும். "வெள்ளம் வருவதற்கு முன் அணை கட்ட வேண்டும்" என்பது சான்றோர் வாக்கு. அந்த வகையில், கொரோனாவின் கோரம் பெறுமதி வாய்ந்த நமது உயிர்களை ஆட்கொள்ளும் முன் நாம் தடுப்பூசி எனும் நோய் எதிர்ப்பு பாதுகாப்பு கவசத்தை தேர்ந்தெடுத்தல் அவசரமானதும், அவசியமானதுமாகும்.

கொவிட்-19 தடுப்பூசிகள் செலுத்துவதன் ஊடாக நம்மையும், நமது அன்பானவர்களையும், சுற்றத்தையும், முழு பிராந்தியத்தையும், நம் தாய் நாட்டினையும் அபாயம் மிக்க வைரஸின் பிடியில் இருந்து மீட்டெடுக்க முடியும். எனவே, பொறுப்பு வாய்ந்த ஒரு மாநகர முதல்வராக நான் உங்களிடம் வேண்டிக்கொள்வது ஏற்கனவே, தடுப்பூசிகள் செலுத்துவதன் அனுகூலங்கள் குறித்து சுகாதார நிபுணர்கள் போதியளவு நமக்கு அறிவுறுத்தியிருக்கின்றனர். அதுபோன்று யார் யார் தடுப்பூசியினை செலுத்திக்கொள்ள முடியும் என்கிற பூரண விபரங்களும் தரப்பட்டுள்ளன.

எனவே, பிரதேசத்தின் சுகாதார பாதுகாப்பில் முழு அக்கறையுடன் செயற்பட விரும்பும் கருங்கொடி மண்ணின் கனிவான மக்கள் கொவிட்-19 தடுப்பூசி வழங்கும் செயற்றிட்டத்திற்கு பூரண ஒத்துழைப்பினை நல்க வேண்டுமென பணிவுடன் வேண்டிக் கொள்கிறேன் – என்றார்.

# திருமலையில் போதைப்பொருளுடன் ஒருவர் கைது; ஒரு கிலோ 250 கிராம் கேரள கஞ்சா மீட்பு

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை மணிக்கூட்டு கோபுரத்திற்கு அருகில் மோட்டார் சைக்கிளில் கேரள கஞ்சாவை கொண்டுசென்ற நபரொருவரை கைதுசெய்துள்ளதாக திருகோணமலை தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் (24) இடம்பெற்றுள்ளது.

மன்னாரிலிருந்து திருகோணமலைக்கு கொண்டுவரப்பட்ட கேரள கஞ்சாவை அவரது வீட்டுக்கு கொண்டு செல்லும்போது விமானப்படையினரின் புலனாய்வுத் துறையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து, திருகோணமலை சர்தாபுர விசேட பொலிஸ் அதிரடிப்படை பொறுப்பதிகாரி எஸ்.ஏ.சீ.சிரந்த மற்றும் திஸாநாயக்க ஆகியோருடன் சென்ற றுவன் பிரதீப் தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட சோதனையின்போது குறித்த நபர் மோட்டார் சைக்கிளில் என்.சி. வீதியினூடாக மணிக்கூட்டு கோபுரம் பக்கமாக செல்லும்போது சோதனையிட்டபோது அவரிடமிருந்து ஒரு கிலோ 250 கிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டதாகவும், அவரின் மோட்டார் சைக்கிள் பறிமுதல் செய்யப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.



இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் திருகோணமலை - சமுத்ராகம ஓட்டை வீதியில் வசித்துவரும் துவான் ரஹீம் ஆப்தீன் (53 வயது) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சந்தேக நபரை விசாரணை செய்து வருவதாகவும், விசாரணையின் பின்னர் திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

# திருகோணமலை முச்சக்கரவண்டி சாரதிகளுக்கு கொரோனாவிலிருந்து பாதுகாப்புப் பெற விழிப்புணர்வு

(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை மக்கள் சேவை மன்றத்தின் ஏற்பாட்டில் முச்சக்கரவண்டி சாரதிகளுக்கான சமூகமட்ட விழிப்புணர்வு அமர்வு நேற்று முன்தினம் (24) மன்றத்தின் தலைவர் எம்.ரீ.எம்.பாரிஸ் தலைமையில் உப்புவெளி சர்வோதயா கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.





இதன்போது கொவிட் பரவலிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கான வழிமுறைகள், கொவிட் தடுப்பூசி தொடர்பான விழிப்புணர்வு மற்றும் போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்துவதற்கான முச்சக்கரவண்டி சாரதிகளின் சமூக வகிபாகம் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டு அவர்களுக்கான விழிப்புணர்வு பயிற்சி நடத்தப்பட்டது.

சமூக அபிவிருத்திக்கான நிறுவனத்தின் நிதி அனுசரணையில், திருகோணமலை மாவட்ட உண்மைக்கும் நல்லிணக்கத்திற்குமான வலையமைப்பு திட்டத்தின் கீழ், இந்த பயிற்சி அமர்வு இரண்டாம் கட்டமாக நடைபெற்றது.

இந்தப் பயிற்சி அமர்வுக்கு வளவாளர்களாக உப்புவெளிப் பிரதேச சிரேஷ்ட பொதுச் சுகாதார பரிசோதகர் லெஸ்லி, திருகோணமலை மாவட்ட செயலக அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒருங்கிணைப்பாளர் நிர்மல் மற்றும் உண்மைக்கும் நல்லிணக்கத்திற்குமான ஒருங்கிணைப்பாளரும் பிரபல சமூக செயற்பாட்டாளருமான பிரகலநாதன் ஆகியோர் வளவாளர்களாக கலந்துகொண்டு பயிற்சியை வினைத்திறன்மிக்க வகையில் நடத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மறைந்த சட்டத்தரணி சம்சுதீன் தூரநோக்குடன் செயலாற்றியவர்; முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் அனுதாபம்

சமூகத்தைப் பற்றி தூரநோக்குடன் சிந்தித்து, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உருவாக்கத்தில் ஸ்தாபகப் பெருந்தலைவருக்கு துணை புரிந்தவர்களில் மறைந்த சட்டத்தரணி எம்.ஐ.சம்சுதீன் குறிப்பிடத்தக்க ஒருவர் என அவரது மறைவையிட்டு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருருமான ரவூப் ஹக்கீம் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவரது அனுதாபச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

பாலமுனையின் மூத்த கல்விமானாகவும், முதலாவது கலைப்பட்டதாரியாகவும், பட்டப்பின் கல்வி டிப்ளோமா சான்றிதழ் பெற்றவராகவும், கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பயின்ற பாலமுனையின் முதலாவது சட்டப்பட்டதாரியாகவும் தன்னுடைய கல்வித் தகைமைகளை மேம்படுத்திக்கொண்டு, இளைஞர்களுக்கு ஓர் ஆதர்சமாகத் திகழ்ந்த அன்னாரின் இழப்பையிட்டுக் கவலையடைகின்றேன்.

பொது ஆசிரியர் பயிற்சியையும், பின்னர் வணிக சிறப்பு ஆசிரியர் பயிற்சியையும் மேற்கொண்டு, தனது பிரதேசத்திலும், தலைநகரிலும் ஆசிரியராகவும், அதிபராகவும் அவர் கல்விப்பணியும் ஆற்றியுள்ளார்.

1978ஆம் ஆண்டின் அரசியலமைப்புச் சட்டம், அத்துடன் அதன் தலைப் பிரசவமான விகிதாசாரப் பிரதிநிதித்துவம் ஆகியவற்றைத் தொடர்ந்து தங்களுக்கிடையே ஒற்றுமைப்படாத நிலையிலிருந்த முஸ்லிம் சமூகம் எதிர்காலத்தில் எத்தகைய துன்பங்களுக்கு முகங்கொடுக்கப்போகின்றது என்பதைத் தூரநோக்குடன் தெளிவாகப் புரிந்துகொண்டு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை ஸ்தாபிக்கும் பாரிய சவால்மிக்க போராட்டத்தில் பெருந் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரஃப்புடன் 1979ஆம் ஆண்டிலிருந்து தோள்கொடுத்து உழைத்தவர்களில் ஒருவராக மறைந்த சட்டத்தரணி சம்சுதீன் இருந்திருக்கிறார்.

அத்துடன் பெருந்தலைவர் அஷ்ரஃபின் முஸ்லிம் ஐக்கிய முன்னணியிலும் அவர் உறுப்பினராக இருந்து தலைவருக்கு உறுதுணையாகப் பணியாற்றியுள்ளார். 1980 செப்டெம்பர் 21ஆம் திகதி காத்தான்குடி பிரதான வீதியில் அமைந்திருந்த பாலர் பாடசாலையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முதலாவது மகாநாடு நடைபெற்றபோது களப்பணிகளில் காத்தான்குடி சட்டத்தரணி ஜவாட் முன்னணியில் நின்று உழைக்க, அலுவலகம் சார்ந்த பணிகளில் தன்னுடைய அதிபர் பதவியையும் பொருட்படுத்தாது அயராது உழைத்ததாக தலைவர் அஷ்ரஃப் அவரை நன்றியுடன் நினைவுகூர்வதுண்டு.

எல்லாம் வல்ல அல்லாஹ் அன்னாருக்கு மேலான ஜென்னதுல் பிர்தௌஸ் சுவன பாக்கியத்தை அருள்வதோடு, துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கும் ஆறுதல் அளிப்பானாக என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# கல்முனை பிராந்தியத்தில் ஒரேநாளில் 20 ஆயிரம் பொதுமக்களுக்கு கொரோனா தடுப்பூசி வழங்கிவைப்பு





*(பெரியநீலாவணை நிருபர்)*

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குட்பட்ட பகுதிகளில் கொரோனா சினோபார்ம் தடுப்பூசிகளை பொதுமக்களுக்கு வழங்கும் நடவடிக்கைகள் நேற்று முன்தினம் ஒரே நேரத்தில் காலை 8.30 மணிக்கு சகல பிரதேசங்களிலும் ஆரம்பித்துவைக்கப்பட்டது. பொதுமக்கள் ஆர்வத்துடன் வருகைதந்து தடுப்பூசிகளை ஏற்றிக்கொண்டனர். ஒரேநாளில் 21,158 நபர்களுக்கு தடுப்பூசிகளை வழங்கி, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவு கிழக்கு மாகாணத்தில் சாதனை புரிந்துள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பணிப்புரைக்கமைய கல்முனை பிராந்தியத்திற்கு கடந்த 23ஆம் திகதி ஐம்பதினாயிரம் தடுப்பூசிகள் அனுப்பிவைக்கப்பட்டன. பிராந்தியத்தின் பெரியநீலாவணை தொடக்கம் பொத்துவில் வரைக்குமான 13 சுகாதார வைத்திய அதிகாரிகள் அலுவலகத்திற்கும் அவை பகிர்ந்தளிக்கப்பட்டன.

இதனையடுத்து விசேடமாக ஏற்பாடு செய்யப்பட்ட 37 தடுப்பூசி ஏற்றும் நிலையங்களிலும் 13 வைத்தியசாலைகளிலும் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் முன்னுரிமை அடிப்படையில் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் அரச திணைக்களங்களில் பணியாற்றும் உத்தியோகத்தர்களுக்கு தனியாகவும் கர்ப்பிணி, பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் 60 வயதுக்கு மேற்பட்ட பிரஜைகளுக்கு வேறாகவும் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன.

ஒவ்வொரு தடுப்பூசி ஏற்றும் நிலையங்களிலும் வைத்தியர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ உத்தியோகத்தர்கள், சுகாதார ஊழியர்கள் என 2,000 உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

25 வாகனங்கள், 10 அம்பியூலன்ஸ்கள் இதைத்தவிர இராணுவத்தினர், பொலிஸார், கடற்படை உத்தியோகத்தர்கள் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் மற்றும் தொண்டர்கள், ஊடகவியலாளர்கள் போன்றோரது பங்களிப்பின் காரணமாகவே கிழக்கு மாகாணத்தில் ஒரேநாளில் அதிகூடியதாக காணப்பட்ட 10 ஆயிரம் தடுப்பூசி வழங்கலை முறியடித்து, 20 ஆயிரம் தடுப்பூசிகளை கல்முனை பிராந்தியத்தில் வழங்கி புதிய சாதனை பதிவுசெய்யப்பட்டுள்ளது.

கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் தடுப்பூசி ஏற்றி ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு சுகாதார வைத்திய அதிகாரி ஏ.ஆர்.எம்.அஸ்மி தலைமையில் கல்முனை அல்-பஹ்ரியா தேசிய பாடசாலையில் இடம்பெற்றது.

இதில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஜி.சுகுணன், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே. டி சுஜித் பிரியந்த, பிரதேச செயலாளர் ஜெ.லியாகத் அலி, பிராந்திய தொற்றுநோய் தடுப்பு வைத்திய அதிகாரி ஆர்.ரமேஷ், கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.புவனேந்திரன் உட்பட வைத்திய அதிகாரிகள் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

பெரியநீலாவணை, மருதமுனை, பாண்டிருப்பு, கல்முனை, கல்முனைக்குடி, நற்பிட்டிமுனை, நாவிதன்வெளி, மத்தியமுகாம், காரைதீவு, சம்மாந்துறை, சாய்ந்தமருது, நிந்தவூர், பாலமுனை, அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, இறக்காமம், திருக்கோவில், பொத்துவில் போன்ற 13 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் மக்கள் ஆர்வத்துடன் வருகைதந்து தடுப்பூசிகளை பெற்றுக் கொண்டனர்.

# மட்டு. கரடியனாறில் ஐந்து இடங்களில் மணல் அகழ்வில் ஈடுபட்ட 23 பேர் கைது

## 23 உழவு இயந்திரங்களும் மீட்பு



*(ஏறாவூர் நிருபர் - நாஸர்)*

மட்டக்களப்பு கரடியனாறு பொலிஸ் பிரதேசத்திலுள்ள ஐந்து இடங்களில் மணல் கொள்ளையில் ஈடுபட்டிருந்த 23 வாகனங்கள் மற்றும் அவற்றின் 23 சாரதிகளும் கைதுசெய்யப்பட்டுள்ளதாக கரடியனாறு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் துஷார ஹேமச்சந்திர நேற்று தெரிவித்தார்.

அனுமதிப்பத்திரமின்றி வாவிக்குள் மணல் அகழ்வில் ஈடுபட்டமை மற்றும் ஏற்றிச் சென்றமை இவர்கள் மீதான குற்றச்சாட்டுகளாகும். கரடியனாறு பொலிஸார் மற்றும் அறந்தலாவ விசேட அதிரடிப்படையினரும் மேற்கொண்ட நடவடிக்கையின்போது இச்சட்டவிரோத செயற்பாடு தடுக்கப்பட்டுள்ளது.

மூன்று ரிப்பர் வாகனங்கள் மற்றும் இருபது உழவு இயந்திரங்களும் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதுடன், கைதுசெய்யப்பட்டவர்கள் பொலிஸ் பிணையில் விடுதலைசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் எதிர்வரும் 28ஆம் திகதி ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றில் ஆஜராகவேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

முந்தன் குமாரவெளி வாவியில் மணல் அகழ்ந்த 10 உழவு இயந்திரங்கள் அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டன.

இதேவேளை, கொஸ்கொல்ல, ஈரளக்குளம், மரப்பாலம் மற்றும் இலுப்படிச்சேனை ஆகிய பிரதேசங்கள் ஊடாக அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிச்சென்ற 23 உழவு இயந்திரங்களை கரடியனாறு பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த மூவர் அடங்குவதாக பொலிஸார் கூறினர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கொரோனா தடுப்பூசி ஏற்றல் ஆரம்பம்

*(அட்டாளைச்சேனை நிருபர்)*

அட்டாளைச்சேனை, ஒலுவில், பாலமுனை உட்பட அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கொவிட்-19 சினோபார்ம் தடுப்பூசி ஏற்றும் பணிகள் நேற்று துரிதமாக நடைபெற்று வருவதாக சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.அகிலன் தெரிவித்தார்.

இந்த தடுப்பூசிகள் நேற்று முன்தினம் தாய்மார்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் முதலானோர்க்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் நடைபெறுகின்றன.

தடுப்பூசி ஏற்றும் மையங்களாக ஒலுவில் அல்-ஹம்றா மகா வித்தியாலயம், பாலமுனை மின்ஹாஜ் மகா வித்தியாலயம், அட்டாளைச்சேனை தேசிய பாடசாலை, அட்டாளைச்சேனை மாவட்ட வைத்தியசாலை, தீகவாபி ஆகிய இடங்களில் தடுப்பூசி ஏற்றப்





சனிக்கிழமை முதல் காலை 8 மணிமுதல் மாலை 5 மணி வரை எமது சுகாதாரப் பிரிவில் 30 வயதிற்கு மேற்பட்ட பொதுமக்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் வெளிக்கள உத்தியோகத்தர்கள், உத்தியோகத்தர்கள், அதிகாரிகள், அதிபர் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோர்களுக்கு இத்தடுப்பூசி ஏற்றும் பணிகள் அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள 5 தடுப்பூசி ஏற்றும் மையங்களில் இடம்பெற்று வருகின்றது. நேற்று முன்தினம் அட்டாளைச்சேனை பிரதேச சுகாதாரப் பிரிவில் 2,404 பேருக்கு கொவிட்-19 சினோபார்ம் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளன.

இதன்படி அட்டாளைச்சேனை மாவட்ட வைத்தியசாலையில் கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் முதலானோர்க்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் நடைபெறுகின்றன.

படுகிறமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஜீ.சுகுணன் களவிஜயம் மேற்கொண்டு தடுப்பூசி ஏற்றும் பணிகளைப் பார்வையிட்டார்.

குறிப்பிட்ட காலத்தில் அனைவரும் தவறவிடாது நேரகாலத்தோடு முன்வந்து தத்தமது வதிவிடத்திற்கு அருகிலுள்ள கொவிட்-19 சினோபார்ம் தடுப்பூசிகள் ஏற்றும் மையங்களுக்குச் சென்று தமக்குரிய தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளுமாறு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.அகிலன் கேட்டுக்கொண்டார்.

## தன நிதானய

NLB

உத்தியோகபூர்வ முடிவுகள்

ஆங்கில எழுத்து: Y

வெற்றி இலக்கங்கள்: 03 12 28 71

திகதி: 25.07.2021

சீட்டிழுப்பு இலக்கம்: 0546

| | கட்டமைப்பு | பரிசுகள் | வெற்றியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 1,000,000.00 | 0 |
| 2 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 100,000.00 | 2 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 3,000.00 | 63 |
| 4 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 1,000.00 | 127 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 100.00 | 3322 |
| 6 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூபா 60.00 | 2284 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூபா 20.00 | 56957 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூபா 20.00 | 10822 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூபா. 2,340,820.00
பரிசுகளை வென்ற வெற்றியாளர்களின் எண்ணிக்கை. 73,577

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத் தொகை
ரூ. 100,418,788.80

- ரூபா. 5 இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசின் வரி சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது.
- பரிசுத்தொகையை பெற்றுக்கொள்ளும் போது தேசிய அடையாள அட்டை கட்டாயமானது.
- சீட்டிழுப்பு தினத்திலிருந்து 6 மாதகாலத்திற்கு மாத்திரமே வெற்றி லொத்தர் செல்லுபடியாகும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD

இல 32 தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01,
தொலைபேசி: 0112-324324, 0114 607000
Web: www.nlb.lk

## மஹஜன சம்பத

சீட்டிழுப்பு இலக்கம்: 4516

உத்தியோகபூர்வ முடிவுகள்

NLB

திகதி: 25.07.2021

வெற்றி எழுத்து: S
வெற்றி இலக்கங்கள்: 0 6 0 0 9 2

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1ஆம் பரிசு | 0 6 0 0 9 2 | ரூபா 2,000,000/- | 1 |
| 2ஆம் பரிசு | 6 0 0 9 2 | ரூபா 100,000/- | 9 |
| 3ஆம் பரிசு | 0 0 9 2 | ரூபா 10,000/- | 82 |
| 4ஆம் பரிசு | 0 9 2 | ரூபா 1,000/- | 801 |
| 5ஆம் பரிசு | 9 2 | ரூபா 100/- | 8127 |
| 6ஆம் பரிசு | 2 | ரூபா 20/- | 80368 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 7ஆம் பரிசு | 0 6 0 0 9 | ரூபா 10,000/- | 9 |
| 8ஆம் பரிசு | 0 6 0 0 | ரூபா 1,000/- | 80 |
| 9ஆம் பரிசு | 0 6 0 | ரூபா 100/- | 814 |
| 10ஆம் பரிசு | 0 6 | ரூபா 50/- | 8053 |
| 11ஆம் பரிசு | S | ரூபா 20/- | 32084 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை – ரூ. 8,236,790.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.13,241,360.00

NLB வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்

தேசிய லொத்தர் சபை
32, தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு - 01.
தொலைபேசி: 011-4607000, 011-2324324. Fax: 011-4669416.
www.nlb.lk

குடான செய்திகளுக்கு இணைந்திருங்கள்
thamilan.lk உடன் இணைந்திருங்கள்

## சுபிரி வாசனா சம்பத

உத்தியோகபூர்வ முடிவுகள்

NLB

சீட்டிழுப்பு திகதி: 25.07.2021
சீட்டிழுப்பு இலக்கம்: 1603

சுப்பர் இலக்கம்: 11
வெற்றி இலக்கங்கள்: 18 33 50 55

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 பரிசு | 4 இலக்கங்களும் பொருந்துமாயின் | ரூ. 500,000.00 | 1 |
| 2 பரிசு | சுப்பர் இலக்கத்துடன் 3 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 20,000.00 | 2 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 1,000.00 | 78 |
| 4 பரிசு | சுப்பர் இலக்கத்துடன் 2 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 200.00 | 213 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 100.00 | 3040 |
| 6 பரிசு | சுப்பர் இலக்கத்துடன் 1 இலக்கம் பொருந்துமாயின் | ரூ. 60.00 | 2657 |
| 7 பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | ரூ. 20.00 | 37380 |
| 8 பரிசு | சுப்பர் இலக்கம் மாத்திரம் பொருந்துமாயின் | ரூ. 20.00 | 9117 |

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத் தொகை
ரூ. 2,053,960.00

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சமோ அதற்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 3,428,996.40

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD

இல 32 தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01,
தொலைபேசி: 0112-324324, 0114 607000
Fax: 0114 663416 Web: www.nlb.lk

## Mega Power

මෙගා පවර්
மெகா பவர்

சீட்டிழுப்பு இலக்கம்: 0864

உத்தியோகபூர்வ முடிவுகள்

திகதி: 25.07.2021

NLB

ஆங்கில எழுத்து: P
சுப்பர் இலக்கம்: 04
வெற்றி இலக்கங்கள்: 26 27 52 57

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 0 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 3 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000.00 | 61 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500.00 | 136 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 3509 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 2198 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 57091 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 10514 |

இலங்கையின் அதிகூடிய சுப்பர் பரிசு

அடுத்த மெகா சுப்பர் பரிசு
ரூ.138,525,858.00

அடுத்த பவர் சுப்பர் பரிசு
ரூ.10,000,000.00

அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு
ரூ.10,000,000.00

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை
ரூ. 2,219,920.00

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD

## கொவிசெத

உத்தியோகபூர்வ முடிவுகள்

NLB

சீட்டிழுப்பு இலக்கம்: 2811
சீட்டிழுப்பு திகதி: 25.07.2021

ஆங்கில எழுத்து: Q
வெற்றி இலக்கங்கள்: 05 11 43 79

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 1 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 8 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 2,000.00 | 112 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 1,000.00 | 285 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 6788 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 4375 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 111486 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 20446 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றியாளர்களின் எண்ணிக்கை 143,501

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத் தொகை
ரூ. 5,801,440.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 80,984,947.20

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சமோ அதற்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD

இல 32 தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01,
தொலைபேசி: 0112-324324, 0114 607000
Fax: 0114 663416 Web: www.nlb.lk

# மட்டு. மாவட்டத்தில் மேய்ச்சல்தரைகள் அரசாங்கத்தால் கபளீகரம்; நீதிமன்றத்தால் இடைக்கால தடைவிதித்தும் தொடரும் ஆக்கிரமிப்பு

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் கண்டனம்

(வீரமுனை நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அனைத்து மேய்ச்சல்தரைகளையும் கபளீகரம் செய்து திட்டமிட்ட குடியேற்றங்களை நிறுவி தமிழ் மக்களின் பொருளாதாரத்தையும், பண்ணையாளர்களின் வாழ்வாதாரத்தையும் இல்லாமல்செய்யும் சதிவேலைகள் தற்போது அரங்கேறுகின்றன -என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழரசு கட்சி ஊடக செயலாளரும், இலங்கைத் தமிழரசு கட்சி பட்டிருப்பு தொகுதித் தலைவருமான பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

மேய்ச்சல்தரைகளின் தற்போதைய நிலைவரம் தொடர்பாக ஊடகவியலாளர்களால் வினவப்பட்டபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்றரை இலட்சம் எருமை, பசு மாடுகள் உள்ளன. கால்நடைகள் மேய்வதற்காக மட்டக்களப்பில் மாதவனை, மயிலத்தமடு, கித்துள் பகுதி, கெவிளியாமடு என பல இடங்கள் நூறு வருடங்களுக்கு மேலாக மேய்ச்சல்தரைகளாகவுள்ளன.

அந்தக் காணிகள் அரச மற்றும் வன இலாகாவுக்கு சொந்தமான காணிகளாகவும், மகாவலி திட்ட காணிகளாகவும் தற்போது 2010ஆம் ஆண்டுக்குப் பின்னர் அந்தந்த திணைக்களங்கள் உரிமை கோரியிருந்தாலும், அந்த இடங்களில் மாடுகள் மேய்ச்சல்தரைகளாக காலம் காலமாக பாவித்து வந்ததுக்கு எந்தத் தடைகளும் பெரியளவில் இருக்கவில்லை.

போராட்டம் இடம்பெற்ற 2010ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்திலும் அங்கு மாடுகள் மேய எந்தத் தடைகளும் எவராலும் இருந்ததில்லை. பண்ணையாளர்கள் அங்கு சென்று தமது மாடுகளை மேய்த்து வந்தனர். ஆனால், கோட்டாபய அரசாங்கம் 2020ஆம் ஆண்டு பதவி ஏற்றதற்கு பிற்பட்ட காலத்தில் கிழக்கு மாகாண ஆளுநராக அநுராதா யகம்பத் நியமிக்கப்பட்டதற்கு பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்தில் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த சிங்கள மக்களை அத்துமீறி வரவழைத்து சேனைப் பயிர்ச்செய்கை, முந்திரிச்செய்கை என்ற போர்வையில் கோரளைப்பற்று, மண்முனை தென்மேற்கு பிரதேச செயலக பிரிவுகளிலும் திட்டமிட்ட குடியேற்றம் இடம்பெறுகிறது.

அதேவேளை, கித்துள் பகுதிகளில் மட்டக்களப்பு மாவட்ட எல்லையில் இராணுவ பயிற்சி என்ற போர்வையில் துப்பாக்கி சுடும் பயிற்சிமுகாம் அமைக்கப்பட்டு, மாடுகள் மேயும் இடங்களை இலக்குவைத்து காடுகளில் துப்பாக்கி சுடும் சத்தம் மூலம் மாடுகள் நாலாபுறமும் சிதறி ஓடும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் மாடுகள் சுதந்திரமாக அந்த காட்டுப்பகுதிகளில் மேய முடியாமல் உள்ளது, மாடுகளை மேய்க்கும் பண்ணையாளர்களும் அங்கு செல்ல முடியாமல் அச்சத்துடன் உள்ளனர்.

இந்த விடயங்களை ஆராயும்போது மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மூன்றரை இலட்சம் மாடுகளும் மேய்க்க முடியாமல் மாடு வளர்ப்பை திட்டமிட்டு மட்டக்களப்பில் முழுமையாக இல்லாமல் செய்து, பூர்வீக மட்டக்களப்பு மாவட்டத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை நிறுவி திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் தமிழ் இன விகிதாசாரத்தைக் குறைத்து பெரும்பான்மையாக சிங்கள மக்களை குடியமர்த்தியதைபோன்று எதிர்காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தையும் தமிழர் இன விகிதாசாரத்தை குறைப்பதற்கான சதியாகவே இதை அவதானிக்க முடிகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பொறுத்தவரை இதனை தடுப்பதற்காக சம்பந்தப்பட்ட அமைச்சர்கள், கிழக்கு மாகாண ஆளுநர் என்பவர்களிடம் பலமுறை எடுத்துக்கூறியும் ஏனோ தானோ என்ற அலட்சியப்போக்கே காணமுடிகிறது.

இதனாலேயே சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு இடைக்கால தடைவிதிப்பு மேற்கொள்ளப்பட்டபோதும், அதையும் மீறி ஆக்கிரமிப்பு தொடர்கிறது. சட்டங்களும் திட்டங்களால் மீறப்படுகின்றன.


ஆளும் கட்சி தமிழ் அரசியல்வாதிகள் கிழக்கை மீட்போம் என்றவர்கள் எல்லாம் கிழக்கை



விற்பதற்கு துணை போகின்றவர்களாக மௌனம் காக்கின்றனர். இந்த உண்மையை தமிழ்மக்கள் புரிந்துகொள்ள வேண்டும் எனவும் மேலும் கூறினார்.

# பிரதேச செயலக கலாசார திணைக்களத்தினால் கிராமிய கலைகளை மீளக் கட்டியெழுப்பும் நிகழ்வு

## மண்முனை மேற்கில் ஆரம்பம்



(மண்முனை நிருபர்)

மட்டக்களப்பு மண்முனை மேற்கு பிரதேசத்தில், பிரதேச கலாசார பிரிவினால் கிராமிய கலை எழுச்சி எனும் நிகழ்ச்சித் திட்டத்திற்கமைவாக கிராமிய கலைகளை மீளக் கட்டியெழுப்பும் நிகழ்வு கடந்த வாரம் தொடக்கம் கிராமங்கள்தோறும் ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிகழ்வின் ஓர் அங்கமாக கடந்த வெள்ளிக்கிழமை விளாவட்டவான், நாவற்காடு, இறக்கத்துமுனை கிராமங்களில் மண்முனை மேற்கு பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் எம்.சிவானந்தராஜாவினால் முன்னெடுக்கப்பட்டது.

முதிய கலைஞர்களுக்கு பாரம்பரிய கலைகளை மீளக் கட்டியெழுப்புவதனூடாக இளம் கலைஞர்களுக்கும், இளம் சந்ததியினருக்கும் இவ்வாறான கிராமிய பாரம்பரிய கலைகளை கொண்டுசெல்ல முடியும் என்பதற்கமைவாக, இந்நிகழ்வு கொவிட் சூழலை கருத்திற்கொண்டு, கிராமங்கள்தோறும் இரு கலைஞர்களூடாக இந்த ஆற்றுகை இடம்பெற்றுவருவதாக கலாசார உத்தியோகத்தர் எம்.சிவானந்தராஜா தெரிவித்தார்.

இதன்போது முதிய கலைஞர்களுக்கு கிழக்கு மாகாண கலாசார திணைக்களத்தினால் அடையாள அட்டை பெறுவதற்கான விண்ணப்பங்களும் வழங்கப்பட்டன.

# கிண்ணியா வலயக்கல்வி அலுவலகத்திற்குட்பட்ட 13 பாடசாலைகளுக்கு 781 டெப் கணினிகள் வழங்கிவைப்பு



(கிண்ணியா நிருபர்)

கிண்ணியா வலயத்துக்கான டெப் கணினிகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வலயக்கல்வி அலுவலகத்தில் இடம்பெற்றது.

கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் மாணவர்களின் கல்வி அறிவை மேம்படுத்தும் நோக்கில் டெப் வழங்கும் வேலைத்திட்டத்திற்கமைய திருகோணமலை மாவட்டத்திலுள்ள கல்வி வலயங்களுக்கும் டெப் கணினிகள் வழங்கப்பட்டன. அதனடிப்படையில் முதல் கட்டமாக கிண்ணியா வலயக்கல்வி அலுவலகத்திற்கு 781 டெப் கணினிகள் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவருமான கபில நுவன் அதுகோரலவினால் வழங்கப்பட்டன.

முதல் கட்டமாக கிண்ணியா வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட 13 பாடசாலைகளுக்கு 781 டெப் கணினிகள் இதன்போது வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள் easthamilan@gmail.com

# வாகரை பிரதேச மாணவர்களுக்கு உதவி



(மீராவோடை நிருபர்)

மட்டக்களப்பு - வாகரை பிரதேசத்தின் மதுரங்கேணிக்குளம், கிருமிச்சை, கொக்குவில் கிராமங்களிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு உதவி வழங்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

குறித்த பிரதேச மாணவர்கள் கொரோனா தொற்று காரணமாக தமது கல்வி நடவடிக்கைகளை இணையவழி, தொலைத்தொடர்பு வசதிகளினூடாக முன்கொண்டுசெல்வதில் பாரிய சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.

இதனைக் கருத்திற்கொண்ட இராணுவத்தினர் மற்றும் மட்டக்களப்பு பாடும் மீன் 306 சீ-2, லயன்ஸ் கழகத்தினர் ஆகியோர் இணைந்து கணினி மற்றும் தொலைத்தொடர்பு உள்ளிட்ட இலத்திரனியல் ஊடக சாதனங்களை அன்பளிப்பு செய்தனர்.

அத்துடன், இவ்வருடம் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கு கடந்த கால வினா-விடை பத்திரம் மற்றும் பாடசாலை உபகரணங்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சன்ன வீரசூரிய உள்ளிட்ட இராணுவ உயர் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர். இராணுவத்தினர் மேற்கொண்டுவரும் இம் மனிதாபிமான பணிகளுக்கு பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் தமது நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனா தடுப்பூசி ஏற்றும் பணிகளை பார்வையிட பைசல் காசிம் எம்.பி. நிந்தவூருக்கு நேரடி விஜயம்



(கே.எ.ஹமிட்)

சுகாதார அமைச்சின் தொற்றுநோய் தடுப்புப் பிரிவினால் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு அனுப்பிவைக்கப்பட்ட 'சினோபார்ம்' தடுப்பூசிகள் ஏற்றும் பணிகள் நேற்று முன்தினம் நிந்தவூர் பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்டன. இப்பணிகளை பார்வையிடும் நோக்கில் நாடாளுமன்ற உறுப்பினர் பைசல் காசிம் நிந்தவூரில் அரச ஊழியர்களுக்கு அமைக்கப்பட்டிருக்கும் தடுப்பூசி மையங்களில் ஒன்றான கமு/அல் மஷ்ஹர் பெண்கள் தேசிய பாடசாலைக்கு சென்றிருந்தார்.

# பெண்கள் தலைமைதாங்கும் 1400 குடும்பங்களுக்கு 3 மில்லியன் பெறுமதியான உலருணவுப் பொருட்கள்

## மட்டக்களப்பில் வழங்கிவைப்பு

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனாவால் பாதிக்கப்பட்ட பெண்கள் தலைமைதாங்கும் 1400 குடும்பங்களுக்கு 3 மில்லியன் பெறுமதியான உணவுப்பொருட்கள் வழங்கப்பட்டன.



நாட்டில் ஏற்பட்ட கொரோனா காரணமாக நாட்டில் சில பகுதிகள் தனிமைப்படுத்தப்பட்டிருப்பதோடு இப்பிரதேச மக்கள் தமது அன்றாட தேவைகளை பூர்த்திசெய்ய முடியாத நிலையில் உள்ளனர். இவர்களுக்கான உதவிகளை அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்கும் நிகழ்வுகள் தொடர்ச்சியாக நாடுபூராகவும் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்திலும் இவ்வாறான அசாதாரண நிலையினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்காக உலருணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு அமெரிக்க மிஷன் மண்டபத்தில் கிழக்கு மாகாண அபிவிருத்தி ஒன்றிய பணிப்பாளர் எச்.எம்.மொகமட் புகாரி தலைமையில் இடம்பெற்றது. மாவட்டத்தின் 9 பிரதேச செயலக பிரிவிலும் தெரிவுசெய்யப்பட்ட பெண்கள் தலைமைதாங்கும் 1400 குடும்பங்களுக்கும் விசேட தேவையுடைய குடும்பங்களுக்கும் ஒரு குடும்பத்திற்கு சுமார் 3000 ருபா பெறுமதியான மொத்தம் ரூபா 3 மில்லியன் பெறுமதியுள்ள உலருணவுப் பொதி வழங்கப்பட்டது.

இந்நிகழ்விற்கு அரசாங்க அதிபரின் பிரதிநிதியாக பிரதம அதிதியாக மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் எஸ்.வாசுதேவன் கலந்துகொண்டு இந்த உலருணவுப் பொதி களை வழங்கினார்.இந்நிகழ்வில் கிழக்கு மாகாண அபிவிருத்தி ஒன்றிய உத்தியோகத்தர், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# அரசாங்கம் தமிழர்கள் மீது கடும்போக்கான செயற்பாடுகளை கொண்டுள்ளது

## நாடாளுமன்ற உறுப்பினர் கலையரசன் தெரிவிப்பு



(வீரமுனை நிருபர்)

அரசோடு இணைந்து பயணிப்பவர்கள் அரசுக்கு துதி பாடுபவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேவையா, இல்லையா என்பதை மக்கள்தான் உணர்ந்து புரிந்துகொள்ள வேண்டும் - என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.கலையரசன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் செயற்பாடுகள் தொடர்பாக வினவியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

தமிழ் மக்கள், இந்த நாட்டில் ஒரு சிறுபான்மை இனம். அவ்வாறான இனம் விடுதலை, சமாதானத்தை நோக்கி தீர்வைப்பெற பயணிக்கிறது. கடந்த நல்லாட்சி அரசில் ஐக்கிய தேசியக் கட்சியினர் சில விடயங்களை எங்களோடு இணைந்து கையாண்டார்கள். அந்த விதத்தில் மைத்திரி - ரணில் தலைமையிலான அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி நல்லாட்சி அரசு நீடிக்கவேண்டும் என்ற அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்பட்டது. ஆனால், நல்லாட்சி அரசுடன் இணைந்து செயற்பட்ட காலத்திலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்தவொரு அமைச்சுப் பதவிகளையும் பெறவில்லை.

இந்த கோட்டாபய அரசாங்கத்தில் எங்கள் தலைவர்கள் தமிழ்மக்கள் சார்ந்த விடயங்களைப் பேச முற்படுகிறபோது, இதயசுத்தியோடு பேச முன்வருவதாக இல்லை. ஆகவே, இதுதான் இன்றைய நடைமுறையாக இருக்கிறது.

எக்கட்சியாக இருந்தாலும், எங்களுடைய தமிழ் மக்களின் அடிப்படை விடயங்களை செவி கொடுத்து கேட்பதற்கு அக்கறை காட்டுபவர்களாக இருந்தால், நிச்சயமாக எவரோடும் பேசுவோம். அதற்காக பெரும்பான்மை கட்சிகளை பாதுகாத்து வழிநடத்தவேண்டிய தேவை எங்களுக்கு இல்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிகவும் ஒற்றுமையாகவே செயற்படுகிறது. நாங்கள் ஏனைய கட்சிகளைபோன்று முரண்பாடான ஒரு சூழலில் இருக்கவில்லை. ஜனநாயக கட்சி என்ற அடிப்படையில் பல கருத்து முரண்பாடுகள் வழமையாகவே ஏற்படும். ஆகவே, கூட்டமைப்பு தற்போது பலமான கட்டமைப்பாகவே இருக்கிறது.

கடந்த கால யுத்த சூழலில் தமிழ்மக்கள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தார்கள். எனவே, இந்த நாட்டில் தமிழர்களைத் திட்டமிட்டு அழிக்கின்ற - அடக்குகின்ற செயற்பாடுகள் தொடர்ச்சியாக இடம்பெற்றுள்ளன. இதயசுத்தியோடு நல்நோக்கோடு செயற்படுகின்ற அரசாங்கமாக இருந்திருந்தால் நிச்சயமாக தமிழர்களை அரவணைத்திருக்க வேண்டும்.

2009ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்தில் பாரிய இராணுவ நடவடிக்கைகள் நாட்டில் இருந்தன. விடுதலைப் புலிகள் பலமாக இருந்தார்கள். புலிகளின் போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பிற்பாடு, தமிழ் மக்கள் சார்ந்த விடயங்களை முன்னெடுக்கப் போகிறோம், ஒத்துழைப்பு வழங்குங்கள் என்று யாருமே கூறவில்லை. நாங்களாகவே தமிழ் மக்களின் விடயங்களை கையாண்டிருக்கிறோம்.

உண்மையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியலை முன்னெடுப்பதென்பது பாரிய சவால். எங்களூடாக எந்த பணியும் தமிழ் மக்களுக்கு இடம்பெறக்கூடாது என்பதில் அரசாங்கம் குறியாக இருக்கிறது. யுத்தம் முடிந்த கையோடு நாட்டை ஆண்ட மஹிந்த ராஜபக்ஷ 13 பிளஸ் தருவதாக வாக்குறுதியளித்தார். ஆனால், கிழக்கு மாகாண சபைத் தேர்தல் 2012ஆம் ஆண்டிலும் வடமாகாண சபைத் தேர்தல் 2013இலும் இடம்பெற்றன.

இத்தேர்தலுக்கு பிற்பாடு மாகாண சபையை நடத்தவேண்டும் என்ற நோக்கம் அரச தலைவர்களுக்கு இருக்கவில்லை. மக்களை ஏமாற்றுகின்ற பெரும்பான்மை அரசியல் தலைவர்களே ஆட்சி அரசை நடத்துகிறார்கள். இந்த நாடு சுதந்திர மடைகிறபோது போராட்டம் மிக வலுவாக இருந்தது. அவ்வாறான சூழ்நிலைகளை சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். தமிழர்களைத் திட்டமிட்டு ஏமாற்றிய வரலாறுகளே அதிகம் இருக்கின்றன. இந்த அரசாங்கம் கடும்போக்குத் தனமான செயற்பாடுகளை தமிழ்மக்கள் மீது கொண்டுள்ளது.

குறிப்பாக, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மக்களுக்கு இந்தியா மற்றும் சர்வதேச தொண்டு நிறுவனங்கள் இணைந்து வீட்டுத்திட்ட குடியிருப்பு வேலைத்திட்டங்களை அமைத்துக்கொடுத்துள்ளது. ஆனால், கோட்டாபய அரசாங்கம் வந்ததன் பிற்பாடு, தேசிய வீடமைப்பு அதிகாரசபையினால் கட்டப்பட்ட வீடுகள் முழுமை பெறாத சூழலில் மிகவும் வறுமைக்கோட்டுக்குட்பட்ட வறுமையான குடும்பங்களை பழிவாங்குகின்ற செயற்பாட்டில் ஈடுபடுகிறது.

நாங்கள் வெறுமனே அபிவிருத்தியை நோக்கியவர்களாக செயற்படவில்லை. 1948, இலங்கை சுதந்திரமடைந்தவுடன் தமிழ்மக்கள் திட்டமிட்டு புறக்கணிக்கப்படுவதும் நசுக்கப்படுவதும், உணர்வுகள் மதிக்கப்படாது நாட்டின் பிரஜைகள் போன்று முன்னெடுக்கப்படாத செயற்பாடுகளையும் அறியவேண்டும்.

தமிழர்கள் மீது வன்முறை அடக்குமுறைகளை கட்டவிழ்த்து வரலாறுகளை மாற்றியமைக்கின்ற செயற்பாடுகளை கோட்டாபய அரசாங்கம் செயற்படுத்துகிறது. ஆகவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களை ஏமாற்றவில்லை, ஏமாற்றப்போவதும் இல்லை. மக்கள் நலன் சார்ந்த பணிகளை முன்னெடுக்க ஆயத்தமாக இருக்கிறோம். ஆகவே, தடையாக இந்த அரசாங்கம் இருக்கிறது - என்றார்.

# வடக்கு மாகாணத்தில் தமிழ் பேசும் அரச அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும்

## சிறிதரன் எம்.பி. வலியுறுத்து



தமிழ் மக்கள் ஒற்றுமையில்லாத சக்தியாக உள்ள நிலையை பயன்படுத்தி அரசாங்கம் தமிழர்களை துண்டுதுண்டாக்கிவிட்டு இப்பொழுது சிங்களவர்களை வட பகுதியிலும் கொண்டுவந்து நியமனம் செய்யப்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வடமாகாண சபைக்கான பொதுச் செயலாளராக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபராக இருந்த சிங்கள மொழி பேசும் ஒருவரை இந்த அரசாங்கம் நியமித்துள்ளது. இலங்கையின் மொழிச்சட்டத்தின் பிரகாரம் தமிழுக்கும் சிங்களத்துக்கும் சம அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

ஒரு மாகாணத்தில் எந்த மொழி முதன்மை செலுத்துகின்றதோ, அந்த மொழியின் அடிப்படையில்தான் நியமனங்கள் இருக்க வேண்டும் என்கின்ற சட்ட ஏற்பாடுகள் இருக்கக்கூடியதாக இந்த அரசாங்கம் ஒரு புதிய செயலாளரை மிகவும் வேகமாக நியமனம் செய்திருக்கின்றது.

வடக்கு பொதுச் செயலாளராக 12இற்கு மேற்பட்டவர்கள் தகுதியுடையவர்களாக இருந்தும் அவர்களைவிட தகுதி குறைந்த ஒருவரை நியமனம் செய்யப்பட்டுள்ளார். நாங்கள் இந்த நியமனத்திற்கு வன்மையான எதிர்ப்பை தெரிவித்திருக்கின்றோம்.

இது தொடர்பில் என்னென்ன விடயங்களை கையாள முடியுமோ அதனை செய்வோம். கடந்த காலத்தில் முட்டுக்கொடுக்கின்றோம் என்ற பேச்சுக்குள் வாங்கப்பட்டவர்கள். ஆனாலும் அந்த காலங்களில் தொல்பொருள் அடையாளங்களை கிண்டுதல் அல்லது காணிகளை பறித்தலே இவ்வாறு சிங்களவர்களை நியமனம் செய்கின்ற விடயங்கள் நடைபெறவில்லை என்பதை உறுதிப்படுத்துவோம்.

இவர்களது காலத்தில் நடைபெறுகின்ற இந்த விடயத்திற்கு முழுமையான எதிர்ப்பை தெரிவிக்கின்றோம். அது தொடர்பாக தமிழ் மக்கள் இனியும் விழிப்படைய வேண்டிய காலம். தமிழ் மக்கள் ஒற்றுமையில்லாத சக்தியாக உள்ள நிலையை பயன்படுத்தி அரசாங்கம் தமிழர்களை துண்டுதுண்டாக்கிவிட்டு இப்பொழுது சிங்களவர்களை வட பகுதியிலும் கொண்டுவந்து நியமனம் செய்யுமளவிற்கு முன்னேறியிருக்கின்றது.

இது மக்களிடம் இருக்கின்ற ஒற்றுமையின் பலவீனம் என்பதையே வெளிப்படையாக காட்டி நிற்கின்றது.மாகாணத்தின் பிரதம செயலாளராக சிங்கள இனத்தவர் ஒருவர் நியமிக்கப்பட்டமை தொடர்பில் குற்றம் சாட்டுகின்ற நீங்கள், நல்லாட்சி அரசின் காலத்தில் மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் சிங்கள அரச அதிபர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள்.

அதன் தொடர்ச்சியாகவே இந்த உயரிய பதவி வழங்கப்பட்டிருக்கின்றது. இது தொடர்பில் என்ன கூறுகின்றீர்கள் என ஊடகவியலாளர் அவரிடம் வினவியபோது,

மன்னார் மாவட்டத்தில் நீண்ட போராட்டத்துக்கு மத்தியில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரை மாற்றி தமிழ் அரசாங்க அதிபரை நியமனம் செய்திருந்தோம். அதனை எங்களால் நீக்க முடிந்தது. வவுனியாவில் நாங்கள் கொடுத்த பல அழுத்தங்களின் மத்தியில் ஒருமுறை மாற்றத்திற்கான தயார்நிலை வருகின்றபொழுது இருந்த அதிகாரிகளுக்கிடையில் காணப்பட்ட போட்டியின் காரணமாக ஒருவர் நியமிக்கப்பட்டார்.

நியமிக்கப்பட்ட பிற்பாடு, அரசியல் சூழ்நிலை காரணமாக குறிப்பாக மைத்ரி - ரணில் ஆகியோருக்கு இடையிலான ஒற்றுமை சீர்குலைந்து காலங்களிலே மாற்ற முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. அதற்குப் பின்னர் இந்த அரசாங்கம் வந்த பின்னரும் புதிய சிங்களவரையே நியமனம் செய்தது என அவர் குறிப்பிட்டார்.

# நுரைச்சோலையில் 13 வயது சிறுமியை கொடுமைப்படுத்திய தந்தை - மாமியார் கைது

நுரைச்சோலை பகுதியிலுள்ள வீடொன்றில் 13 வயதுடைய சிறுமி ஒருவர் கொடுமைகளுக்கு உட்படுவதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் குறித்த சிறுமியை பொலிஸார் காப்பற்றியுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் சிறுமியின் தந்தை மற்றும் தந்தையின் சகோதரி கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேகநபர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்தியதை அடுத்து மாமியாரை எதிர்வரும் 2ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. அத்துடன் தந்தை சரீர பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

# சில பிரதேசங்களில் இன்று நீர்வெட்டு

கம்பளை, எத்கால பகுதியின் சில பிரதேசங்களில் இன்று 9 மணிநேர நீர்வெட்டு அமுல்படுத்தப் படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

காலை 8 மணிமுதல் 5 மணி வரையான காலப்பகுதியிலேயே இவ்வாறு நீர் வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

எத்கால கிழக்கு, எத்கால சிங்கபுர,எத்கால ஆராம வீதி, எத்கால லக்ஷ பிஹில்ல 1ஆம் ஒழுங்கை, 2 ஆம் ஒழுங்கை, எத்கால பங்கலாவ வீதி மற்றும் ஜயமாலிபுர 6ஆம் ஒழுங்கை பகுதிகளில் இவ்வாறு நீர்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எத்கால நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் திருத்த வேலை காரணமாக இவ்வாறு நீர்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது. இதேவேளை, வத்தளை பகுதியிலும் இன்று காலை 10 மணிமுதல் 24 மணிநேர நீர்வெட்டு அமுலாகவுள்ளது.

வத்தளை - நீர்கொழும்பு வீதியின் ஒரு பகுதி, மாபோலையின் ஒரு பகுதி, வெலிக்கடமுல்ல, ஹெந்தலை நாயக்ககந்த வரையான அனைத்து ஒழுங்கைகள், அல்விஸ் ரவுண், மருதானை வீதி, புவக்வத்த வீதி, கெரவலபிட்டியவின் ஒரு பகுதிகளில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிவரை நீர்வெட்டு அமுலில் இருக்கும்.

# கெஸ்பேவ ஆடைத்தொழிற்சாலையில் ஆறு பேருக்கு டெல்ட்டா தொற்று

கெஸ்பேவ பிரதேசத்திலுள்ள ஆடைத்தொழிற் சாலையொன்றில் டெல்ட்டா தொற்றுடன் ஆறு நோயாளர்கள் அடையாளங்காணப்பட்டதை அடுத்து அந்த தொழிற்சாலையை 10 நாட்களுக்கு தற்காலிகமாக மூடுவதற்கு சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அதேபோன்று டெல்ட்டா திரிபுகொண்ட பணியாளர்களுக்கு மேலதிகமாக 121 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப் பட்டுள்ளதாக அந்த பிரதேச சுகாதார அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

தொற்றுக்குள்ளானவர்களுக்கு சிகிச்சை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அவர்களுடன் தொடர்பை பேணியவர்களை பரிசோதனைக்கு உட்படுத்தி அவர்களையும் பரிசோதனைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

# மலையக சிறுமியின் உயிரிழப்புக்கு நீதி கோரி இராகலை நகரில் மக்கள் போராட்டம்









(க.கிஷாந்தன்)

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியூதீன் வீட்டில் பணியாற்றிய டயகமவைச் சேர்ந்த 16 வயது சிறுமியின் உயிரிழப்புக்கு நீதி கோரி, இராகலை நகரிலுள்ள இராகலை முருகன் கோவிலுக்கு அருகில், நேற்று பாரிய போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

"சிறுவர் உரிமை மீறலுக்கு எதிராக ஒன்றிணைவோம்" எனும் தொனிப்பொருளில், ஒன்றிணைந்த பொது அமைப்புகளுடன் சமூக நீதிக்கான மலையக வெகுஜன அமைப்பு, இந்தப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தது.

இதன்போது டயகம சிறுமியின் மரணத்திற்கு நீதி வேண்டும், சிறுவர்களை தொழிலுக்கு அமர்த்துவதை தடைசெய்து அவர்களின் உரிமைகளை பாதுகாக்க வேண்டும்,

உள்நாட்டில் குடும்ப வறுமைகாரணமாக வீட்டுப் பணியாளர்களாக அமர்த்தப்பட்டுள்ளவர்களை பாதுகாக்க வேண்டும், மலையக பெருந்தோட்ட சிறுவர்கள் எதிர்காலத்தில் கல்வி, தொழில் வாய்ப்பு, பொருளாதாரம் ஆகியவற்றில் உரிமையுடையவர்களாக வாழ தனி உரிமைச் சட்டம் ஒன்றை உருவாக்க வேண்டும் ஆகிய நான்கு முக்கிய கோரிக்கைகள் உள்ளிட்ட மேலும் பல கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அத்துடன், அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் கோஷங்களும் எழுப்பப் பட்டன.

இப்போராட்டத்தில், புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சியின் தேசிய அமைப் பாளர் வெத்திலிங்கம் மகேந்திரன், புதிய கம்யூனிஸ்ட் தொழிலாளர் சங்கத் தலைவர் சட்டத்தரணி எஸ்.மோகனராஜன், சமூக நீதிக் கான மலையக வெகுஜன அமைப்பு செய லாளர் எஸ்.மோகன்ராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# 45 பேர் கொரோனாவுக்கு பலி



நாட்டில் மேலும் 45 பேர் கொரோனா தொற்றுக் குள்ளாகி உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் நேற்று மாலை உறுதிப்படுத்தினார்.

இதற்கமைய, நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோர் எண்ணிக்கை 4,099ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் மொத்த கொவிட் நோயாளர்களின் எண்ணிக்கை 2,96,040ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 2,67,602 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

# அரச காணியை அபகரிக்க முயற்சி: கைதான ஐவர் பிணையில் விடுதலை

(ஜூட் சமந்த)

அரச காணியில் உள்நுழைந்து அந்த காணிப் பகுதியை துண்டாட முயற்சித்த சம்பவம் தொடர்பில் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்ட வண்ணாத்திவில்லு பிரதேச சபையின் முன்னாள் தலைவர் உள்ளிட்ட ஐவரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 23ஆம் திகதி இவர்கள் கைதுசெய்யப்பட் டுள்ளனர். வண்ணாத்திவில்லு பிரதேச சபையின் முன்னாள் தலைவரான டக்ளஸ் இந்திக்க சேனாதீர உள்ளிட்ட ஐவரே இவ்வாறு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

வண்ணாத்திவில்லு பிரதேச செயலாளர் பிரிவுக்கு சொந்தமான அரசுக்கு சொந்தமான காட்டுப்பகுதியில் ஒருசிலர் உள்நுழைந்து அந்த இடத்தை அழிக்க முயற்சிப்பதாக பிரதேசத்தின் கிராமசேவகரினால் வண்ணாத்திவில்லு பொலிஸாரிடம் முன்வைக்கப்பட்டுள்ளது. குறித்த காட்டுப்பகுதியில் 06 ஏக்கர் வரையிலான காணி இவர்களினால் இல்லாமலாக்கப்பட்டுள்ளதாக முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, சம்பந்தப்பட்ட சந்தேகநபர்களை கைதுசெய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதுடன் அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு எதிராக, நாளையதினம் புத்தளம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை வண்ணாத்திவில்லு பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# ஜூலை படுகொலை நினைவேந்தலை தடைசெய்யக் கோரி தாக்கல்செய்யப்பட்ட மனு நீதிமன்றத்தால் நிராகரிப்பு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு தமிழீழ விடுதலை இயக்கமான ரெலோ இயக்க காரியாலயத்தில் ஜூலை படுகொலை நினைவேந்தலை செய்வதற்கு எதிராக இயக்கத்தின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கோ. கருணாகரன், முன்னாள் கிழக்கு மாகாண சபை பிரதி தவிசாளர் இந்திரகுமார் பிரசன்னா ஆகியோருக்கு நீதிமன்றம் தடை உத்தரவு வழங்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 1983 ஜூலையில் வெலிக்கடை சிறைச்சாலையில் குட்டுமணி தங்கத்துரை உட்பட 38 பேர் படுகொலை செய்யப்பட்டனர். இவர்களின் 38 ஆவது நினைவேந்தல் நிகழ்வு மட்டக்களப்பு கோவிந்தன் வீதியிலுள்ள ரெலோ அலுவலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை 25ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதிவரை இடம்பெற இருப்பதாகவும் இந்த நினைவேந்தலில் அரசியல்வாதிகள் தொடக்கம் ஆதரவாளர்கள் அதிகமானோர் கலந்துகொள்ளவுள்ளதால் நாட்டில் தற்போது கொரோனா தொற்றை கட்டுப்படுத்த வேண்டியதன் முகமாக சுகாதார நடைமுறையை கடைப்பிடிக்க வேண்டியதன் காரணமாக இந்த நினைவேந்தல் நடைபெறாமல் நிறுத்துவதற்கான நீதிமன்ற தடை உத்தரவு ஒன்றை மட்டக்களப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நீதிமன்றில் கோரியதற்கமைய நீதிமன்றம் இருவருக்கும் நினைவேந்தல் செய்வதற்கு தடை விதித்து உத்தரவு ஒன்றே நேற்று முன்தினம் சனிக்கிழமை பிறப்பித்து கட்டளை வழங்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்

# வவுணதீவில் நித்திரையிலேயே ஒருவர் உயிரிழப்பு

(மண்முனை நிருபர் )

மட்டக்களப்பு, வவுணதீவு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட விளாவெட்டுவான், நாவற்காடு பிரதேசத்திலுள்ள உணவுக்கடை ஒன்றிலிருந்து இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பரமானந்தம் - கிரிதரன் (வயது 35) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதுடன், இவர் இரண்டு பிள்ளைகளின் தந்தை என்பது குறிப்பிடத்தக்கது. தனது உணவகத்தில் வழமைபோன்று உணவுப்பொருட்களை தனது உதவியாளருடன் விற்பனை செய்து உணவு உண்டு விட்டு தனது கடையின் அறையினுள் இருவரும் நித்திரை செய்ததாகவும் பின்னர் அவரின் உதவியாளர் அதிகாலையில் அவரை எழுப்பியபோது இறந்த நிலையில் இருந்ததாகவும் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு நீதிமன்ற பதில் நீதிவான் வி.தியாகேஸ்வரனின் உத்தரவுக்கமைய வெல்லாவெளி பிரதேச பிரிவுக்குட்பட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சம்பவ இடத்துக்குச் சென்று சடலத்தை பார்வையிட்டதுடன், சடலத்தினை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தும்படி பொலிஸாருக்கு கட்டளையிட்டுள்ளார். இந்த உயிரிழப்பு தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுணதீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# காமினி எம்.பியின் ஜீப் விபத்து

(பலாங்கொடை)

நாடாளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொடவின் ஜீப் விபத்துக்குள்ளாகியுள்ளது. இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொட நேற்று முன்தினம் எம்பிலிப்பிட்டிய பிரதேசத்துக்கு சென்றுகொண்டிருந்தபோதே அவர் பயணித்த ஜீப் விபத்துக்குள்ளாகியுள்ளது.

எம்பிலிப்பிட்டிய பொலிஸ் நிலையத்திற்கு முன் எதிர்பாராத விதமாக வீதியில் நடுவே சென்ற உடும்பொன்றை காப்பாற்ற முயற்சி செய்தபோதே விபத்து ஏற்பட்டுள்ளது. விபத்தில் நாடாளுமன்ற உறுப்பினருக்கும் அவரது வாகனத்தில் பயணித்த எவருக்கும் பாதிப்பு ஏதும் ஏற்பட வில்லை.



# மதுபோதையில் சிலர் அட்டகாசம் நால்வர் வைத்தியசாலையில் அனுமதி

வவுனியா ஈச்சங்குளம் பகுதியில் மதுபோதையில் சென்ற இளைஞர் குழுவினர் தாக்கியதில் பெண்ணொருவர் உட்பட நால்வர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம் பெற்றுள்ளது. இதுதொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

நேற்று மாலை குறித்த பகுதியில் மதுபோதையில் நின்றிருந்த ஐந்து பேர்கொண்ட இளைஞர் குழுவினர் அப்பகுதியில் நின்ற பொதுமக்கள் மீது சரமாரியாக தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச்சென்றுள்ளனர்.

சம்பவத்தில் பெண் உட்பட நால்வர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சம்பவத்துடன் தொடர்புடைய இருவரை ஈச்சங்குளம் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர்.

# குருநாகல் பிரதேச சபைக்குட்பட்ட வீதிகளை அபிவிருத்திசெய்ய நடவடிக்கை





(இக்பால் அலி)

குருநாகல் பிரதேச சபைக்கு உட்பட்ட மல்லவப்பிட்டிய சிறுக்குனாவத்த பிரதேசத்திலுள்ள 04 உள்ளக வீதிகளை 2 கோடி 43 இலட்சம் ரூபா செலவில் அபிவிருத்திசெய்வதற்கான வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படடுள்ளது.

அதற்கான அடிக்கல் நாட்டு விழா மாவத்தகம ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் அமைப்பாளரும் மாவத்தகம பிரதேச சபையின் தவிசாளருமான கமல் பெரேராவின் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் முஸ்லிம் விவகார இணைப்புச் செயலாளர் அப்துல் சத்தார் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு அடிக்கல் நாட்டி வைத்தார். குருநாகல் பிரதேச சபையின் தவிசாளர் அச்சல நிமந்த, அமைச்சர் ஜொன்ஸ்டன் பெர்னாண்டோவின் இணைப்பதிகாரி முஹமட் ரசான், குருநாகல் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் வஹாப் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலர் கலந்துகொண்டிருந்தனர்.

# 342 பிரதேச சபைகளுக்கு புதிய தபால் நிலையங்கள்!

## அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்ல அறிவிப்பு



(கண்டி நிருபர்)

தனியார்துறையை விடவும் வெற்றிகரமான துரித சேவை முறை ஒன்றை இலங்கை தபால் சேவை அறிமுகம் செய்யவுள்ளதாக வெகுஜன ஊடக மற்றும் தபால் அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

ஹரிஸ்பத்துவ, வெரல்லகம பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற புதிய தபால் நிலையத் திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

எதிர்காலத்தில், தபால் துறைக்குச் சொந்தமான சகல சொத்துகளிலிருந்தும் தபால் திணைக்களத்திற்கு வருமானம் ஈட்ட உதவும் வகையில் திட்டமிடப்பட்டு வருகிறோம். எக்ஸ்பிரஸ் துறை என்ற துரித முறை காரணமாக பெருமளவு இலாபமீட்டலாம். தனியார்துறையை விடவும் நம்பகமானதும் திறமைமிக்கதுமான எக்ஸ்பிரஸ் சேவை ஒன்றை நிறுவ தபால் திணைக்களம் முயற்சிக்கிறது.

கொரோனா தொற்றுநோயை எதிர்கொண்டு நோயாளிகளுக்கு மருந்து விநியோகம் தபால் துறையூடாக மிகவும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் பல உயிர்களைக் காப்பாற்ற முடிந்தது. நாட்டின் 342 பிரதேச சபைகளில் புதிய தபால் நிலையங்களை திறக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதும், அது பொதுமக்களுக்கு இன்னும் கூடுதல் சேவைகளை வழங்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கும்.

மோட்டார் போக்குவரத்துத்துறையால் வழங்கப்படும் இலக்கத்தகடுகளை (நம்பர் பிளேட்டுகளை) விநியோகிக்க புதிய திட்டம் ஆரம்பிக்கப்படும். இப்படியான திட்டங்கள் மூலம் தபால் துரித சேவையூடாக வீடுகளுக்கே விநியோகிக்கும் முறை பற்றியும் திட்டமிடப்பட்டு வருகிறது - என்றார்.

இந்நிகழ்ச்சியில் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் குனதிலக்க ராஜபக்ஷ, ஹரிஸ்பத்துவ பிரதேச சபையின் தலைவர் ஆனந்த ஜெயவிலால், தபால் மா அதிபர் ரஞ்சித் அரியரத்ன ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# 75 கிலோ அமோனியா நைட்ரேட்டை சட்டவிரோதமாக வைத்திருந்தவர் கைது

மதவாச்சி, ரம்புக்கனை பிரதேசத்தில் வெடிக்கும் தன்மையுடைய 75 கிலோ அமோனியா நைட்ரேட்டை வைத்திருந்த சந்தேகநபரொருவர் செட்டிக்குளம் விசேட அதிரடிப்படை முகாம் அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த அமோனியா நைட்ரேட் தொகையை வைத்திருப்பதற்கான அனுமதிப்பத்திரம் சந்தேகநபரிடம் இருக்கவில்லையென விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

பண்டாரகம பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இதுதொடர்பில் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலுக்கமைய நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப் பின்போது இந்த இரசாயனப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர் பண்டாரகம பிரதேசத்திலிருந்து மதவாச்சி பிரதேசத்துக்கு வருகை தந்து ஏதேனும் பயங்கரவாத செயற்பாடுகளுக்காக இந்த வெடிபொருளை வைத்திருந்தாரா என்ற கோணத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன. சந்தேகநபர் மதவாச்சி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.



# வென்னப்புவவில் கைக்குண்டொன்று மீட்பு



(ஜூட் சமந்த)

வென்னப்புவ, லுணுவில பிரதேசத்தில் பால மொன்றுக்கு அருகிலிருந்து வெளிநாட்டில் தயாரிக் கப்பட்ட கைக்குண்மெ+டான்று மீட்கப்பட்டுள்ள தாக வென்னப்புவ பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவரி டமிருந்து நேற்று முன்தினம் இரவு கிடைத்த தகவலுக்கமைய இந்த கைக்குண்டு கண்டுபிடிக் கப்பட்டுள்ளது. இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ள கைக்குண்டு எந்த வகையைச் சேர்ந்தது எந்த நாட்டில் தயாரிக்கப்பட்டது என்பது இதுவரையில் அடையாளம் காணப்படவில்லை.

அதேபோன்று, இவ்வாறு கைப்பற்றப்பட்ட கைக்குண்டு யாரால் எந்த காரணத்துக்காக கொண்டுவரப்பட்டதென்பது இதுவரையில் உறுதிப்படுத்தப்படவில்லை. இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை வென்னப்புவ பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# உத்தேச கொத்தலாவல சட்டமூலத்துக்கு எதிராக பூண்டுலோயா நகரில் ஜே.வி.பியினர் ஆர்ப்பாட்டம்







(க.கிஷாந்தன்)

உத்தேச கொத்தலாவல தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழகச் சட்டமூலத்தை மீளப் பெறுமாறு வலியுறுத்தியும், அரசாங்கத்தின் ஒடுக்குமுறை செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் மக்கள் விடுதலை முன்னணியினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டம் நேற்று (25) பூண்டுலோயா நகரில் இடம்பெற்றது.

மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் செயற்பாட்டாளர்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் இளைஞர்கள் இதில் பங்கேற்றிருந்தனர்.

இலவசக் கல்வி பெறும் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என வலியுறுத்திய போராட்டக்காரர்கள், கல்வியை தனியார் மற்றும் இராணுவ மயப்படுத்துவதற்கு இடமளிக்கக்கூடாது எனவும் கோஷமெழுப்பினர். அத்துடன், நாட்டில் நிலவும் உரத்தட்டுப்பாட்டால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, அவர்களுக்கு உரம் விநியோகிக்கப்பட வேண்டும் என குரல் எழுப்பிய ஜே.வி.பியினர், அத்தியாவசியப் பொருட்கள் உட்பட ஏனைய பொருட்களின் விலையை உடன் குறைக்குமாறும் அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுத்தனர்.

# வருடந்த நிகழ்ச்சிகளை இணையத்தளத்தினூடாக முன்னெடுக்க யெகோவாவின் சாட்சிகள் தீர்மானம்

யெகோவாவின் சாட்சிகளின் வருடாந்த நிகழ்ச்சி நிரல்களை இம்முறை ஒன்லைன் முறையினூடாக முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. 240 நாடுகளில் 500இற்கும் மேற்பட்ட மொழிகளில் இந்நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

சுகாதார நிலைமைகளை கருத்திற்கொண்டு, 240 நாடுகளில் நடைபெறவிருந்த சுமார் 6,000 மாநாடுகள் இரத்துச்செய்யப்பட்டுள்ளன. தொடர்ச்சியாக 64 வருடங்களாக யெகோவாவின் சாட்சிகள் இலங்கையில் மாநாடுகளை நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

2021இற்கான உலகளாவிய நிகழ்ச்சியின் தலைப்பு ‘விசுவாசமே நம் பலம்’ என்பதாகும். 500இற்கும் மேற்பட்ட மொழிகளில் உலகெங்கிலும் உள்ள வீடுகளுக்கு சென்றடையட்டும். இந்நிகழ்ச்சி, ஜூலை மற்றும் ஓகஸ்ட் மாதங்களின்போது ஆறு வார இறுதிகளில், 240இற்கும் அதிகமான நாடுகளிலுள்ள 15 -20 மில்லியன் மக்களை ஒன்றிணைக்கவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. வழக்கமாக இம்மாநாடு வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் நடைபெறுவதால், காலை மற்றும் மதிய நிகழ்சிகள் ஆறு பாகங்களாக வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை காலை நிகழ்ச்சியை 2021 ஜூன் 28 முதல் ஒன்லைனில் அல்லது தரவிறக்கம் செய்து பார்க்க முடியும் என்றும் அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

உலகெங்கிலுமுள்ள நகரங்களில் ஆயிரக்கணக்கான மக்களை ஒன்றுகூட்டுவதில் தொடர்ந்திருக்கும் ஆபத்தின் காரணமாக, தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக இந்த மாநாட்டை வீடியோ மூலம் நடத்துவதற்கு இந்த அமைப்பு தீர்மானித்துள்ளது. உலகெங்கும் உள்ள சபைகள், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்நிகழ்வில் தங்களுடன் இணைந்து கொள்வதற்காக பொதுமக்களை அழைக்கின்றனர்.

தொற்றுநோய் பரவிவரும் இக்காலத்திலும் எங்கள் உலகளாவிய சகோதரத்துவம் செழிப்பாக இருக்க காரணம் விசுவாசம்தான் என்கிறார். யெகோவாவின் சாட்சிகளுக்கான பேச்சாளர் ஸ்பென்சர் மத்தியூ.



உலகெங்கிலும் உள்ள மில்லியன் கணக்கான மக்கள் தங்கள் வீடுகளில் ஒரு சக்திவாய்ந்த மற்றும் ஊக்கமூட்டும் ஆன்மீக நிகழ்ச்சியை அனுபவிப்பதற்காக கூடிவருவதால் வீடியோ மூலமாக என்றாலும் எங்கள் விசுவாசம் வணக்கத்தில் எங்களை ஒன்றிணைக்கும்.

JW.ORG என்ற இணையத்தளத்தில் இந்த நிகழ்ச்சியை பார்வையிடுவதன் மூலமோ, iOS அல்லது ஆன்ட்ராய்ட் சாதனத்திலுள்ள இலவசமான JW Library அப்ளிகேஷனில் JW Broadcasting என்ற பகுதியில் இந்த நிகழ்ச்சியை பார்வையிடுவன் மூலமோ இந்த நிகழ்ச்சியிலிருந்து பலன் பெறுமாறு நாம் அனைவரையும் அழைக்கிறோம்.

இந்த நிகழ்ச்சி இலவசமானது, அதோடு இதை எல்லாராலும் பார்வையிட முடியும். இந்த நிகழ்ச்சி எப்போது கிடைக்கும் என்பதை கீழுள்ள அட்டவணை காட்டுகிறது. மேலதிக தகவல்களுக்கு தயவு செய்து 011-293-0444 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள். அல்லது PublicInformationDesk.Lk@jw.org என்ற மின்னுஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறும் அந்த நிறுவனம் கோரியுள்ளது.

# குற்றம் தவிர்

தொகுப்பு:- நா.தினுஷா

### போதைப்பொருட்களுடன் சந்தேகநபர்கள் கைது கொஹுவல

கொஹுவல பொலிஸ பிரிவுக்குட்பட்ட போதியவத்த பிரதேசத்தில் நேற்று முன்தினம் நுகேகொடை, மேல் மாகாண தெற்கு குற்றத்தடுப்புப் பிரிவு அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது 15 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டு கொஹுவல பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

போதியவத்த பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### கிராண்ட்பாஸ்

கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஸ்டேஸ்புர பிரதேசத்தில் நேற்று முன்தினம் பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது 05 கிராம் 320 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஒருகொடவத்த பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 75 ஆம் தோட்டப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது 05 கிராம் 60 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கிராண்ட்பாஸ் பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### பொரளை

பொரளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காதர்நானா தோட்ட பிரதேசத்தில் நேற்றையதினம் பொலிஸ் அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது 04 கிராம் 600 மில்லிகிராம் ஹெரொயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொலன்னாவை பிரதேசத்தைச் சேர்ந்த 47 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### கல்கிஸை

கல்கிஸை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெடிகந்த பிரதேசத்தில் நேற்றைய தினம் பொலிஸ் அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றி வளைப்பின்போது 04 கிராம் 550 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இரத்மலானை பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, கல்கிஸை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்தேமுல்ல பிரதேசத்தில் நேற்று முன்தினம் பொலிஸாரினல் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது 04 கிராம் 280 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கல்தேமுல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மேலும், கல்கிஸை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அத்திடிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது 210 கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். ஆண் ஒருவரும் பெண் ஒருவருமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

41 மற்றும் 54 வயதுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். இருவரும் நேற்று முன்தினம் கல்கிஸை நீதவான் நீதிமன்றத்தில ஆஜர்படுத்தப்பட்டிருந்த நிலையில் 07 நாட்கள் தடுப்புக்காவலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

### துப்பாக்கியுடன் ஒருவர் கைது - கந்தகெட்டிய

கந்தகெட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாகொல்ல பிரதேசத்தில் நேற்று முன்தினம் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோத துப்பாக்கி மற்றும் 12 ரவைகளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நாகொல்ல, மாலியத்த பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### கோடாவுடன் மூவர் கைது - பமுனுகம

பமுனுகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முத்துராஜவெல பிரதேசத்தில் பமுனுகம பொலிஸ் அதிகாரிகளினால் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போது சட்டவிரோத மதுபான தயாரிப்புக்கு பயன்படுத்தப்படும் 4 ஆயிரத்து 875 லீட்டர் கோடா, சிலின்டர், வாயு அடுப்பு உள்ளிட்ட பொருட்களுடன் சந்தேகநபர்கள் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ராகம பிரதேசத்தைச் சேர்ந்த 24, 51 மற்றும் 52 வயதுடைய மூவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

### புதையல் தோண்டிய ஆறுபேர் கைது - சூரியவெவ

சூரியவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மஹகல்வெவ பிரதேசத்தில் புதையல் தோண்டும் நடவடிக்கைகள் இடம்பெறுவதாக நேற்று முன்தினம் சூரியவெவ பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்தப்படும் பெருட்கள், பூஜைப் பொருட்கள் மற்றும் சந்தேகநபர்கள் வருகை தந்திருந்த 05 மோட்டர் சைக்கிள்களுடன் 06 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

சூரியவெவ மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 23, 25, 31, 45, 52 மற்றும் 62 வயதடைய ஆறுபேரே இவ்வாறு கைதசெய்யப்பட்டுள்ளனர்.

### கொலைச் சம்பவம் - மெல்சிரிபுர

மெல்சிரிபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உடகெந்தல பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரு தரப்பினருக்கிடையிலான முரண்பாட்டு நிலை வலுவடைந்ததில் பெண்ணொருவர் தடியால் தாக்கப்பட்டு படுகாயமடைந்த நிலையில் பொல்கொல்ல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

உடகெந்தவல, மெல்சிரிபுர பிரதேசத்தைச் சேர்ந்த 66 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சடலம் பொல்கொல்ல வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகநபர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

### வீதி விபத்து - மத்துகம

மத்துகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மத்துகம, அபேராஜ மாவத்தை குறுக்குவீதியில் இதிகொடதென்ன பிரதேசத்தில் மத்துகமையை நோக்கி பயணித்த முச்சக்கரவண்டி நாயொன்றின் மீது மோதியதில் முச்சக்கரவண்டி வீதியில் புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் காயங்களுக்குள்ளான முச்சக்கரவண்டி சாரதி வேன்னேவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார். மத்துகம பிரதேசத்தைச் சேர்ந்த 48 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

# ஹிஷாலினியின் மரணம் இறுதியாக இருக்கட்டும்

## தமிழர் விடுதலைக் கூட்டணி வலியுறுத்து

மலையகச் சிறுமி ஹிஷாலினியின் மரணம் இறுதியாக இருக்கட்டும் என தமிழர் விடுதலைக் கூட்டணி கட்சி சார்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அக்கட்சி சார்பில் அனுப்பிவைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

ஹிஷாலியின் மரணம் இறுதியாக இருக்கட்டும்!

மலையகத்தில் இவ்வாறான மரணங்கள் தொடர்கதையாகவே தொடர்கின்றன. இளம் பெண்கள் மற்றும் ஹிஷாலினி போன்ற சிறுமிகள் நகர்ப்புறங்களுக்கு ஏன் வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள் என்பதை நாம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழ்கின்ற இவ்வாறானவர்கள் நகர்ப்புறங்களிலுள்ள வீடுகளுக்கு வேலை தேடி வருகின்றார்கள். இவர்களில் ஹிஷாலினி போன்ற வயதை ஒத்த சிறுமிகள்தான் இவ்வாறான இன்னல்களுக்கு ஆளாக்கப்பட்டு மரணமடைகின்றார்கள். இவர்களின் மரணங்களில் எப்போதும் ஒரு மர்மம் மறைந்தே இருக்கும். அது நாளடைவில் மூடி மறைக்கப்பட்டுவிடும். கண்டிப்பாக இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். மலையக பெருந்தோட்டங்களில் வாழும் குடும்பங்கள் வறுமையில் வாடி வதங்குவது நாடறிந்த உண்மை. அதற்கு ஒரு நிரந்தர தீர்வை காணவேண்டிய பொறுப்பு அரசியல் பிரமுகர்கள், தொழிற்சங்கத் தலைமைகள், புத்திஜீவிகள் மற்றும் சமூக நலன்விரும்பிகள் ஆகியோரையே சாரும்.

பெருமளவு அந்நியச் செலாவணியை நம் நாட்டிற்கு ஈட்டித்தருபவர்களும் இந்த மலையக மக்களே. இந்த கொரோனா காலத்திலும் ஒன்லைன் (online) மூலம் அந்நியச் செலாவணியை பெற்றுத்தருகின்ற வர்த்தகம் இது மட்டுமே. இருந்தாலும் அந்த மக்களின் வாழ்வாதாரம் மற்றும் சம்பள உயர்வை பற்றி எவருக்கும் அக்கறை கிடையாது. அவர்களின் உழைப்பை மட்டும் இந்த நாட்டிற்கு பயன்படுத்திக்கொண்டு, அவர்களின் ஊதிய உயர்வினை கண்டுகொள்வதில்லை.

1970ஆம் ஆண்டுக்கு முன் நாடளாவிய ரீதியில் இருந்தது போன்று வறுமையில் வாழும் மக்களுக்கு கூப்பன் முறையிலான உப உணவுப்பொருட்களை குறைந்த விலையிலோ அல்லது இலவசமாகவோ வழங்குவதன் மூலமேதான் இந்த மக்களின் வாழ்வாதாரத்திற்கு உதவமுடியும். அன்று நாட்டில் இவ்வாறான ஒரு செயற்றிட்டம் நடைமுறையில் இருந்தது. இன்று அது முற்றுமுழுதாக நீக்கப்பட்டுவிட்டது. இந்த செயற்றிட்டம் மீண்டும் நடைமுறைக்கு வர வேண்டும். அன்றுதொட்டு இன்றுவரை எமது கட்சியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி நாடாளுமன்றத்திற்கு உள்ளும், வெளியும் இதனை வலியுறுத்தி வந்துள்ளார். அதுமட்டுமல்ல, தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஒவ்வொரு வருடாந்த மாநாட்டிலும் இதனை ஒரு தீர்மானமாகவும் நிறைவேற்றி வருகின்றோம்.

அதுமட்டுமல்லாமல், அந்த மக்கள் கடும் உழைப்பாளிகள். அவர்களின் வசிப்பிடத்திற்கு அருகாமையிலேயே பெண்களுக்கான தொழிற்பயிற்சி மையங்களை உருவாக்கி தொழில் வாய்ப்புகளை பெற்றுக்கொடுப்பது நம் ஒவ்வொருவரது கடமையாகும். இவ்வாறான கொடூரமான சம்பவங்கள் நடக்கும்போது உண்மையான குற்றவாளிகள் ஏதோ ஒருவகையில் தப்பித்துக் கொள்கின்றார்கள். ஆனால், ஹிஷாலினியின் விடயத்தில் அவ்வாறில்லாமல் உண்மையான குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு அவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட்டு அது உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும். காலம் கடந்த - நீதி மறுக்கப்பட்ட நீதிக்கு சமமானது என்பதை கவனத்தில் எடுத்து செயற்பட்டாலே இவ்வாறான சம்பவங்களை தடுத்து நிறுத்தலாம். இதுவே ஹிஷாலினியின் மரணம் இறுதியானதாக இருப்பதற்கான ஒரு செயற்பாடாகும்.

நாடளாவிய ரீதியில் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களிலுள்ள பெண்களுக்கு இவ்வாறான கொடுமைகள் நடந்துகொண்டு தான் இருக்கின்றன. ஆனால், பெரிதாக எதுவும் வெளியில் தெரிவதில்லை. இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் – என்றுள்ளது.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

## சுழிபுரத்தில் இராணுவத்தால் கட்டப்பட்ட வீடு கையளிப்பு



யாழ்ப்பாண பாதுகாப்புப் படை தலைமையகத்தின் படையினரால் யாழ்ப்பாணம் சுழிபுரத்தின் வறிய குடும்பத்திற்காக மேலும் ஒரு புதிய வீடு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்டது.

குறித்த வீட்டின் சாவியை பயனாளியான கதிரன் கோவிந்தசாமியிடம் அண்மையில் இந்து மத சடங்குகளுக்கு மத்தியில் ஒப்படைக்கப்பட்டது.

513ஆவது பிரிகேட்டின் தளபதியின் நேரடி மேற்பார்வையின் கீழ் 16ஆவது கெமுனு ஹேவா படையினர் இந்த கட்டுமானத்திற்கான தங்களது திறமையான தொழில்நுட்ப நிபுணத்துவத்தையும் உழைப்பையும் வழங்கினர்.

யாழ்ப்பாண பாதுகாப்புப் படைத் தலைமை தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேரா பயனாளியிடம் வீட்டினை கையளிக்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டார்.

அவ்வீட்டின் திறப்பு விழாவின் போது வீட்டிற்குத் தேவையான உலருணவுப் பொதிகள் மற்றும் அத்தியாவசிய வீட்டுப் பொருட்கள் வீட்டின் உரிமையாளருக்கு பிரதம விருந்தினர் மற்றும் பாதுகாப்புப் படைகளின் உறுப்பினர்களால் வழங்கப்பட்டன.

கடுமையான சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றி மாவட்ட செயலக அதிகாரிகள், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதிநிதிகள், 51ஆவது படைப்பிரிவு தளபதி, 511, 512, 513 மற்றும் 515 பிரிகேட்களின் தளபதிகள், சிரேஷ்ட அதிகாரிகள், அரச அதிகாரிகள் மற்றும் பாதுகாப்புப் படை தலைமையக சிப்பாய்கள் இந்த விழாவில் பங்கேற்றனர்.

## எல்லை மீறிய இந்திய மீனவர்களால் கடற்றொழிலாளர்களின் பல இலட்சம் ரூபா பெறுமதியான வலைகள் நாசம்

வடமராட்சி பருத்தித்துறைமுனை கடற்றொழிலாளர்களின் வலைகள் அத்துமீறிய இந்திய கடற்றொழிலாளர்களின் றோலர் படகுகளால் அழிவடைந்துள்ளன - என கடற்றொழிலாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதன்போது ஒவ்வொருவருக்கும் தலா மூன்றரை இலட்சம் ரூபா வலைகள் சேதப்படுத்தப் பட்டுள்ளதாக அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக கடற்றொழில் அமைச்சருடன் பல தடவைகள் முறையிட்டும் இதுவரை எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளவில்லை என்றும் தற்போது கொரோனா காலத்தில் கடன்பட்டு வலைகளை கொள்வனவுசெய்து தொழிலுக்கு சென்றுவந்த நிலையில் இவ்வாறு வலைகள் வெட்டப்பட்டு நாசம் செய்யப்பட்டதுடன் பலரது வலைகளும் காணாமல்போயுள்ளன எனவும் தெரிவித்துள்ள கடற்றொழிலாளர்கள், இந்திய கடற்றொழிலாளர்களின் இந்த நடவடிக்கைகள் தொடர்கதையாக தொடர்கிறது என்வும் எவரும் இதனை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக தெரியவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

## நாவற்குழி ரஜமஹா விகாரை கோபுரத்தை திறக்க வருகிறார் பிரதமர் மஹிந்த



(சாவகச்சேரி நிருபர்)

தென்மராட்சி-நாவற்குழி நகர்ப்பகுதியில் அமைந்துள்ள ரஜமஹா விகாரையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கோபுரத்தினை எதிர்வரும் 31/07 சனிக்கிழமையன்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ திறந்துவைக்கவுள்ளார்.

அத்துடன், நாவற்குழி பகுதியில் மீள்குடியேற்ற அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட 182 வீடுகளுக்கான உரிமப் பத்திரங்கள் வழங்கப்படவிருப்பதுடன், சில வீட்டுத்திட்ட வீடுகளுக்கான அடிக்கல்லையும் நட்டுவைக்கவுள்ளார்.

அதனைத்தொடர்ந்து காங்கேசன்துறையில் விடுதி திறப்பு வைபவம், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் அங்கஜனால் முன்மொழியப்பட்ட வேலணை நகரை பல்பரிமாண நகரமாக்கும் திட்டத்தினை ஆரம்பித்துவைத்தல் உள்ளிட்ட பல நிகழ்வுகளிலும் பிரதமர் பங்கேற்கவுள்ளார்.

யாழ். மாவட்டத்திற்கு இரு நாள் விஜயம் மேற்கொள்ளவுள்ள பிரதமர் மாவட்டத்திலுள்ள இந்து மற்றும் பௌத்த தலங்களை தரிசிக்கவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## முதியோர் துஷ்பிரயோகத்திற்கு எதிராகவும் குரல் எழுப்பப்பட வேண்டும்

### யாழ். மறை மாவட்ட குருமுதல்வர் தெரிவிப்பு

சிறுவர் துஷ்பிரயோகத்திற்கெதிராக குரல்கள் எழுப்பப்படுவதுபோல் முதியோர் துஷ்பிரயோகத்திற்கு எதிராகவும் குரல் எழுப்பப்பட வேண்டும் - என யாழ். மறை மாவட்ட குருமுதல்வர் அருட்பணி ஜெபரட்ணம் அடிகளார் தெரிவித்தார்.

சில்லாலை புனித யாகப்பர் ஆலய திருவிழா திருப்பலி நேற்றுக் காலை நடைபெற்றபோது திருவிழா திருப்பலியை தலைமையேற்று ஒப்பு கொடுக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது இணையத்தளங்களில், பத்திரிகைகளில் சிறுவர் துஷ்பிரயோகம், சிறுமி கொலை தொடர்பாக செய்திகள் வெளிவருகின்றன. குறித்த சிறுமி துஷ்பிரயோகம் செய்யப்பட்டாள், தீயில் எரிந்துள்ளாள் என்றும் இதன்பின்னர் சிறுவர் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் கவனயீர்ப்புகள் இடம்பெற்று சிறுவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நிலை உருவாகியுள்ளது.

இதேபோல் முதியோர் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறார்கள் இந்த விடயங்கள் கவனிக்கப்பட வேண்டும்.

வயோதிபர்களது மாண்புகள், முக்கியத்துவங்கள், அனுபவங்கள் மதிக்கப்பட வேண்டும். திருத்தந்தை இந்த வருடம் ஜூலை மாதத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமையை முதியோருக்காக செபிக்குமாறு வலியுறுத்தியுள்ளார்.

இனி ஒவ்வொரு வருடமும் ஜூலை மாதம் கடைசி ஞாயிற்றுக்கிழமை முதியோர் தினம் அனுஷ்டிக்கப்படும். முதியோரும் துன்புறுத்தலுக்கு ஆளாகிறார்கள், அவமானப்படுத்தப்படுகிறார்கள். அவர்கள் துணையில்லாது முதுமையாலும் துன்பப்படுகிறார்கள். தமது பிள்ளைகளால் துன்பப்படுத்தப்படுகிறார்கள் சொத்துகளை பறிப்பதற்காக துன்பப்படுகிறார்கள். இவ்வாறாக பல முதியோர்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அவர்கள் உரிமைகள் மதிக்கப்பட வேண்டும் - என்றார்.

## மன்னார் வளைகுடா கடல் பகுதியில் இந்திய கடற்படை வைஸ் அட்மிரல் ஜெனரல் ஆய்வு

(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் வளைகுடா கடல் வழியாக தொடர்ந்து கடத்தல் சம்பவங்கள் மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகள் நடைபெற்று வருவதால் கடந்த வெள்ளிக்கிழமை இந்திய கடற்படை வைஸ் அட்மிரல் ஜெனரல் ஹெலிகொப்டர் மூலம் ஆய்வு மேற்கொண்டார்.

ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம் அருகே இலங்கை இருப்பதால் தெற்கு கடற்கரையான மன்னார் வளைகுடா கடல் பகுதியிலிருந்து கடல் அட்டைகள், சமையல் மஞ்சள், கடல் பல்லி, கடல் குதிரை, கஞ்சா உள்ளிட்ட பொருட்கள் தமிழகத்திலிருந்து இலங்கைக்கு கடத்தப்பட்டு வருகிறது.

அதேபோல் இலங்கையிலிருந்து சட்ட விரோதமாக உரிய ஆவணங்களின்றி சந்தேகநபர்கள் கடற்கரை வழியாக அவ்வப்போது தமிழகத்திற்குள் ஊடுருவி வருகின்றனர்.

இதனையடுத்து மன்னார் வளைகுடா கடல் பகுதியை கண்காணிக்க இந்திய கடற்படைக்கு சொந்தமான இரண்டு அதிநவீன ரோந்து கப்பல்கள் பாதுகாப்பு பணிக்காக பாம்பன் குந்துகால் மீன்பிடி துறைமுகத்தில் நிறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை காலை ராமேஸ்வரம் வந்த இந்திய கடற்படை வைஸ் அட்மிரல் ஜெனரல் ஏ.பி சிங் ராமேஸ்வரம் கோவிலில் தரிசனத்தை முடித்துவிட்டு பாம்பன் அடுத்துள்ள குந்துகால் மீன்பிடித் துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருக்கும் கடற்படைக்குச் சொந்தமான அதிநவீன ரோந்து கப்பல்களை பார்வையிட்டார்.

பின்னர் அங்கிருந்து ஹெலிகொப்டர் மூலம் மன்னார் வளைகுடா கடல் பகுதி மற்றும் தீவுகளில் தாழ்வாக பறந்து கடல் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் உச்ச புளியிலுள்ள கடற்படைக்குச் சொந்தமான பருந்து விமானத்தளத்திற்கு சென்று பாதுகாப்பு உயர் அதிகாரி பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ஆலோசனை நடத்தியுள்ளார்.

## ‘பசி இல்லா மன்னார்’ அமைப்பினால் நிவாரணப்பொருட்கள் கையளிப்பு



(மன்னார் நகர் நிருபர்)

நாடளாவிய ரீதியில் பயணத்தடை நீக்கப்பட்டுள்ள நிலையில் மன்னார் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட தலைமன்னார் மேற்கு மற்றும் கிழக்கு பகுதியில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவம் மற்றும் காணாமலாக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு தொகுதி நிவாரணப் பொருட்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்டத்தில் இயங்கிவரும் டாக்டர் அரசகோன் கிளினிகின் நிதி அனுசரணையில் ‘பசி இல்லா மன்னார்’ அமைப்பின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் சதீஸ் ஏற்பாட்டில் வைத்தியர் அரசகோன் கிளினிக்கின் நிறுவனத் தலைவர் குறித்த நிவாரணப் பொருட்களை தலைமன்னார் பியர் கிழக்கு மற்றும் மேற்கு பகுதிகளைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கினார்.

அண்மையில் கொரோனா பரவல் காரணமாக முழுதாக முடக்கப்பட்ட தலைமன்னார் பகுதியைச் சேர்ந்த தெரிவுசெய்யப்பட்ட 25 குடும்பங்களுக்கு சுமார் 5,000 ரூபா பெறுமதியான அரிசி, சீனி, மா, பருப்பு, கடலை உட்பட அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய நிவாரணப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடதக்கது.

## வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த ஒருவர் உயிரிழப்பு

**வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நபரொருவர் கொவிட் தொற்று நோயால் கடந்த வெள்ளிக்கிழமை மரணமடைந்துள்ளார்.**

**குறித்தநபர் சுகவீனம் காரணமாக வவுனியா வைத்தியசாலையில் அண்மையில் அனுமதிக்கப்பட்டார்.**

**அவருக்கு முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் கொரோனா தொற்று பீடித்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.**

**இதனையடுத்து வைத்தியசாலையின் கொரோனா விடுதியில் அவர் அனுமதிக்கப்பட்டிருந்தார். எனினும், சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.**

**வவுனியா ஸ்ரீநகர் பகுதியைசட சேர்ந்த 38 வயதான குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.**

## காங்கேசன்துறை - வவுனியா வரையிலான ரயில் சேவை இன்று ஆரம்பம்

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக இடை நிறுத்தப்பட்டிருந்த ரயில் சேவைகளை மீள ஆரம்பிப் பதன் ஒரு கட்டமாக காங்கேசன்துறை தொடக் கம் வவுனியா வரையான சேவை இன்று ஆரம்ப மாகிறது.

இதனடிப்படையில், இன்று காலை 5.15 மணிக்கு காங்கேசன்துறையிலிருந்து வவுனியாவுக்கும் பிற்பகல் 5 மணிக்கு வவுனியாவிலிருந்து காங்கேசன்துறைக்கும் ரயில் சேவை இடம்பெறும் என்று ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

## ‘உதிரம் வழங்கி இன்னுயிர் காப்போம்’ செயற்றிட்டம்

(சாவகச்சேரி நிருபர்)

யாழ். மாவட்ட இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் யாழ். கே.கே.பி. இளைஞர் கழகம் மற்றும் அரிமா கழகம் ஆகியன இணைந்து முன்னெடுத்த இரத்ததான முகாம் கடந்த வெள்ளிக்கிழமை (23ஆம் திகதி) யாழ்ப்பாணம் லொயலாஸ் மண்டபத்தில் இடம்பெற்றது.



நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் திருமதி வினோதினி மற்றும் புனித மரியன்னை தேவாலய உதவிப் பங்குத்தந்தை அஜந்தன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

‘உதிரம் கொடுத்து இன்னுயிர் காப்போம்’ எனும் தொனிப்பொருளில் இடம்பெற்ற இரத்த தான நிகழ்வில் 52 கொடையாளர்கள் உதிரத்தை வழங்கினர்.

## மீசாலையில் பெண் தூக்கிட்டு தற்கொலை

(சாவகச்சேரி நிருபர்)

தென்மராட்சி-மீசாலை பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் தூக்கில் தொங்கிய நிலையில் பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மீசாலை வடக்கு வேம்பிராய் பகுதியைச் சேர்ந்த 61வயதான பெண் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரது சடலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளுக்காக வைக்கப்பட்டுள்ளது. மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## மகாராஷ்ட்ராவில் கடும் மழை - வெள்ளம்:



# மண்சரிவில் சிக்கி 138 பேர் உயிரிழப்பு; இதுவரை 73 பேரின் உடல்கள் மீட்பு

மகாராஷ்ட்ரா மாநிலத்தில் கடும் மழை மற்றும் மண்சரிவில் சிக்கி 138 பேர் உயிரிழந்துள்ள நிலையில் இதுவரை 73 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.

47 பேரின் நிலைமை தெரியவில்லை - என தேசிய பேரிடர் மீட்புப் படை தெரிவித்துள்ளது.

நிர்க்கதிக்குள்ளான சுமார் 1.34 இலட்சம் பேர் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் தேசிய பேரிடர் மீட்புப் படை, இராணுவம் உள்ளிட்ட அமைப்புகள் தீவிர மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளன.

தென்மேற்கு பருவமழை காரணமாக மகாராஷ்ட்ரா மாநிலத்தில் கடந்த ஐந்து நாட்களுக்கும் மேலாக கடும் மழை பெய்துவருகிறது. அம்மாநிலத்திலுள்ள கோல்ஹாப்பூர், ராய்காட், சங்கிலி, ரத்னகிரி, சாதாரா, சிந்துதுர்க், மும்பை மற்றும் தானே மாவட்டங்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன. 890 கிராமங்களும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

மாகாத் அருகிலுள்ள தாலியே மலை கிராமத்தில் மண்சரிவு காரணமாக பாதிக்கப்பட்ட பகுதிகளை முதலமைச்சர் உத்தவ் தாக்ரே நேரில் பார்வையிட்டார். இந்த மலை கிராமத்தில்தான் மண்சரிவில் சிக்கி 50இற்கும் மேற்பட்டோர் உயிரோடு மண்ணில் புதைந்த சோகம் நேரிட்டது. இதனிடையே மகாராஷ்ட்ரா மாநில மீட்பு மற்றும் மறுவாழ்வுத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"மழை வெள்ளத்தில் சிக்கித் தவித்த 1.34 இலட்சம் மக்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

மழை மற்றும் மண்சரிவில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 138ஆக அதிகரித்துள்ளது. மாடுகள், கோழிகள் உள்ளிட்ட 3,221 கால்நடைகள் உயிரிழந்துள்ளன. 53 பேர் காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளனர். 99 பேர் காணாமல்போயுள்ளனர்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய பேரிடர் மேலாண்மை மீட்புப் படையின் 149 குழுக்கள் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளன. ராய்காட், ரத்னகிரி, சாதாரா மாவட்டங்களில் காணாமல்போனவர்களைத் தேடி வருகின்றனர். இராணுவமும் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளது. 'ஒபரேஷன் வர்ஷா' என்ற பெயரில் இராணுவத்தின் மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

அனுத் இராணுவ மையம், பாம்பே பொறியியல் குழு, புனே ஆகிய இடங்களில் வந்த 15 நிவாரண குழுக்கள் மீட்புப் பணிகள் மற்றும் நிவாரண உதவிப் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றன. இராணுவத்தின் மருத்துவர்கள், செவிலியர்களைக்கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு மருத்துவ முகாம்களையும் இராணுவம் நடத்தி வருகிறது. வெள்ளம் சூழ்ந்த பகுதிகளிலிருந்து மீட்கப்பட்ட மக்களுக்கு முதலுதவி சிகிச்சையுடன், மருந்துகளும் வழங்கப்படுகின்றன.

## நடிகையை மணக்கிறார் பாடலாசிரியர் சினேகன்



பாடலாசிரியர் சினேகன் நடிகை கன்னிக்காவை திருமணம் செய்துகொள்ளவுள்ளார்.

சினேகனின் திருமணம் எதிர்வரும் 29ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், அவரது திருமணத்தை மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவரும், நடிகருமான கமல்ஹாசன் நடத்தி வைக்கிறார்.

தமிழ்த் திரையுலகில் சுமார் 20 ஆண்டுகளுக்கும் மேலாக முன்னணி பாடலாசிரியராக வலம் வருபவர் சினேகன். 700இற்கும் மேற்பட்ட படங்களில் பாடலாசிரியராக பணியாற்றியுள்ள அவர், இதுவரை 2500இற்கும் மேற்பட்ட பாடல்களை எழுதியுள்ளார். இவருடைய பல பாடல்கள் இன்றளவும் ரசிகர்கள் மத்தியில் கொண்டாடப்பட்டு வருகின்றன. இதுதவிர, சில படங்களில் நடித்துள்ள சினேகன், தற்போது அரசியலில் கவனம் செலுத்தி வருகிறார்.

இந்நிலையில், பாடலாசிரியர் சினேகனுக்கு எதிர்வரும் 29ஆம் திகதி திருமணம் நடைபெறவுள்ளது. இவர் நடிகை கன்னிகாவை திருமணம் செய்யவுள்ளார்.

'தேவராட்டம்' படத்தில் நடித்துள்ள நடிகை கன்னிகா, பல்வேறு தொலைக்காட்சி தொடர்களிலும் நடித்து வருகிறார். கடந்த 8 ஆண்டுகளாக இருவரும் காதலித்து வந்தனர். இவர்களது காதல் இரு வீட்டாருக்கும் தெரியவந்தது. இதையடுத்து இரு வீட்டாரும் பேசி அவர்களுக்கு திருமணம் செய்துவைக்க முடிவுசெய்தனர்.

எதிர்வரும் 29ஆம் திகதி சென்னையிலுள்ள கிரீன் பார்க் ஹோட்டலில் சினேகன்- கன்னிகா திருமணம் நடைபெறவுள்ளது. மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமல்ஹாசன் திருமணத்தை நடத்திவைக்கிறார். இதில் இரு வீட்டாரின் குடும்பத்தினரும், மக்கள் கட்சி நீதி மய்யம் கட்சி நிர்வாகிகளும் கலந்து கொள்கிறார்கள்.

### 'Work From Home' பரிதாபங்கள்:

## தாலிகட்டும் நேரத்திலும் கடமை; மண்டபத்தில் மடிக்கணினியுடன் மணமகன்..!



மகாராஷ்ட்ராவில் தாலி கட்டும் நேரத்திலும் மணமகன், கையில் கணினியுடன் வேலையில் கவனம் செலுத்திய வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

கொரோனா பாதிப்பால் பல்வேறு நிறுவனங்கள் தங்கள் ஊழியர்களை வீட்டிலிருந்து பணிபுரியுமாறு கேட்டுக்கொண்டுள்ளன. இந்நிலையில், மகாராஷ்ட்ராவில் மணமேடையில் தாலி கட்டும் நேரத்திலும் கையில் கணினியுடன் மணமகன் அமர்ந்து பணியில் ஈடுபட்டார்.


மற்றொரு புறத்தில் அமர்ந்திருந்த மணமகள் இதனைக் கண்டதும் சிரிப்பு தாளாமல் அமர்ந்திருந்ததை அங்கிருந்த வீடியோ ஒன்று பதிவு செய்தது. பின்னர் மணமகன் பணி முடிந்ததும் கணினியை மற்றொரு நபரிடம் ஒப்படைத்துவிட்டு திருமணத்திற்கு தயாரானார்.

# இந்திய செய்திகள்

## கார் விபத்தில் நடிகை யாஷிகா ஆனந்த் படுகாயம்

### ஸ்தலத்திலேயே உயிரிழந்த தோழி; காயங்களுடன் உயிர் தப்பிய நண்பர்கள்

**யாஷிகா மீது 3 பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு**





மாமல்லபுரம் அருகே சூளேரிக்காடு கிழக்கு கடற்கரை சாலையில் கார் விபத்துக்குள்ளானதில் பிரபல நடிகை யாஷிகா ஆனந்த் படுகாயமடைந்துள்ளார். யாஷிகாவின் தோழி ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளதுடன், அவரது ஆண் நண்பர்கள் இருவர் காயங்களுடன் உயிர் தப்பியுள்ளனர்.

சென்னையிலிருந்து ஒரே காரில் 4 பேர் (2 ஆண், 2 பெண்) புதுச்சேரி சென்றுவிட்டு ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கிழக்கு கடற்கரை சாலை வழியாக சென்னை திரும்பிக்கொண்டிருந்தனர். மாமல்லபுரம் அருகே சூளேரிக்காடு என்ற இடத்தில் செல்லும்போது கட்டுப்பாட்டை இழந்த கார், நிலை தடுமாறி சென்டர் மீடியனில் மோதி விபத்துள்ளானது.

இந்த விபத்தில் தெலுங்கானா மாநிலம் ஹைதராபாத்தைச் சேர்ந்த வள்ளிசெட்டி பவனி (வயது 28 - யாஷிகாவின் தோழி) என்ற பெண் தலையில் அடிபட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

அமெரிக்காவில், மென்பொருள் பொறியியலாளராக பணியாற்றும் இவர், கடந்த 4 நாட்களுக்கு முன்புதான் சென்னை வந்துள்ளார்.

இவருடன் வந்து படுகாயமடைந்த சின்னத்திரை நடிகை யாஷிகா ஆனந்த் (வயது 21) சென்னை மலர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார். இவர் விஜய் ரிவியில் ஒளிபரப்பாகும் பிக் பொஸ் நிகழ்ச்சியின் மூலம் பிரபலமடைந்தவர். இவருக்கு அங்கு தீவிர சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது.

உடன் வந்த 2 ஆண்களும் இலேசான காயத்துடன் சென்னையிலுள்ள இரு மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருகின்றனர். இவர்கள் காரில் வரும்போது பாடல் போட்டு கார் டொப் மீது ஏறி டான்ஸ் ஆடி வந்துள்ளதாகக் தெரிவிக்கப்படுகிறது.

மது அருந்துவிட்டு வரும்போது இந்த விபத்து ஏற்பட்டதா என மாமல்லபுரம் காவல்துறையினர் விசாரித்து வருகின்றனர்.

**யாஷிகா ஆனந்த் மீது வழக்குப் பதிவு:**

அதிவேகமாக கார் ஓட்டி உயிரிழப்பு ஏற்படுத்தியதாக யாஷிகா ஆனந்த் மீது 3 பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவுசெய்து மாமல்லபுரம் காவல் ஆய்வாளர் நடராஜன் விசாரணை நடத்தி வருகிறார்.

## ஒலிம்பிக் 2021:




# அடக்குமுறைகளை உடைத்தெறிந்த ஏதிலியர் அணி!

சொந்த நாட்டில் எதிர்கொண்ட அடக்குமுறைகளை உடைத்தெறிந்து தங்களது சுயத்தை நிரூபிக்க ஒலிம்பிக்கில் நாடற்ற அணியில் களமிறங்கும் 29 வீரர்களின் காலடித் தடம் பதக்கங்களைவிட உயர்ந்தவை.

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் 32ஆவது ஒலிம்பிக் போட்டிகள் கோலகலமாகத் தொடங்கி நடைபெற்று வருகிறது. ஜூலை 23ஆம் திகதி ஆரம்பித்து ஓகஸ்ட் 8ஆம் திகதியுடன் நிறைவடையும் இந்த ஒலிம்பிக் போட்டிகளில் 206 நாடுகளைச் சேர்ந்த 11,300 போட்டியாளர்கள் பங்கேற்றுள்ளனர். 5,000 பதக்கங்களுக்கான பட்டியலில் தங்களது நாடுகளின் பெயர் இடம்பெற வேண்டும் என்ற எண்ணம் உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு இருப்பது இயல்பு.


ஆனால், தங்களது வெற்றியை எந்த நாட்டுக்கு அர்ப்பணிக்கப்போகிறோம் என்பதே கேள்விக்குறியான நிலையில், ஒலிம்பிக் போட்டியில் 2ஆவது முறையாக 29 போட்டியாளர்களுடன் களம் கண்டுள்ளது ஏதிலியர் ஒலிம்பிக் அணி (Refugee Olympic Team). கடந்த 2016ஆம் ஆண்டு ரியோ டி ஜெனிரோவில் நடந்த ஒலிம்பிக் போட்டிகளில் 10 வீரர்களுடன் களமிறங்கிய இந்த 'நாடற்ற அணி' டோக்கியோவில் 29 வீரர்களுடன் களம் கண்டுள்ளது.

**உலகமும் ஏதிலியர்களும்**

போர், மத மோதல் மற்றும் அரசியல் ரீதியான உள்நாட்டுப் பிரச்சினைகளால் ஒரு நாட்டிலிருந்து கட்டாயமாக வெளியேறி மற்றொரு நாட்டுக்கு குடிபெயர்ந்தவர்கள் ஏதிலியர்கள். உலகிலுள்ள மொத்த ஏதிலியர்களில் 68 சதவீதத்துக்கும் அதிகமானோர் சிரியா, வெனிசுலா, தென்சூடான், ஆப்கானிஸ்தான் மற்றும் மியன்மார் ஆகிய 5 நாடுகளைச் மட்டுமே சேர்ந்தவர்கள் என ஏதிலியர்களுக்கான ஐக்கிய நாடுகள் ஆணையம் தெரிவிக்கிறது. உலகெங்கும் வாழும் ஏதிலியர்களுக்கு முறையான மருத்துவ வசதிகள், சுத்தமான குடிநீர், கல்வி உள்ளிட்ட அடிப்படைத் தேவைகள் மறுக்கப்பட்டவர்கள். மனிதாபிமானமற்ற நிலையில் வாழும் இவர்கள் பாகுபாடு, பாலியல் வன்முறை மற்றும் மனித கடத்தல் உள்ளிட்டவைகளுக்கு இரையாகின்றனர்.

சொந்த நாட்டைவிட்டு வெளியேறிய இவர்களால் தங்களது நாட்டுக்காக விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க முடிவதில்லை. இவர்களது திறமைகளை அங்கீகரிக்கும் வகையில் சர்வதேச ஒலிம்பிக் சங்கம், கடந்த 2016ஆம் ஆண்டு ரியோ டி ஜெனிரோவில் நடந்த ஒலிம்பிக் போட்டிகளில் 'ஏதிலியர் ஒலிம்பிக்' அணி என்ற பெயரில் இவர்களை போட்டிகளில் பங்கேற்க அனுமதி வழங்கியது.


இது உலகம் முழுவதும் வாழும் நாடற்றவர்களாக வாழும் ஏதிலிய மக்களுக்கு நம்பிக்கை அளிப்பதுடன், இந்த நாடுகளில் நிலவும் அசாதாரண சூழலை உலகுக்கு எடுத்துக்காட்டியுள்ளது. நாடற்றவர்கள் அணி பங்கேற்ற முதல் ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் எதுவும் வெல்லவில்லை என்றாலும் கூட இந்த அணியை அனுமதித்த சர்வதேச ஒலிம்பிக் சங்கத்துக்கு உலகின் பல நாடுகளின் பாராட்டுகள் கிடைத்தன. இந்த நாடற்ற அணி வீரர்கள் தொடக்க விழா அணிவகுப்பின்போது ஒலிம்பிக் கொடியை ஏந்தி வந்தனர். இவர்கள் பங்கேற்கும் அதிகாரபூர்வமான போட்டிகளின் போது ஒலிம்பிக் கீதம் இசைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



**யுஸ்ரா மர்டினி (Yusra Mardini)**

நீச்சல் வீராங்கனையான யுஸ்ரா மர்டினி சிரியாவைச் சேர்ந்தவர். சிரியாவில் நடந்த போரில் இவர்கள் வசித்த வீடு தரைமட்டமான போது இவருக்கு வயது 17. உள்நாட்டுப் போரின் காரணமாக தனது சகோதரியுடன் லெபனான், துருக்கி வழியாக கிரீஸுக்கு படகில் சென்றபோது, படகு பழுதானது. தனது சகோதரி உள்ளிட்ட மேலும் 2 பேரின் உதவியுடன் தண்ணீருக்குள் மூழ்கி 3 மணிநேரம் போராடி படகின் மோட்டாரை சரிசெய்து கிரீஸ் நாட்டுக்குச் சென்றார். பின்னர் அங்கிருந்து ஜேர்மனியில் தஞ்சமடைந்தார். அங்கு நீச்சல் பயிற்சிகளை பெற்று தற்போது நாடற்ற அணிக்காக இரண்டாவது டோக்கியோ ஒலிம்பிக்கில் பங்கேற்றுள்ளார்.

**அஹ்மத் வைய்ஸ் (Ahmad wais)**



சைக்கிள் பந்தய வீரரான இவரும் சிரியாவைச் சேர்ந்தவர். சிரியாவிலுள்ள 18 வயது முதல் 42 வயதுடைய ஆண்கள் கட்டாயம் இராணுவத்தில் பணியாற்ற வேண்டும். துருக்கி வழியாக சுவிட்சர்லாந்துக்கு தப்பிச்சென்று தஞ்சமடைந்துள்ளார். இராணுவப் பணியை நிறைவேற்றாமல் நாட்டைவிட்டு வெளியேறியதால், அவரது நாட்டில் தேடப்படும் மனிதராக உள்ளார். இதனால் அவருக்கு வழங்கப்படும் சிறைத்தண்டனை மற்றும் வலுக்கட்டாயமான இராணுவப் பயிற்சிகளுக்கு பயந்து


7 ஆண்டுகளுக்கு மேலாக சொந்த நாட்டுக்குத் திரும்பாமல் இருந்துவருகிறார்.

**கிமியா அலிஜத் (Kimia Alizadeh)**



டேக்வாண்டோ வீராங்கனையான இவர் ஈரானைச் சேர்ந்தவர். கடந்த 2016ஆம் ஆண்டில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் டேக்வாண்டோ போட்டியில் அந்நாட்டுக்காக வெண்கலப் பதக்கம் வென்று கொடுத்தவர். ஆனால், ஈரானில் பெண்களுக்கு எதிராக தொடரும் ஒடுக்குமுறைகளால் நாட்டைவிட்டு வெளியேறி ஜேர்மனியில் தஞ்சமடைந்துள்ளார். ஈரான் அரசு தொடர்ந்து இவருக்கு கண்டனம் தெரிவித்து வந்தாலும், தனது விளையாட்டில் ஜொலித்துவருகிறார் கிமியா.

**மசோமா அலி ஜதா (Masomah Ali zada)**



சைக்கிளிங் வீராங்கனையான இவர் ஆப்கானிஸ்தானைச் சேர்ந்தவர். அங்கு சிறுவயது பெண் குழந்தைகள் கூட வீட்டை விட்டு வெளியேற தடை விதிக்கப்பட்டிருந்தது. அதிலும் இவர் ஹசாரா எனப்படும் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர் என்பதால் ஏராளமான பிரச்சினைகள், கண்டனங்கள், மற்றும் கொலை மிரட்டல்களை சந்திக்க நேரிட்டது. இதனால் தனது குடும்பத்துடன் நாட்டை விட்டு வெளியேறி பிரான்ஸில் தஞ்சமடைந்துள்ளார்.


இப்படி நாடற்ற அணியில் இடம்பெற்றுள்ள இந்த 29 பேருக்கு பின்னால் வலியும், வேதனையும் நிறைந்த உண்மை உறைந்துள்ளது. சொந்த அடையாளங்களைத் துறந்து, பெற்றோர், உற்றார் உறவினர்களை அரச பயங்கரவாதம், போர்க் குற்றங்களுக்கு பலி கொடுத்துவிட்டு, தங்களது சுயத்தை நிரூபிக்கும் முயற்சியில் நாடற்ற அணியில் இடம்பெற்றுள்ள 29 வீரர் வீராங்கனைகள் களத்தில் பதிக்கும் ஒவ்வொரு காலடித் தடமும் பதக்கங்களை விட உயர்ந்தவை.

# உலக செய்திகள்

கொரோனாவை தொடர்ந்து

# அமெரிக்காவை அச்சுறுத்தும் 'கென்டிடா ஓரிஸ்' பூஞ்சை

## இதுவரை 123 பேருக்கு தொற்று உறுதி



கொரோனாவை தொடர்ந்து அமெரிக்காவில் தற்போது வேகமாக பரவிவரும் 'கென்டிடா ஓரிஸ்' (Candida auris) பூஞ்சை தொற்று மக்களிடையே மிகுந்த அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

எதிர்ப்புச் சக்தி இல்லையெனில் இந்த பூஞ்சை தொற்று இரத்த ஓட்டத்தைப் பாதித்து மரணத்தை ஏற்படுத்தும் அளவுக்கு ஆபத்தானது என தெரிவிக்கப்படுகிறது. வொஷிங்டனில் 101 பேருக்கும், டெக்சாசில் 22 பேருக்கும் இந்த நோய் தொற்று பாதிப்பிருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது.

''காய்ச்சல் மற்றும் குளிர் ஆகியவை 'கென்டிடா ஓரிஸ்' நோய்த்தொற்றின் பொதுவான அறிகுறிகளாகும். நோய் பாதித்தவர் களுக்கு என்டிபயோடிக் சிகிச்சை அளித்தபோதும் உடல்நிலை சீரடையவில்லை'' என அமெரிக்க நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் தெரிவித்துள்ளது.

ஒலிம்பிக் கோலாகலம்:

## 205 நாட்டு கொடிகளால் ஒளிர்ந்த 'எம்பயர் ஸ்டேட்'



நியூயோர்க் நகரிலுள்ள வரலாற்று சிறப்புமிக்க எம்பயர் ஸ்டேட் (Empire State) கட்டடம் ஒலிம்பிக்கில் பங்கேற்கும் ஒவ்வொரு நாட்டு கொடியின் வண்ணத்திலும் தலா பத்து விநாடிகளுக்கு ஒளிர்ந்தது.

முழு நிலா பின்புறமிருக்க 205 நாட்டு கொடிகளால் சுமார் 5 மணிநேரங்களுக்கு ஒளிர்ந்த 102 மாடி எம்பயர் ஸ்டேட் (Empire State) கோபுரம் பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்தது.

இந்நிலையில்m டோக்கியோ ஒலிம்பிக்கில் பங்கேற்கும் அமெரிக்க வீரர்களை உற்சாகப்படுத்தும் விதமாக வெள்ளை மாளிகை



அமெரிக்க கொடியின் வண்ணத்தால் ஒளிரூட்டப்பட்டது.

வியாழனில் 80 நிலவுகள்:



## 'யூரோப்பா' நிலவை ஆய்வுசெய்ய ஸ்பேஸ்-எக்ஸுடன் நாசா ஒப்பந்தம்

வியாழன் கோளின் 80 நிலவுகளில் ஒன்றான யூரோப்பாவில் ஆய்வு மேற்கொள்வதற்காக அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு அமைப்பான நாசா, அந்நாட்டின் தனியார் நிறுவனமான ஸ்பேஸ்-எக்ஸுடன் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

உயிரினங்கள் வசிப்பதற்கு யூரோப்பா ஏற்றதா என்பதை தெரிந்துகொள்வதற்காக அந்த நிலவுக்கு ஆய்வுக் கலனை 2024 செலுத்துவதற்கான திட்டத்தில், ஸ்பேஸ்-எக்ஸின் ஃபோல்கன் கனரக ரொக்கெட் பயன்படுத்தப்படவுள்ளது.

23 அடுக்குகளைக்கொண்ட, ஓரளவு மீண்டும் பயன்படுத்தத்தக்க ஃபோல்கன்தான் உலகில் தற்போது செயற்பாட்டிலிருக்கும் அதிக சக்திவாய்ந்த ரொக்கெட் என்று தெரிவிக்கப்படுகின்றது.

# ஆப்கானிஸ்தானில் ஒரே நாளில் 262 தீவிரவாதிகள் சுட்டுக்கொலை

ஆப்கனில் நேற்று (24 மணி நேரத்துள்) 262 தலிபான் தீவிரவாதிகளை சுட்டுக்கொன்றதாக அந்நாட்டு பாதுகாப்புப் படையினர் அறிவித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறியதைத் தொடர்ந்து, தலிபான் பயங்கரவாதிகள் கடுமையாக தாக்கி, பல நகரங்களை தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். இதனால், ஆப்கன் இராணுவம் - தலிபான் பயங்கரவாதிகள் இடையே கடுமையான மோதல் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், ஆப்கன் பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

லக்மன், நங்கர்ஹர், நூரிஸ்தான், குனார், கஜ்னி, பக்டியா, காந்தகார், ஹெரட், பலக், ஜோவ்ஜன் ஹெல்மண்ட், குண்டூஸ் பகுதிகளில் கடந்த 24 மணிநேரத்தில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கையில் 262 தலிபான் தீவிரவாதிகள்




சுட்டுக்கொல்லப்பட்டனர். 176 பேர் படுகாயமடைந்தனர். 21 ஐஇடி வெடிகுண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டு செயலிழக்கப்பட்டன.

- இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதனிடையே தலிபான்களின் ஊடுருவலை தடுக்கும் வகையில் காபூலை தவிர்த்து மற்ற மாகாணங்களில் இரவு 10 மணிமுதல் அதிகாலை 4 மணிவரை ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பெகாசஸ் விவகாரம்:

# இஸ்ரேலுக்கு பிரான்ஸ் அழுத்தம்



பெகாசஸ் மென்பொருள் மூலம் மொராக்கோ பாதுகாப்புப் படைகள் தன்னை வேவு பார்த்ததாக வெளியான செய்தி குறித்து பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரான், இஸ்ரேல் பிரதமர் நஃப்தலி பென்னட்டுடன் கலந்துரையாடியுள்ளார்.

பெகாசஸ் உளவு விவகாரம் உலகம் முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்திவருகிறது. இஸ்ரேல் நிறுவனமான என்எஸ்ஓ தயாரித்த பெகாசஸ் மென்பொருள் மூலம் 50 ஆயிரம் தொலைபேசிகள் உளவு பார்க்கப்பட்டதாக கடந்த வாரம் செய்தி வெளியானது.

குறிப்பாக, பெகாசஸ் மூலம் மொராக்கோ பாதுகாப்புப் படைகள் பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரானை உளவு பார்த்ததாக செய்திகள் வெளியாகின.

இந்நிலையில், மெக்ரான் இஸ்ரேல் பிரதமர் நஃப்தலி பென்னட்டை ஜூலை 22ஆம் திகதி தொடர்புகொண்டு பேசியுள்ளார்.

இதுகுறித்து இஸ்ரேல் 'செனல் 11' வெளியிட்ட செய்தியில்,

''இந்த விவகாரத்தை தீவிரமாக எடுத்துகொள்ள வேண்டும் என மெக்ரான், பென்னட்டிடம் தெரிவித்துள்ளார். அதற்கு, இதுபோன்ற குற்றச்சாட்டுகள் தான் பதவியேற்பதற்கு முன்பாகவே இருந்துவந்ததாகவும் தற்போது தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என பென்னட் பதிலளித்துள்ளார்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பெகாசஸ் விவகாரம் தவறாக பயன்படுத்தப்பட்டுள்ளது என்ற செய்தி வெளியான நிலையில், ஜூலை 22ஆம் திகதி தேசிய பாதுகாப்புக் குழு கூட்டத்தை மெக்ரான் கூட்டினார்.

இதனிடையே, மொராக்கோ பாதுகாப்புப் படைகள் மெக்ரானை உளவு பார்த்ததாக வெளியான செய்தியை அந்நாடு மறுத்துள்ளது. அதேபோல், என்எஸ்ஓ நிறுவனமும் இதுகுறித்து வெளியான செய்திக்கு மறுப்பு தெரிவித்துள்ளது.

# ''பெகாசஸால்தான் இரவில் மக்கள் நிம்மதியாக உறங்குகின்றார்கள்''

## நியாயப்படுத்தும் என்எஸ்ஓ; ஏற்க மறுக்கும் அமெரிக்கா



''உளவு அமைப்புகள் மற்றும் சட்ட அமுலாக்கப் பிரிவுகளிடம் பெகாசஸ் போன்ற தொழில்நுட்பங்கள் இருப்பதால்தான் கோடிக்கணக்கான மக்கள் நிம்மதியாக இரவில் தூங்க முடிகிறது, தெருவில் பாதுகாப்பாக நடந்துசெல்ல முடிகிறது'' என இஸ்ரேலின் என்எஸ்ஓ நிறுவனம் விளக்கமளித்துள்ளது.

இஸ்ரேலின் சைபர் பாதுகாப்பு நிறுவனமான என்எஸ்ஓ குழுமம் தயாரித்துள்ள பெகாசஸ் உளவு மென்பொருள் உலகளவில் சர்ச்சையாகியுள்ளது. தொலைபேசிகளை ஒட்டுக்கேட்டு தகவல்களை எடுக்கக்கூடிய இந்த மென்பொருள், ஒரு நாட்டின் அரசாங்கத்திற்கு மட்டுமே விற்கப்படும்.

அந்தவகையில் பெகாசஸ் உளவு மென்பொருளை பயன்படுத்தி பல நாடுகளிலும் பத்திரிகையாளர்கள், சமூக ஆர்வலர்கள் கண்காணிக்கப்பட்டுள்ளனர்.

இந்தியாவில் காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி உட்பட பல பத்திரிகையாளர்கள், நீதிபதிகள், ஒன்றிய அமைச்சர்கள் செல்போன்கள் ஒட்டுக் கேட்கப்பட்டதாக சர்வதேச ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. இது இந்திய அரசியலில் கடும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இதனால், கடந்த 4 நாட்களாக நாடாளுமன்றம் முடங்கி கிடக்கிறது.

இந்நிலையில், பெகாசஸ் தொழில்நுட்பம் குறித்து என்எஸ்ஓ நிறுவனத்தின் செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளதாவது,

''இன்று உலகில் கோடிக்கணக்கான மக்கள் நிம்மதியாக இரவில் தூங்குகிறார்கள், தெருவில் பாதுகாப்பாக நடக்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் பெகாசஸ் போன்ற தொழில்நுட்பங்கள்தான்.

இதுபோன்ற தொழில்நுட்பங்களை புலனாய்வு மற்றும் சட்ட அமுலாக்கத் துறையினர் கைவசம் வைத்திருப்பதால், தீவிரவாத நாசவேலைகளை முன்கூட்டியே அறிந்து தடுக்க முடிகிறது. சமூக ஊடகங்கள் மற்றும் உடனடி தகவல் பரிமாற்ற தொழில்நுட்பங்கள் மூலம் நாசவேலைகள் செய்யப்படுவதை கண்காணிக்க எந்தவொரு தீர்வும் இல்லாததால், என்எஸ்ஓ உலகின் பல இணைய உளவு நிறுவனங்களுடன் இணைந்து, அரசாங்கங்களுக்கான இணைய உளவு கருவியை வழங்குகிறது.

இந்த தொழில்நுட்பத்தை என்எஸ்ஓ நிறுவனம் இயக்குவதில்லை. அதேநேரம், இதில் சேகரிக்கப்படும் தகவல்கள் என்ட்-டு-என்ட் என்கிரிப்ஷன் செய்யப்படுவதால், அவற்றை எங்களால் அணுக முடியாது. பாதுகாப்பான உலகத்தை உருவாக்க நாங்கள் எங்களால் முடிந்த அனைத்தையும் செய்கிறோம்.''

-இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, என்எஸ்ஓ நிறுவனம் கடந்த 2019இல் அளித்த பதில் ஒன்றில்,

''கடுமையான குற்றங்கள், பயங்கர வாதத்திற்கு எதிராக பயன்படுத்துவதை தவிர வேறு விடயங்களுக்கு எங்கள் தயாரிப்பை பயன்படுத்தினால், ஒப்பந்த அடிப்படையில் இரத்துச்செய்யப்படும். தவறான பயன்பாட்டை கண்டறிந்தால் நாங்கள் நடவடிக்கை எடுப்போம். இந்த தொழில்நுட்பம் மனித உரிமைகளை பாதுகாப்பதில் அக்கறை கொண்டது'' - என தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**''ஏற்க முடியாது'' - அமெரிக்கா**

''சட்டத்துக்கு விரோதமான வகையில் பெகாசஸ் தொழில்நுட்பம் மூலம் உளவு பார்க்கும் செயலை ஏற்க முடியாது; அது எப்போதும் கவலைக்குரியது'' என அமெரிக்கா கருத்து தெரிவித்துள்ளது.

இதுகுறித்து தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான செயலாளர் தோம்சன் தெவிக்கையில்,

''ஆளும் கட்சியை விமர்சிப்பவர்கள், பத்திரிகையாளர்கள், சமூக அமைப்புகள் உள்ளிட்ட யாராக இருந்தாலும் சட்டவிரோதமாக இத்தகைய உளவு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உளவுபார்ப்பது எப்போதும் கவலைக்குரிய அம்சமே'' - என்றார்.

# செக்கச் சிவந்த நிலா!



அமெரிக்க வானில் செக்கச் சிவந்த நிறத்தில் தோன்றிய நிலவு தோன்றியுள்ளது.

வொஷிங்டனிலுள்ள வானுயர கட்டடங்களுக்கு பின் தோன்றிய நிலா சிவப்பு நிறத்தில் காட்சியளித்தது. முழு நிலவை பார்த்து இரசித்த மக்கள் தங்கள் செல்போன்களில் புகைப்படம் எடுத்து மகிழ்ந்தனர்.

மேலும் ஒரு தரப்பினர் பற்றி எரியும் காட்டுத் தீயை பிரதிபலிக்கும் பிம்பமாக முழு நிலா சிவந்து காட்சியளித்ததாக தெரிவித்தனர்.

# காதல் மைதானமான கிரிக்கெட் மைதானம்..!




இங்கிலாந்தில் ரி-20 கிரிக்கெட் போட்டியின்போது மைதானத்தில் அமர்ந்திருந்த காதலியிடம் காதலன், தன் காதலை வெளிப்படுத்திய வீடியோ சமூக வலைத்தளங்களில் அதிகம் பேரால் பகிரப்பட்டு வருகிறது.

மான்செஸ்டரில் இங்கிலாந்து -பாகிஸ்தான் அணிகளுக்கிடையே 3ஆவது இறுதி 20 ஓவர் கிரிக்கெட் போட்டியை காண வந்த காதலியிடம் காதலன் தன்னுடைய காதலை வெளிப்படுத்த மகிழ்ச்சியுடன் காதலியும் அதனை ஏற்கிறார்.

சமூக வலைத்தளங்களில் இந்த வீடியோ வெளியிடப்பட்டதை யடுத்து காதல் ஜோடிக்கு வாழ்த்துகள் குவிந்து வருகின்றன.

# பிலிப்பைன்ஸில் வெள்ளம்: 14,000 பேர் பரிதவிப்பு




பிலிப்பைன்ஸில் தொடரும் கடும் மழையால் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கையடுத்து சுமார் 14 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

பிலிப்பைன்ஸின் மரிகினா (Marikina) நகரில் ஆற்றுநீர் கரைபுரண்டு ஓடியதால் 2,900 பேர் பாடசாலை வளாகத்தில் கூடாரங்கள் அமைத்து தங்கவைக்கப்பட்டனர். வெள்ளத்தால் வீடுகளை விட்டு வெளியேற முடியாமல் தவித்த முதியவர்களை கடலோராக் காவல்படையினர் முதுகில் சுமந்து சென்றனர். பருவநிலை மாற்றத்தால் இந்தியா, சீனா மற்றும் பல்வேறு ஐரோப்பிய நாடுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

# அனைவரும் தடுப்பூசி ஏற்றிக்கொள்ள வேண்டும்

- ட்ரம்ப்



அனைவரும் கொரோனா தடுப்பூசி ஏற்றிக்கொள்ள வேண்டும் - என்று அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனல்ட் ட்ரம்ப் பரிந்துரைத்துள்ளார்.

கொரோனா உச்சத்தில் இருந்த சமயத்தில் முகக்க வசம் அணியவும், தடுப்பூசி போட்டுக்கொள்வ திலும் முரண்பட்ட கருத்துகளைக் கொண்டிருந்த ட்ரம்ப், இப்போது, கொரோனா தடுப்பூசியை அமெரிக்கர்கள் அனைவரும் ஏற்றிக்கொள்ள வேண்டும் என்றும், அதேசமயம் அதை போட்டுக்கொள்வதா வேண்டாமா என்னும் முடிவில், மக்களுக்கு இருக்கும் தனி மனித சுதந்திரத்தை 100 சதவீதம் நம்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

# Sports Diary

## திங்கள்

### இலங்கையின் முதல் பெண் நடுவர்



இலங்கையின் விளையாட்டுத் துறை வரலாற்றில் முதன்முறையாக ஒலிம்பிக் போட்டியின் பெண் நடுவராக டி.நெல்கா ஷிரோமலா தேர்வு செய்யப்பட்டுள்ளார். டோக்கியோவில் நடைபெறுகின்ற 2020 ஒலிம்பிக் போட்டிகளின் குத்துச்சண்டைப் போட்டிக்கு இலங்கை பொலிஸின் தலைமை ஆய்வாளர் டி.நெல்கா ஷிரோமலா நடுவராகச் செயற்படவுள்ளார்.

## செவ்வாய்

### தன்னார்வத் தொண்டருக்கு கொரோனா

ஒலிம்பிக் போட்டிக்கான ஆயத்தப் பணிகளைக் கவனிக்கும் தன்னார்வத் தொண்டர்கள் குழுவைச் சேர்ந்த ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டிருப்பதை போட்டி அமைப்புக் குழு அறிவித்துள்ளது.

## புதன்

### அவுஸ்திரேலியாவில் ஒலிம்பிக்

2032ஆம் ஆண்டு நடைபெறவுள்ள கோடைகால ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்கான சந்தர்ப்பத்தை அவுஸ்திரேலியாவின் பிரிஸ்பேன் நகரம் பெற்றுக் கொண்டதாக சர்வதேச ஒலிம்பிக் பேரவை உத்தியோகபூர்வமாக அறிவித்தது. இதேவேளை 2024ஆம் ஆண்டு ஒலிம்பிக் பிரான்ஸ் தலைநகர் பெரிஸிலும், 2028ஆம் ஆண்டு ஒலிம்பிக் அமெரிக்காவில் லொஸ் ஏஞ்சல்ஸிலும் நடைபெறவுள்ளன.

## வியாழன்


### பணிப்பாளர் பதவி நீக்கம்

'ஹோலோகாஸ்ட்' குறித்த கடந்தகால சர்ச்சைக்குரிய கருத்துகளினால் டோக்கியோ ஒலிம்பிக் ஆரம்ப விழாவின் பணிப்பாளர் கென்டாரோ கோபயாஷி பதவியிலிருந்து நீக்கப்பட்டதாக டோக்கியோ ஒலிம்பிக் அமைப்புக் குழு தெரிவித்தது.

### அணிக்குத் திரும்பிய ஸ்டோக்ஸ்

இந்திய அணியுடன் நடைபெறவுள்ள 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலிரண்டு போட்டிகளுக்கான இங்கிலாந்து அணியின் குழாம் அறிவிக்கப்பட்ட நிலையில், பாகிஸ்தானுடனான டி20 தொடரில் ஓய்வு வழங்கப்பட்ட சகலதுறை வீரர் பென் ஸ்டோக்ஸ் மீண்டும் டெஸ்ட் அணிக்குத் திரும்பினார்.

### நோர்வே அணிக்கு 1,500 யூரோ அபராதம்



பல்கேரியாவில் ஐரோப்பிய கடற்கரைக் கைப்பந்து (beach handball) சம்பியன்ஷிப் போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் நோர்வே பெண்கள் அணியினர் பிகினி கீழாடைக்கு பதிலாக காற்சட்டை அணிந்து விளையாடினர். இதற்காக நோர்வேயின் பெண்கள் கடற்கரைக் கைப்பந்து அணிக்கு ஆயிரத்து 500 யூரோக்கள் அபராதம் விதிக்கப்பட்டது.

## வெள்ளி

### கோலாகலமாக ஆரம்பமான டோக்கியோ ஒலிம்பிக்

32ஆவது ஒலிம்பிக் போட்டிகள் ஜப்பானின் தலைநகர் டோக்கியோவில் கண்கவர் வர்ணங்களுடன் ஆரம்பமானது. ஆரம்ப விழாவில் சிறப்பு விருந்தினராக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மனைவி ஜில் பைடன், பிரான்ஸ் ஜனாதிபதி எமானுவேல் மெக்ரோன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். 204 நாடுகன் அணியினரும் தங்களது தேசியக் கொடியுடன் அணிவகுத்துச் சென்றனர்.

### 5 ஆயிரம் பதக்கங்கள்

டோக்கியோ ஒலிம்பிக் மற்றும் பாராலிம்பிக் ஆகிய இரு போட்டிகளுக்காக ஏறக்குறைய 5 ஆயிரம் பதக்கங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன. பழைய இலத்திரனியல் பொருட்கள் மறுசுழற்சி செய்யப்பட்டு அதிலிருந்து கிடைத்த உலோகங்களும் பதக்கத் தயாரிப்புக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதற்காக 78 ஆயிரத்து 985 டன் எடைகொண்ட இலத்திரனியல் பொருட்களை ஜப்பானிய மக்கள் தானமாக வழங்கினார்கள்.

### பதக்கங்கள் தயாரிக்க 32 கிலோ தங்கம்

ஒலிம்பிக் பதக்கங்களைத் தயாரிக்க மொத்தம் 32 கிலோ தங்கம், 3 ஆயிரத்து 500 கிலோ வெள்ளி, 2 ஆயிரத்து 200 கிலோ வெண்கலம் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன.

### 4 வருடங்களின் பின்னர் வெற்றி

இந்திய அணியுடனான 3ஆவதும், இறுதியுமான ஒருநாள் சர்வதேச போட்டியில் 3 விக்கெட்களினால் வெற்றிபெற்ற இலங்கை அணி, 4 வருடங்களின் பின்னர் இந்திய அணியுடன் ஒருநாள் சர்வதேச வெற்றியைப் பதிவு செய்தது. மேலும், இலங்கை அணி 9 வருடங்களின் பின்னர் இந்திய அணியை தங்களது சொந்த மண்ணில் வீழ்த்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## சனி

### முதல் தங்கம் வென்ற சீனா

டோக்கியோவில் நடைபெற்றுவரும் 32ஆவது ஒலிம்பிக் போட்டியின் முதல் தங்கப்பதக்கத்தை சீனா வென்றது. மகளிருக்கான 10 மீற்றர் எயார் ரைபிள் துப்பாக்கி சுடுதல் போட்டியின் சீனாவின் யாங் குயான் தங்கப்பதக்கம் வென்றார். ரஷ்யாவின் அனஸ்தேசியா கலாஷினா வெள்ளிப் பதக்கத்தையும், சுவிட்ஸர்லாந்தின் நினா கிறிஸ்டன் வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.



### இந்தியாவுக்கு முதல் பதக்கம்



பெண்களுக்கான 49 கிலோ எடைப் பிரிவு பளுதூக்கல் போட்டியில் இந்தியாவைச் சேர்ந்த மீராபாய் சானு வெள்ளிப் பதக்கத்தைப் பெற்று டோக்கியோ ஒலிம்பிக்கில் இந்தியாவுக்கு முதல் பதக்கத்தை பெற்றுக் கொடுத்தார்.

## ஞாயிறு

### முதல் உலக சாதனை

மகளிருக்கான 4X100 மீற்றர் ப்ரீஸ்டைல் அஞ்சல் நீச்சல் போட்டியில் அவுஸ்திரேலிய மகளிர் அணி 3:29.69 நிமிடங்களில் பந்தயத் தூரத்தை நீந்தி, முந்தைய சாதனையிலிருந்து 0.36 வினாடிகளை மீதமாக்கி டோக்கியோ ஒலிம்பிக்கில் முதலாவது உலக சாதனையைப் படைத்துள்ளது. முன்னைய உலக சாதனையும் அவுஸ்திரேலிய அணி வசமிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### முதல் சுற்றுடன் வெளியேறிய இலங்கை வீராங்கனை

இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி ஆர்டிஸ்டிக் ஜிம்னாஸ்டிக் போட்டியில் பங்குபற்றிய மில்கா கிஹானி டி சில்வா, போட்டியில் மொத்தமாக பங்குபற்றிய 85 வீராங்கனைகளில் 45.798 புள்ளிகளுடன் 62 ஆவது இடத்தைப் பெற்றார். இறுதிச்சுற்றில் முதல் 24 இடங்களைப் பெறுபவர்களே பங்கேற்க முடியும்.

# முதல் நாளில் சோதப்பிய இலங்கை வீரர்கள்



டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளின் முதல் நாள் ஆட்டத்தில் இலங்கை வீர, வீராங்கனைகளான மூவர் ஏமாற்றத்தை சந்தித்தனர். குறிபார்த்து சுடுதல் தகுதிகாண் சுற்றில் பங்குபற்றிய 50 வீராங்கனைகளில் இலங்கையின் தெஹானி எகொடவெல, 611.5 புள்ளிகளுடன் 49ஆவது இடத்தைப் பெற்றார். இதனால், அவர் அடுத்த சுற்றுக்கான வாய்ப்பை இழந்தார்.

பெண்களுக்கான 100 மீற்றர் வண்ணத்துப்பூச்சி வகை நீச்சலுக்கான 5 தகுதிகாண் போட்டிகள் நடைபெற்றன. இச்சுற்றின் முதலாவது போட்டியில் அஸர்பைஜான் வீராங்கனை, அகதிகள் அணி வீராங்கனை ஆகியோருடன் இலங்கையின் அனிக்கா கபுர் போட்டியிட்டார்.

மூன்று வீராங்கனைகள் மாத்திரமே பங்குபற்றிய போட்டியை 1 நிமிடம் 05.33 வினாடிகளில் நிறைவு செய்த அனிக்கா இரண்டாமிடத்தைப் பெற்றார். எனினும், 33 வீராங்கனைகள் பங்குபற்றிய 5 தகுதிகாண் போட்டிகள் முடிவில் ஒட்டுமொத்த நிலையில் 32ஆம் இடத்தையே அனிக்கா கபுர் பெற்றார். இதனால் அவரும் வாய்ப்பை இழந்தார். எனினும், இவர் பெண்களுக்கான 50 மீற்றர் வண்ணத்துப்பூச்சி வகை நீச்சலிலும் பங்குபற்றவுள்ளார்.

இதேவேளை ஆடவர் ஒற்றையர் பெட்மிண்டன் போட்டியில் குழு 'எஃப்' இல் இடம்பெற்ற இலங்கை வீரர் நிலூக்க கருணாரட்ன, சைனீஸ் தாய்ப்பே வீரர் சு வெய் வெங்கிடம் 12-21, 15-21 என்ற இரு நேர் செட்களில் தோல்வியடைந்தார். நிலூக்க கருணாரட்ன அடுத்ததாக இன்று அயர்லாந்து வீரரை எதிர்கொள்ளவுள்ளார். எனினும், அவருக்கான அடுத்த சுற்று வாய்ப்பு அரிதாகவே காணப்படுகிறது.

# இலங்கையில் நடைபெறவுள்ள ஆப்கானிஸ்தான் – பாகிஸ்தான் ஒருநாள் தொடர்



ஆப்கானிஸ்தான் - பாகிஸ்தான் ஆகிய அணிகளுக்கிடையில் ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெறவிருந்த 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடரானது இலங்கைக்கு மாற்றப்பட்டுள்ளது.

ஐ.சி.சி. உலகக்கிண்ண சுப்பர் லீக் தொடரின் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடரில் பாகிஸ்தான் அணியும், ஆப்கானிஸ்தான் அணியும் எதிர்வரும் செப்டெம்பர் மாத ஆரம்பத்தில் ஐக்கிய அரபு இராச்சியத்தில் மோதவிருந்தன.

இந்நிலையில் எதிர்வரும் செப்டெம்பர் மாத காலப்பகுதியில் இந்தியன் ப்ரீமியர் லீக் தொடரின் எஞ்சிய போட்டிகள், ஐக்கிய அரபு இராச்சியத்தின் மூன்று மைதானங்களிலும் நடைபெறவுள்ள காரணத்தினால், குறித்த மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடரை இலங்கைக்கு மாற்றுவதற்கு இரு நாட்டு கிரிக்கெட் சபைகளும் இணக்கம் தெரிவித்துள்ளன.

அதனடிப்படையில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 1ஆம் திகதி முதல் 5ஆம் திகதி வரையான காலப்பகுதியில், ஆப்கானிஸ்தான் - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான 3 ஒருநாள் சர்வதேச போட்டிகளும் ஹம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறவுள்ளன.

# 49 வருடங்களுக்குப் பின் பதக்கம் வெல்லாத அமெரிக்கா

கொரோனா வைரஸின் சவாலுக்கு மத்தியில் 32ஆவது ஒலிம்பிக் போட்டிகள் தற்போது ஜப்பானின் தலைநகர் டோக்கியோவில் நடைபெற்று வருகின்றன. ஆரவாரமின்றி, கடந்த வெள்ளிக்கிழமை 2020 டோக்கியோ ஒலிம்பிக் ஆரம்பமான நிலையில், நேற்று முன்தினம் சனிக்கிழமை முதல் நாள் போட்டிகள் முடிவில், பதக்கப்பட்டியலில் சீனா ஆதிக்கம் செலுத்தியது. 3 தங்கம் மற்றும் ஒரு வெண்கலம் உள்ளடங்கலாக மொத்தமாக நான்கு பதக்கங்களைப் பெற்று சீனா ஆதிக்கம் செலுத்தியது.

இந்நிலையில் 49 வருடங்களுக்கு பின்னர் அமெரிக்காவால் முதல் நாளில் எந்தவொரு பதக்கத்தையும் பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டிருந்தது. அதாவது கடந்த 1972ஆம் ஆண்டு ஜேர்மனியில் நடைபெற்ற 10ஆவது ஒலிம்பிக்கின் பின்னர், அடுத்து நடைபெற்ற 21 ஒலிம்பிக் போட்டிகளிலும் முதல் நாளில் பதக்கம் வென்றுவந்த அமெரிக்கா, 2020 டோக்கியோ ஒலிம்பிக்கின் முதல் நாளில் எந்தவொரு பதக்கத்தையும் கைப்பற்றவில்லை.



# ஒலிம்பிக் ரசிகனுக்கு வில்லனான கொரோனா!

*(ரமணி)*



விளையாட்டின் மீது தீராக் காதல் கொண்ட ஜப்பானிய தொழிலதிபர் கசுனோரி தகிஷிமா, கடந்த 15 ஆண்டுகளில் ஒவ்வொரு கோடை மற்றும் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளை கண்டு ரசித்துள்ளார்.

ஜப்பானில் ஒலிம்பிக் நடைபெறுமென அறிவிக்கப்பட்டதால் அவருடைய மகிழ்ச்சி இரட்டிப்பானது.

தாய்நாட்டில் ஒலிம்பிக் நடைபெறுவதால் தனது நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களும் அதனைப் பார்க்க வேண்டும் என விரும்பி 48 ஆயிரம் டொலருக்கு 197 அனுமதிச்சீட்டுகளை வாங்கினார். ஒலிம்பிக் போட்டியைக் காண்பதற்கு ஆர்வமாக இருந்த தகிஷிமாவுக்கு கொரோனா எனும் கொடிய தொற்று வில்லனாகியது. ரசிகர்கள் இல்லாமல் போட்டிகள் நடைபெறுமென அறிவிக்கப்பட்டதால் தகிஷிமா அதிர்ச்சியடைந்தார்.






டோக்கியோ ஒலிம்பிக் ஆரம்ப நாளன்று மைதானத்துக்கு வெளியே தனது தொலைபேசியில் ஆரம்ப விழாவைக் கண்ணீருடன் பார்த்தார். மைதானத்திற்கு மேலே பட்டாசு வெடித்ததும், வெளியே இருந்த மக்கள் ஆரவாரம் செய்து கைதட்டினார்கள். அப்போது தகிஷிமா கண்களிலிருந்து கண்ணீர் சொரிந்தது. 2005 ஆம் ஆண்டு ஜப்பானில் நடந்த ஒரு ஃபிகர் - ஸ்கேட்டிங் போட்டியை தகிஷிமா முதன்முதலில் பார்த்தார். அதன் பின்னர் விளையாட்டுப் போட்டிகளைப் பார்ப்பதில் ஆர்வம் உண்டானது.

2006ஆம் ஆண்டு இத்தாலியில் டொரினோ நகரில் நடைபெற்ற ஒலிம்பிக்கை தகிஷிமா முதன்முதலில் பார்த்தார். அங்கு ஜப்பானிய ஸ்கேட்டர் ஷிசுகா அரகாவா, தங்கப் பதக்கம் பெற்றதும் உணர்வுபூர்வமாக வாழ்த்தினார். போட்டியாளர்கள் வெற்றி பெறும்போதும், பதக்கம் அணியப்படும்போதும் எழுந்து நின்று கைதட்டி வாழ்த்துவார்.

டோக்கியோ ஒலிம்பிக்கில் 28 போட்டிகளைப் பார்வையிட தக்ஷிமா திட்டமிட்டிருந்தார். ஒலிம்பிக் ரசிகர் ஒருவர் 128 அமர்வுகளைப் பார்வையிட்ட சாதனையை முறியடித்து, 134 அமர்வுகளைப் பார்த்து புதிய சாதனையை ஏற்படுத்தும் தகிஷிமாவின் திட்டத்துக்கு கொரோனா தடை போட்டது.

பார்வையாளர்களை பாதுகாப்பாக அனுமதிக்க ஒரு வழியைக் கண்டுபிடிக்கத் தவறியதற்காக டோக்கியோ ஒலிம்பிக் அமைப்பாளர்கள் மீதும், அரசாங்கத்தின் மீதும் தான் கோபப்படுவதாக தகிஷிமா கூறினார். ஒலிம்பிக் அனுமதிச்சீட்டுகளுக்காக தகிஷிமா செலவளித்த 48 ஆயிரம் டொலர் அவருக்குத் திரும்ப வழங்கப்படும். ஆனால், அவருக்கு ஏற்பட்ட இழப்பை யாராலும் ஈடு செய்ய முடியாது.

# TOKYO OLIMPIC 2020

| Rank | Team/NOC | 1 | 2 | 3 | Total |
|---|---|---|---|---|---|
| 1 | People's Republic of China | 6 | 1 | 4 | 11 |
| 2 | Japan | 5 | 1 | 0 | 6 |
| 3 | United States of America | 4 | 2 | 4 | 10 |
| 4 | Republic of Korea | 2 | 0 | 3 | 5 |
| 5 | ROC | 1 | 4 | 2 | 7 |
| 6 | Italy | 1 | 1 | 3 | 5 |
| 7 | Australia | 1 | 1 | 1 | 3 |
| 7 | France | 1 | 1 | 1 | 3 |
| 9 | Hungary | 1 | 1 | 0 | 2 |
| 9 | Tunisia | 1 | 1 | 0 | 2 |



நேற்றிரவு 8 மணி வரைக்குமான பதக்கப் பட்டியல்

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7